"யாரேனும் தாகமாயிருந்தால் என்னிடம் வரட்டும்.
என்னிடம் நம்பிக்கை கொள்வோர் பருகட்டும்" யோவா 7: 37

# தாகம்



தேடல் - 06 புரட்டாதி - கார்த்திகை 200[illegible] ஊற்று - 04

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாகம்

அன்பு உள்ளங்களுக்கு,

இந்தத் தாகம் புரட்டாதி, ஐப்பசி, கார்த்திகை மாதங்களுக்கான ஆன்மீக சிந்தனைகளைத் தாங்கி வருகின்றது. இது திருவழிபாட்டு ஆண்டின் இறுதி நூலாகும். அடுத்த நூல் புதிய திருவழிபாட்டு ஆண்டின் முதல் மூன்று மாதங்களின் சிந்தனைகளைத் தாங்கி வரும்.

இறைவாக்கு என்றும் அழியாதது. ஆண்டவர் வாக்கு தவறாதவர். அவரது வாக்கைத் தியானித்து வாழ்ந்து காட்டத் துடிக்கும்போது அவரே எமக்கு தனது வழிகாட்டலையும் இரக்கத்தையும் வெளிப்படுத்துவார். இந்த ஆழ்ந்த ஆன்மீக அனுபவங்கள் எம் ஒவ்வொருவருக்கும் தேவை.

உலகப் போக்குகள் ஒருவிதமாக இருக்க கிறிஸ்தவர் நாம் உலகின் தவறான போக்குகளுக்கு எதிராகப் போராட வேண்டும். இந்த சவால்களின் மத்தியிலும் கிறிஸ்தவர் நாம் நேரிய வாழ்வு வாழ்ந்து ஆண்டவருக்குச் சான்று பகர வேண்டும். இதற்குத் துணையாக திருச்சபையின் படிப்பினைகள் அமைந்துள்ளன. அன்று முதல் இன்றும் இறைவன் தனது வாக்கின் மூலமாக எம்மை வழிநடத்துகின்றார். அவரது அன்பையும் இரக்கத்தையும் மேலும் அறிய விவிலியம் பெரிதும் வழிகாட்டியாக உள்ளது.

எமது வாழ்வின் அனுபவங்களை விவிலிய சிந்தனைகளோடு பார்க்க ஒரு கருவியாக இந்நூல் அமையும் என்பது எமது நம்பிக்கை. இறைவாக்கின் படி நாம் எமது வாழ்வை அமைத்துக்கொள்ளும்போது அவரது ஆசீரை நாம் அனுபவிக்கலாம்.

வாழ்வின் அனுபவங்கள் இறையனுபவங்களாக மாற ஆசித்து முடிக்கிறேன். நன்றி.

**அருட்தந்தை நோயல் இம்மானுவேல்**
**ஆசிரியர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாகம்

புரட்டாதி – கார்த்திகை 2008

தேடல் – 6 ஊற்று – 4

ஆசிரியர்: அருட்தந்தை நோயல் இம்மானுவேல்

வெளியீடு: அருட்தந்தை நோயல் இம்மானுவேல்

அட்டைப்படம்: சகோதரர் அமில ரவிந்த

விலை: 50/–

பதிப்பகம்: **Teleprints, Kandy**

உங்கள் தொடர்புகளுக்கு:

**Rev. Fr. Noel Emmanuel,**
**"Thagam"**
**National Seminary,**
**Ampitiya 20160**
**Phone: 081-2219586 / 0602822160**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 01 – திங்கள் – புரட்டாதி 2008

*1கொரி 2: 1–5   திபா 119: 97–102   லூக் 4: 16–30*

### மனநிலை

உழைப்பின் வேர்கள் கசப்பானவை. ஆனால் அதன் கனி இனிப்பானது.

இயேசு தன் பணிவாழ்வில் பல தடைகளை எதிர்கொண்டார். தன் பணி தொடக்கத்திலேயே தன் ஊராரிடமிருந்தே தடைகளை எதிர்கொண்டார் என்பதற்கு சிறந்த உதாரணமாக அமைகின்றது இன்றைய நற்செய்தி.

மக்கள் பொதுவாக தொடக்கத்தில் அவரையும் அவரது போதனை களையும் வரவேற்பர். பின் அவரோடு பல காரணங்களுக்காகத் தர்க்கம் செய்வர். இறுதியில் அவரை நிராகரிப்பர். இறைபணிக்கென்று அனுப்பப்பட்ட வர்களின் வாழ்வில் இது நிஜம் என்பதை நாம் விவிலியத்தில் பல இடங்களில் காணலாம்.

### திருவாசிப்பு

எசாயாவின் சுருளேட்டில் இயேசு தனது வாழ்வையே முன்குறித்தார். அன்று மெசியாவைப்பற்றி எசாயா குறிப்பிட்டது இன்று நிறைவேறுகின்றது. இங்கு இயேசு அபிஷேகம் செய்யப்பட்டவராகவும் (காண். 1சாமு 10, விப 29: 29) மெசியாவாகவும் காட்டப்படுகின்றார். அவரது பணி மக்களுக்கானது. வாழ்வில் நலிந்தவர்களுக்கானது. இறையாட்சிப் பணிக்காக மெய் வருத்தம் பாராது, பசி நோக்காது, கண் துஞ்சாது, கடினப்பட்டு உழைக்க வந்தவரின் வாழ்வின், போதனையின் தொடக்கமே இது. ஆனால் மக்கள் இவரைப் புரிந்து கொண்டார்களா என்பதே கேள்வி.

### மக்களின் மனநிலை

மெசியாவை எதிர்பார்த்திருந்த காலமது. மக்கள் இயேசுவில் மெசியா வையும் இறைமகனையும் பார்த்திருக்க வேண்டும். மாறாக, இவர்கள் அவரை சூசையின் மகன் என்றும், தம் ஊர்மகன், மண்ணின் மைந்தன் என்றுமே பார்த்தனர். இதனால் இயேசுவில் மெசியாவை இவர்களால் காண முடியவில்லை. இறைவனின் ஆசீரைப் பெற்றுக்கொள்ள இவர்களது மனநி லையே இவர்களுக்குத் தடையாகியது எனலாம்.

அடுத்தவரில் நாம் இயேசுவைக் காண முயலவேண்டும். அப்போது எனது அணுகுமுறையும் மாறுபட்டதாக இருக்கும். அவர்களோடு நாம் வைக்கும் உறவும் நல்லதாக அமையும். நாம் இயேசுக்களாவோம், அடுத்தவரில் இயேசுவைக் காண்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 02 – செவ்வாய் – புரட்டாதி 2008

1கொரி 2: 10–16 திபா 145: 8–14 லூக் 4: 31–37

### இயேசுவின் அதிகாரம்

பெருந்தன்மையுள்ள எந்தப் பணியும் அடக்கத்துடனும், இயல்பாகவும், ஆடம்பரம் இன்றியும் செய்யப்படும்

இயேசுவின் சொந்த ஊராகிய நாசரேத்தூரில் அவரை மக்கள் நிராகரித்தபோது அவர் கப்பர்நாகுமிற்குச் சென்றார். அங்கு பேய் பிடித்த ஒருவரை இயேசு குணமாக்கினார். அலகையோ அவரை நாசரேத்து இயேசுவே என்று கூறி அவரது அதிகாரத்திற்குப் பயந்து நின்றது.

**பேய்களின் செயல்பாடு**

சாத்தான் மனித சமூகத்தையே அழிக்கவும் இறைவனிடமிருந்து மனிதனைப் பிரிக்கவும் வந்தவன் என்பதை தொடக்க நூலிலிருந்தே நாம் காண்கின்றோம். திய சக்தியாகவும், தீமையின் ஊற்றாகவும் சாத்தான் விளங்குகின்றான். சாத்தானின் படைகளே பேய், பசாசுகள் எனும் தீய சக்திகள். இயேசுவையே சோதிக்கத் துணிந்தது அலகை. யூதாசு, பேதுரு போன்றோரும் பல சந்தர்ப்பங்களில் பல வடிவங்களில் அலகையால் சோதிக்கப்பட்டு ஆட்டிப்படைக்கப்பட்டனர் (காண். யோவா 13: 27, லூக் 22: 31, திப 5: 3). இறையரசு உருவாவதைத் தடுத்து அதை அழிப்பதில் குறியாக இருந்தது அலகை (காண். மத் 13: 29). தொடக்கத்திலிருந்தே அலகை பாவம் செய்து வருகின்றது (1யோவா 3: 8). எனவே இயேசுவின் வருகை, செயல்பாடுகள் அலகைக்கு பெரும் சவாலாகவும் தலையிடியாகவும் இருந்திருக்கும்.

**இயேசுவின் அதிகாரம்**

இயேசுவின் பணியோ பாவமே உருவான அலகையை முற்றுமுழுதாக அழித்து உலகை அலகையின் பிடியிலிருந்து மீட்பதாகும். இதன் ஒரு கட்டமாகவே இயேசு கப்பர்நாகுமில் பேயை ஓட்டினார். வாயை மூடு, இவரை விட்டு வெளியே போ என்பது இயேசுவின் அதிகாரமிக்க சூடான வார்த்தைகள். அடங்கியது பேய். சாத்தானின் கட்டுக்களும், அதிகாரமும் அழிந்து போவதற்கு இது தொடக்கமே. மக்களும் இயேசுவின் அதிகாரத்தையும் போதனைகளில் இருந்த சக்தியையும் பார்த்து மலைத்துப்போனார்கள். அவரை நம்பி சீடராக மாறியோர் பலர். இயேசுவின் அதிகாரத்திற்கு மேலான அதிகாரம் எங்கும், எவரிலும் இல்லை. அவரில் நம்பிக்கை வைத்து அலகையை வெல்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 03 – புதன் – புரட்டாதி 2008

*1கொரி 3: 1–9 திபா 33: 12–15, 20–21 லூக் 4: 38–44*

### இயேசுவின் பணி

ஒரு சமுதாயம் ஒளிவெள்ளத்தில் மிதக்கவேண்டுமென்றால் ஒவ்வொருவரும் மற்றவருக்கு ஒளியாகத் திகழவேண்டும்.

இயேசுவின் பணிவாழ்வின் சுருக்கத்தை லூக்கா நற்செய்தியாளர் நான்காம் அதிகாரத்தில் தந்துள்ளார். அவரது சோதனை, அவர் தன்னை வெளிப்படுத்தியது, மக்களால் அவருக்கு வந்த எதிர்ப்புகள், அவரது போதனை, குணமாக்கல்கள், அதிகாரம் போன்ற முக்கிய விடயங்கள் இந்த அதிகாரத்தில் தரப்பட்டுள்ளன. இன்றைய நற்செய்தியில் இயேசுவின் பணியையும் சீமோனின் மாமியாரின் பணியையும் ஆராய்வோம்.

**குணமாக்கலும் போதனையும்**

இயேசு சீமோனின் மாமியாரின் காய்ச்சலைக் கடிந்துகொண்டார். இயேசு இறைமகன், மெசியா. அவருக்கு சக்தி, அதிகாரம் இருந்தது. அவற்றை அவர் இறைவனின் விருப்பப்படி, மக்களின் நன்மைக்காகப் பயன்படுத்தினார் என்பதே உண்மை. தனது புகழ்ச்சிக்காகவோ, பெயருக்காகவோ தனது சக்தியை அவர் தவறாகப் பயன்படுத்தவில்லை. பணிக்கென வந்தவர் இயேசு. இறைவனின் விருப்பத்தை அறிந்து அதற்கேற்ப தன்னை மாற்றிக்கொண்டார் (காண். பிலி 2: 6–11). தன்னிடமுள்ள சக்தியைப் பயன்படுத்தி அலகையை தனது கட்டுப்பாட்டில் வைத்திருந்தார். ஊர்கள் தோறும் சென்று போதித்தார். தனக்கு வெற்றி கிடைத்த இடங்களில் மட்டும் அவர் இருந்துவிடாமல் எங்கும் சென்று போதிக்க வேண்டுமென்று அவர் செயல்பட்டார்.

**சீமோனின் மாமியார்**

இயேசுவின் சக்தி, அழைப்போடு சீமோனின் மாமியாரை ஒப்பிட முடியாது. ஆயினும் அவர் தன்னால் முடிந்த பணியைச் செய்தார் என்பதே உண்மை. கடுங்காய்ச்சலால் துன்புற்ற அவர் இயேசுவின் குணமாக்கலைப் பெற்றதும் அங்கிருந்தோருக்குப் பணிவிடை செய்தார். அவரது வயது, உடல்நிலை போன்றவற்றின் அடிப்படையில் அவர் தன்னால் முடிந்த பணியைச் செய்தார். இறைபணி ஒருசிலருக்கு மட்டும் சொந்தமானதல்ல. அனைவருக்கும் உண்டு. ஆனால் சிலர் சிறப்புப் பணிக்காக அழைக்கப்படுகின்றனர். எனவே இறையரசு வளர நாம் எமது நிலையில் இருந்துகொண்டு எந்தளவுக்கு எமது பங்களிப்பைச் செய்கிறோம்? சிந்தித்து செயல்படுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 04 – வியாழன் – புரட்டாதி 2008

*1கொரி 3: 18–23 திபா 24: 1–6 லூக் 5: 1–11*

## முதல் சீடர்கள்

எதைச் செய்யவேண்டும், எப்படிச் செய்ய வேண்டும், எங்கே செய்ய வேண்டும் என்று அறிந்திருப்பவனே நல்ல தலைவன்.

மக்கள் இயேசுவின் போதனையைக் கேட்டது, பெரும் எண்ணிக்கையில் மீன்கள் இயேசுவின் வார்த்தையில் பிடிபட்டது, பேதுருவின் எதிர்காலப் பணி போன்றவற்றை எடுத்துக் காட்டுகின்றது இன்றைய நற்செய்தி.

### இறைவார்த்தை

இயேசுவின் ஆரம்பப் பணியைப் பார்த்த மக்கள் அவரில் நம்பிக்கை வைத்து வாழ்வு பெறவென அவரைப் பின்தொடர்ந்தனர். இறைவழி காட்டலுக்காக ஏங்கித் தவித்தவர்கள் இவர்கள். பெருந்தொகையானோர் அவரது வார்த்தைகளில் வாழ்வு பெற்றனர். இந்த வாழ்வைத் தொடர்ந்து மக்களுக்குக் கொடுக்க இயேசு சிலரை அழைத்தார். அவரிலும் அவரது பணியிலும் இவர்கள் நம்பிக்கை வைத்து செயல்பட வேண்டுமானால் முக்கிய அடையாளம் தேவையாக இருந்தது.

### பேதுருவின் செயல்பாடு

இயேசு சூசையிடமிருந்து தச்சுத்தொழிலையே கற்றிருந்தார் என்பது நாம் அறிந்த உண்மை. பேதுருவோ மீன்பிடித் தொழிலில் பலவருட அனுபவம் பெற்றவர். எனவே இயேசுவைவிட பேதுருவுக்கு மீன்பிடிப்பதில் நுணுக்கங்கள் அதிகம் தெரியும். ஆயினும் இயேசுவின் வார்த்தையில் அவர் நம்பிக்கை வைத்தார். திரளான மக்கள் அவரது வார்த்தையில் நிலைத்திருந்தபோது போதுருவால் இயேசுவின் அழைப்பை நிராகரிக்க முடியவில்லை. நம்பி செயல்பட்டார். வாழ்வு கண்டார். இது முதல் சீடர்களுக்கான முதல் பயிற்சி எனலாம். ஆழத்திற்குத் தள்ளிக்கொண்டுபோய், மீன் பிடிக்க உங்கள் வலைகளைப் போடுங்கள் என்பது இயேசுவின் அழைப்பு. அழைப்பை ஏற்று செயல்பட்டதால் ஆழமான விசுவாச அனுபவத்தைப் பெற்ற பேதுருவின் பதிலோ, ஆண்டவரே, நான் பாவி, நீர் என்னை விட்டுப் போய்விடும் என்பதாகும். பேதுருவின் அந்தப் பணிவே அவரது எதிர்கால பணிக்கான அத்திவாரமாகியது.

இயேசு அனுபவம் பெற நாமும் எமது விசுவாசத்தை வெளிப் படுத்துவோம். அவரது வழிகாட்டலைப் பெறுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 05 – வெள்ளி – புரட்டாதி 2008

1கொரி 4: 1–5 திபா 37: 3–6, 27–28, 39–40 லூக் 5: 33–39

### நோன்பு

நோன்பு பற்றிய தர்க்கம் இயேசுவுக்கும் பரிசேயர்களுக்கும் இடையே எழுகின்றது. இயேசுவின் சீடர்கள் உண்பதும் குடிப்பதுமாக இருக்கின்றனர் என்பது அவர்களது வாதம். இயேசுவோ இரு உவமைகளின் மூலமாக விளக்கம் கொடுக்கின்றார்.

**திருமண நாட்கள்**

தன் சீடர்கள் தன்னோடு இருக்கும் காலத்தை இயேசு மணமகன் மணவிருந்தினர்களோடு இருக்கும் காலத்திற்கு ஒப்பிட்டார். யூதர்கள் பரிகார நாட்களில் மட்டும் நோன்பிருக்க வேண்டும் (காண். லேவி 16: 30). பரிசேயர்களோ அதிக நாட்கள் நோன்பிருந்தனர் (காண். லூக் 18: 12). ஆனால் திருமண நாட்களில் இரு வீட்டாரும் நோன்பிருப்பதிலிருந்து விலக்குப் பெற்றிருந்தனர். ஏனெனில் திருமண நாட்கள் என்பது மகிழ்ச்சிக்குரிய நாட்களாகும். அது மகிழ்ச்சிக்குரிய விழா.

அதேபோல பழைய ஏற்பாட்டில் இறைவனை மணவாளனாகவும் இஸ்ரயேலை மணவாட்டியாகவும் பழைய ஏற்பாட்டில் ஒப்பிடப்படுவதை நாம் வாசிக்கலாம் (காண். ஓசே 2: 19). புதிய ஏற்பாட்டில் கிறிஸ்துவையும் கிறிஸ்தவர்களையும் அதே நிலைக்கு ஒப்பிடுகின்றார் தூய பவுல் (காண். 1கொரி 11: 2). கிறிஸ்துவோடு இருக்கும் அனைவரும் எப்போது மகிழ்ச்சியாக இருக்க வேண்டுமென்பதும் பவுலின் அறிவுரை (காண். 1தெச 5: 16).

**பழையன, புதியன**

இயேசுவோ இரண்டு உவமைகளின் மூலமாக பழையதற்கும் புதியதற்கும் உள்ள வித்தியாசங்களைக் காட்டுகின்றார். நாட்கள் செல்லச் செல்ல புதிய திராட்சை மதுவின் அடர்த்தியும் பெருகிக்கொண்டே போகும். இதனால் பழைய தோற்பை வெடித்துவிடும். இயேசுவின் காலத்தோடு புதிய சிந்தனை, பணி, சட்டங்கள் உருவாகின்றன என்பதை யூதர்கள், விசேடமாக யூதத் தலைமை உணர்ந்துகொள்ளும் நிலையில் இருக்கவில்லை. அவர்களுக்கு மோசேயும் அவரது சட்டங்களுமே முதன்மையானதாகத் தெரிந்தது. இயேசு கொண்டுவந்த புதுவாழ்வை இவர்களுள் பலர் பெற்றுக்கொள்ளவில்லை.

இயேசு கொண்டுவந்த புதிய வாழ்வை உணர்ந்து ஏற்றுக்கொள்ள நாமும் எப்போதும் முன்வரவோம். வாழ்வு பெறுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 06 – சனி – புரட்டாதி 2008

1கொரி 4: 6–15 திபா 145: 17–21 லூக் 6: 1–5

### ஓய்வுநாள்

சட்டம் என்பது மீன்வலை. அதில் சிறிய மீன்கள் மாட்டிக்கொள்கின்றன, பெரிய திமிங்கலங்கள் வலையை அறுத்து வெளியேறிவிடுகின்றன.

ஓய்வுநாள் சட்டம் பற்றிய தர்க்கத்தை நாம் நற்செய்தியில் வாசிக்கிறோம். ஓய்வுநாளும் விருத்தசேதனமும் யூதர்களின் வாழ்வில் மிக முக்கிய சட்டங்களாகும். வெளிச்சடங்குகளுக்கு அதிகம் முக்கியத்துவம் கொடுக்காமல் மனிதத் தேவைகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்த இயேசுவை இங்கும் யூதத் தலைமை குறைகூறத் தொடங்கியது.

**ஓய்வு நாள் சட்டங்கள்**

கடவுள் உலகைப் படைத்து ஏழாம் நாள் ஓய்ந்திருந்தார். இதனடிப் படையில் யூதர்களும் ஓய்வுநாளை அனுசரிக்க வேண்டும் எனும் சட்டம் கொண்டுவரப்பட்டது. ஆண்டவரை வணங்குவதிலும், மறைநூலை வாசிப்பதிலும் இந்த நாளை செலவிட்டனர் யூதர்கள் (காண். விப 23: 12, 34: 21 இச 5: 12–15). எனவே இந்த நாளில் செய்யக்கூடியது செய்யக் கூடாதது என்று பட்டியலிட்டுக் கொடுத்தார்கள் சட்ட வல்லுநர்கள். 39 வகை யான செயல்கள் ஓய்வுநாளில் தடைசெய்யப்பட்டிருந்தன. வழிப் போக்கர்கள் ஓய்வு நாளன்று கதிர்களைக் கொய்யலாம். ஆனால் அவற்றைக் கைகளால் கசக்கி உண்ணுவது தடைசெய்யப்பட்டிருந்தது. அது அரிவாளால் கதிர்–களை வெட்டுவதற்குச் சமமாகும் (காண். இச 23: 25). எனவே சீடர்களின் செயல்களைக் கண்டித்தனர் பரிசேயர்கள். சட்டங்களை எந்த சந்தர்ப்பத்திலும் மீறக்கூடாது என்பது பரிசேயர்களின் மனிநிலையாக இருந்ததால் மனிதத் தேவைகளை இவர்களால் புரிந்துகொள்ள முடியவில்லை.

**இயேசுவின் மனநிலை**

ஓய்வுநாளும் மானிடமகனுக்குக் கட்டுப்பட்டதே என்பது இயேசுவி ன் வாதம். மனிதத் தேவையே இயேசுவிற்கு எப்போதும் முன்னுரிமையாக இருந்தது. எனவேதான் இயேசு ஓய்வுநாளென்றும் பார்க்காமல் மக்களின் நோய்களைக் குணமாக்கினார். இங்கும் சீடர்களுக்காக வாதிட்டார். எமக்கும் அடுத்திருப்பவரின் தேவையே முன்னுரிமையாக இருக்க வேண்டும். அடுத்தவரின் தேவையில் கருத்தாயிருந்து அவர்களுக்காக எம்மை அர்ப்பணித்து செயல்படுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொதுக்காலம் 23ம் ஞாயிறு

## 07 – புரட்டாதி 2008

*எசே 33: 7–9 திபா 95: 1–2, 6–9 உரோ 13: 8–10 மத் 18: 15–20*

## அன்பு

அன்புக்கு ஒரு மகத்தான ஆற்றல் இருக்கிறது. பகையையும் துன்பத்தையும் எந்த நிலையிலும் அது பொறுத்துக்கொள்ளும்.

இறை–மனித அன்பு பற்றிய நல்ல பல கருத்துகளை இன்றைய ஞாயிறு வாசகங்கள் எமக்குத் தருகின்றன. எம்மை அன்பு செய்யும் இறைவன் அந்த அன்பு மனிதருக்குள்ளும் பகிரப்பட வேண்டும் என விரும்புகின்றார்.

### எசேக்கியேலின் பணி

யூதாவின் மேலும் அண்டை நாடுகளின் மேலும் தீர்ப்புகளை அறிவிப்பது எசேக்கியேல் இறைவாக்கினரின் தொடக்கப் பணியாக இருந்தது. ஆனால் பகைவர் கைகளில் எருசலேம் வீழ்ந்தபின்பு ஆறுதல், நம்பிக்கை, இறைவனின் மக்களை பழைய நிலைக்குக் கொண்டு வருவது அவரது இறைவாக்குப் பாணியாக மாற்றமடைந்தது.

### காவலாளியாக எசேக்கியேல்

இஸ்ரயேல் மக்களின் காவலாளியாக செயல்பட எசேக்கியேல் இறைவனால் பணிக்கப்பட்டார். மக்கள் தவறிழைக்கும்போது அவர்களை எச்சரிக்க வேண்டியது அவரது பணி, பொறுப்பு. இறைவாக்கைக் கேட்டும் திருந்தாதவர்கள் இறைவனால் தண்டிக்கப்படுவர். திருடர்களிடமிருந்து வீட்டைக் காக்கும் காவலாளிபோல மக்களை தீய வாழ்விலிருந்து காக்க வேண்டியது இறைவாக்கினரின் பொறுப்பு. மக்களின் தவறைச் சுட்டிக்காட்டும்போது அவர்கள் தம்மை நிராகரிப்பர் என்று இறைவாக்கினர் பொறுப்பற்று செயல்பட்டால் அவர்களே அந்த தண்டனையைப் பெறுவர்.

### சகோதர அன்பு

அடுத்திருப்பவரை அன்பு செய்வது இலகு. எம்மை அன்பு செய்பவரை அன்பு செய்வது அதைவிட இயல்பு. ஆனால் எமது பகைவரை எமக்கு எதிராகச் செயல்படுவோரை அன்பு செய்வதென்பது கடினமானது. அதைவிட அவர்களை மன்னிக்கும் பண்போடு வழிநடத்தி நல்வழிப்படுத்துவதென்பது சவால்கள் நிறைந்தது. தவறு செய்த ஒருவரைத் திருத்த எமக்கு இருக்க வேண்டிய மனநிலையைக் காட்டுகின்றார் இயேசு. இங்கு நான்கு நிலைக–



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னைக் காட்டுகின்றார் இயேசு. தவறு செய்தவரை அவமானப்படுத்துவதைவிட எமது அன்பை அவருக்கு வெளிப்படுத்தி திருந்த அழைக்கும்போது அவரில் நல்ல மனமாற்றம் ஏற்பட வாய்ப்புண்டு என்பது உண்மை.

***1. தனித்திருக்கும்போது...***

ஒருவரது குற்றங்களை பகிரங்கப்படுத்தாமல் தனித்து செயல்பட்டு, அவரது குற்றங்களை உணரவைப்பது சிறந்தது. அவரது குற்றங்களை விளம்பரப்படுத்துவதைவிட மன்னித்து ஏற்றுக்கொள்வதே கிறிஸ்தவ பண்பு.

***2. ஒன்றிரண்டு பேரோடு...***

மன்னிக்கும் மனநிலையை வெளிப்படுத்த வேண்டியது எமது கடமை. ஆனால் அவர் மனந்திரும்பாமல் பிடிவாதமாக இருந்தால் ஏனையவர்களின் உதவியை நாடுவது நல்லது. ஆயினும் எமது மனநிலை தூயதாக அமைய வேண்டும். எமது முயற்சிகள் அன்பையும் இரக்கத்தையும் வெளிப்படுத்த வேண்டும். அதுவே உண்மையான மனமாற்றத்திற்கு இட்டுச் செல்லும்.

***3. திருச்சபையிடம்...***

தவறு செய்தவர் மனம்மாறாது பிடிவாதமாக இருந்தால் திருச்சபையிடம் கூறி உரிய முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். இங்கு நேரம், காலம், இடம், சந்தர்ப்பங்கள் போன்றன கருத்திற்கொள்ளப்பட்டால் மனமாற்றத்திற்கு அனுகூலமான வழிகள் ஏற்படும்.

ஆயினும் ஒருவர் திருச்சபைக்கும் செவிசாய்க்காவிடில் அவரை வேற்று இனத்தவர் போலவோ, வரிதண்டுபவர் போலவோ கணிக்கும்படியும் இயேசு குறிப்பிட்டார். இவ்வாறு மனம்மாற மறுக்கும் ஒருவர் சமூகத்திலிருந்து விலக்கி வைக்கப்படும்போது தனது தவறை உணரவும், சமூகத்தில் ஒற்றுமையாக வாழ்வதன் நன்மைகளை புரிந்துகொள்ளவும் அது ஒரு சந்தர்ப்பமாக அமைந்துவிடும்.

### அன்பின் அடிமை

மனம்மாறாததால் சமூகத்திலிருந்து விலக்கி வைக்கப்பட்ட நிலையில் அவர் மனம்மாற விரும்பும்போது நாம் அவரை அன்போடு ஏற்றுக்கொள்ள வேண்டும். இதுவே உண்மைக் கிறிஸ்தவ பண்பு. இதையே தூய பவுல் இன்றைய இரண்டாம் வாசகத்தில் குறிப்பிடுகின்றார். இறை மனித அன்பைக் குறிப்பிடும் அவர் நாம் எதிலும் யாருக்கும் கடன்பட்டிராமல் அன்பின் அடிமைகளாக இருக்க வேண்டும் என்று வலியுறுத்துகின்றார்.

அன்பு செய்வதை நாம் எமது இலக்காகக் கொள்வோம். அதுவே கிறிஸ்தவ வாழ்வு. அந்த அன்பு தூயதாக அமையும்போது இரக்கம், பொறுமை, மன்னிப்பு, சகோதரத்துவம் இலகுவாகிவிடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 08 ~ திங்கள் – புரட்டாதி 2008

மீக் 5: 2–5 திபா 13: 5–6 மத் 1: 1–16, 18–23

## தூய கன்னி மரியாவின் பிறப்பு

எந்தச் சமூகத்தில் பெண்கள் மதிக்கப்படவில்லையோ அந்தச் சமூகம் ஆரோக்கியமாக இருக்க வாய்ப்பே இல்லை.

மீட்புத் திட்டத்தில் மரியாவின் பங்கு மிக முக்கியமானது. தொடக்கத்திலேயே இறைவன் மெசியாவின் வருகையை முன்னறிவித்து மரியாவின் பங்களிப்பையும் குறிப்பிட்டார் (காண். தொநூ 3: 15). அவ்வாக்கிற்கமைய மரியாவிடம் இயேசு பிறந்தார். இயேசுவின் பணி இந்த உலகில் எந்தளவிற்கு முக்கியமானதோ அந்தளவிற்கு மரியாவின் பங்களிப்பும் முக்கியமானதே.

**தலைமுறை அட்டவணை**

மரியாவின் பிறப்பை இன்று திருச்சபை கொண்டாடினாலும் அவரது பிறப்பு பற்றிய விபரங்கள் நற்செய்திகளில் இல்லை. மாறாக மரியாவிடம் பிறந்தவர் இயேசு என்று மத்தேயு நற்செய்தியாளர் குறிப்பிடுகின்றார். யூத சமூகத்திலோ, எந்த சமூகத்திலோ ஒருவரைக் கணிக்க அவரது பரம்பரையைப் பார்ப்பது வழமை. அதேபோல இயேசுவே மெசியா, இறைமகன், எதிர்பார்க்கப் பட்டவர் என்பதை வலியுறுத்த மத்தேயு இயேசுவின் மூதாதையரின் பட்டியலைத் தருகின்றார். மத்தேயு யூதருக்காக தனது நற்செய்தியை எழுதியதால் இயேசு ஆபிரகாமின் மகன், தாவீதின் மகன் என்று காட்ட வேண்டிய தேவை அவருக்கு இருந்தது. இப்பட்டியலில் மரியாவிடம் பிறந்தவரே கிறிஸ்து என்னும் இயேசு என்று குறிப்பிட்டார்.

**மரியாவின் பங்கு**

இயேசு, அவருக்குப்பின் வந்த சீடர்கள், திருத்தூதர்கள் என்று நாம் பட்டியலிட்டு புதிய ஏற்பாட்டு மனிதர்களைப் பற்றி வாசித்தாலும் இயேசு தொடங்கிய மீட்புப் பணியின் மறையுண்மையை தொடக்கத்திலிருந்தே தியானித்து, செயல்பட்டவர் மரியா. தன் பணிவு, தியானம், செபம் போன்ற நற்பண்புகளின் மூலமாக அன்று தன் திருமகனுக்கும் இன்று எமக்கும் மரியா உருதுணையாக இருந்து இன்று எமக்காகப் பரிந்துபேசியும் வருகின்றார். சாந்தம் நிறைந்த தனது வாழ்வால் அவர் பல நன்மைகளைச் செய்துள்ளார். எலிசபெத்திற்குப் பணிசெய்தது, கானா திருமணத்தில் உதவியது, சிலுவை யடியில் தன் மகனுக்கு ஆறுதலாக இருந்தது அவரது சிறப்பான பண்புகளாகும். மரியாவின் வாழ்வு எமக்கு நல்ல உதாரணமாகட்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 09 – செவ்வாய் – புரட்டாதி 2008

1கொரி 6: 1–11 திபா 149: 1–6, 9 லூக் 6: 12–19

### அழைப்பு

நாம் எல்லோரும் இறைவனால் அழைக்கப்படுகின்றோம். ஆனால் அந்த அழைப்பினுள் ஓர் உயர்ந்த அழைப்பு சிலருக்குக் கொடுக்கப்படுகின்றது. அதை இன்றைய நற்செய்தி விளக்குகின்றது.

**அழைப்புகள் பல**

1. ***தலைமை ஏற்க ஒருவர்:*** பேதுரு. இயேசுவிற்குப்பின் திருச்சபையை தலைமையேற்க பேதுரு அழைக்கப்பட்டு பயிற்றுவிக்கப்பட்டார் (காண். மத் 16: 18).

2. ***சிறப்புச் சீடர்கள் மூவர்:*** பேதுரு, யோவான், யாக்கோபு. இவர்கள் சில சில சந்தர்ப்பங்களில் இயேசுவால் அழைத்துச் செல்லப்பட்டு அனுபவம் பெற்றார்கள் (காண். தோற்றம் மாறிய சம்பவம் லூக் 9: 28, கெத்சமனித் தோட்டத்தில் மத் 26: 37).

3. ***பன்னிரு திருத்தூதர்:*** இன்றைய நற்செய்தியில் குறிப்பிடப்படுவதைப் போல இயேசு இரவு முழுவதும் தந்தையோடு செபத்தில் தனித்திருந்து பின் காலையில் திருத்தூதரைத் தெரிவுசெய்தார். இவர்கள் பலதரப்பட்டவர்கள். பல பின்னணிகளிலிருந்து வந்தவர்கள். பல மனநிலைகளோடு இருப்பவர்கள். ஆயினும் தனது மீட்புப் பணியைத் தொடர்ந்தாற்ற இயேசு இவர்களைத் தேர்ந்தெடுத்தார். இவர்களுள் பலர் மீன்பிடித் தொழில் செய்பவர்கள். இவர்களால் இயேசுவின் பணியைத் தொடர்ந்து செய்ய முடியுமா? இவர்களைவிட படித்தவர்கள் சமூகத்தில் இருக்கவில்லையா?

**பணிசெய்யத் தகுதி...**

பழைய ஏற்பாட்டில் இறைவனின் அழைப்பு கிடைத்தபோது, உம் பணி செய்ய நாம் யார் என்று கேட்டவர்கள் பலர். மோசே, எசாயா, எரேமியா போன்றோர் சில உதாரணம். புதிய ஏற்பாட்டில் நான் பாவி என்னைவிட்டுப் போய்விடும் என்று பணிந்தவர் பேதுரு. இவ்வாறு இவர்கள் தங்கள் சிறுமையை உணர்ந்தாலும் அழைப்பில் ஓர் உண்மை உண்டு. அழைப்பவர் இறைவன். செயல்படுத்துபவரும் நிறைவேற்றுபவரும் அவரே. அழைக்கப்படுபவர்கள் வெறும் கருவிகளே. எனவே அவரில் நம்பிக்கை வைத்து அழைப்புக்கேற்ப வாழ்ந்து காட்டினால் அவரே ஏனையவற்றை நிறைவேற்றுவார். எமது அழைப்பும் இத்தகையதே. எம்மில் அல்ல, அவரில் நம்பிக்கை வைத்து செயல்படுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 10 – புதன் – புரட்டாதி 2008

*1கொரி 7: 25–31  திபா 45: 10–11, 13–16  லூக் 6: 20–26*

### போதனை

தரித்திரனுக்குக் கொடுப்பவன் தாழ்ச்சியடையான். தன் கண்களை ஏழைகளுக்கு விலக்குகிறவனுக்கோ அநேக சாபங்கள் வரும்.

இயேசுவின் சமவெளிப்பொழிவே இன்றைய நற்செய்தி. இதைக் குறைவுள்ளவர்கள், நிறைவுள்ளவர்கள் என்று பிரித்து நற்செய்தியாளர் எமக்குத் தருகின்றார். மத்தேயு நற்செய்தியில் இயேசுவின் மலைப்பொழிவை வாசிக்கிறோம். யூதருக்கென்று நற்செய்தியை எழுதிய மத்தேயு அதன் பின்னணியில் செய்தியைக் கொடுக்கிறார். இங்கு லூக்கா யூதச் சூழ்நிலையிலிருந்து விலகி பிற இனத்தவர்க்கு இந்த செய்தியைத் தருகின்றார். இப்போதனை உலக சிந்தனைகளுக்கு முரணானது. செல்வம், செல்வாக்கு, மகிழ்ச்சி, உடல்நலம் போன்றன இறைவனின் ஆசீராக யூத சமூகத்தால் கருதப்பட்ட அக்காலத்தில் இயேசுவின் இந்த போதனைகள் யூதர்களுக்குப் புதிராக இருந்திருக்கும்.

### ஏழைகளே... பேறுபெற்றோர்

அந்நிய நாட்டு அரசர்கள் எருசலேம் மீது படையெடுத்து மக்களை அடிமைப்படுத்தி துன்புறுத்தியபோது மக்கள் தயவின்றி, உதவியின்றி பரிதவித்தனர். இவர்கள் பலவகைகளிலும் தனிமைப்படுத்தப்பட்டனர். இறைவன் ஒருவரே தம்மை மீட்க வல்லவர் எனும் நம்பிக்கையோடு வாழ்ந்துவந்தனர். அதேபோல வாழ்வில் முன்னேற முடியாமல் பல நிலைகளிலும் ஓரங்கட்டப் பட்டவர்கள் சமூகத்தில் இருந்த வண்ணமே உள்ளனர். இவர்களுக்கு பெரும் ஆறுதலாகவும், நம்பிக்கையாகவும் இந்த மலைப்பொழிவு அமைந்திருக்கும்.

### எமக்கும் நல்ல செய்தியே

மக்கள் துன்புற்று, ஒதுக்கப்படும்போதும் தனிமைப்படுத்தப்படும்போதும் இறைவன் தனது பிரசன்னத்தையும் வழிகாட்டலையும் வெளிப்படுத்துகின்றார். துன்பம் என்பது நிலையானதல்ல. இறைவன் எமக்கு துன்பத்தை அனுமதித் தாலும் அவற்றினூடாக எமக்கு ஆழ்ந்த இறையனுபவத்தைத் தருகின்றார் என்பதை நாம் மறக்கக்கூடாது. எமக்கு எல்லாம் இருக்கும்போது நாம் இறைவனையே மறந்துவிடுகின்றோம். ஆனால் துன்பத்தில் நாம் இறைவன் அருகில் செல்கிறோம். அவர் எம்மருகில் இருக்கிறார் என்பதை உணர்கின்றோம். துன்பம் எம்மை இறைவனிடம் இட்டுச்செல்லும் கருவியாகட்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*1கொரி 8: 1–7, 11–13 திபா 139: 1–3, 13–14, 23–24 லூக் 6: 27–38*

## அன்பு, இரக்கம்

அன்புக்கு ஒரு மகத்தான ஆற்றல் உண்டு. பகையையும், துன்பத்தையும் எந்த நிலையிலும் அது பொறுத்துக்கொள்ளும்.

பகைமையை அடுத்தவர் எமக்குத் தர அவற்றை எமக்கும் அடுத்தவர்க்கும் நன்மையாக மாற்றும் வழிகாட்டலை இயேசு நற்செய்தியில் தருகின்றார். சவால் நிறைந்தது ஆனால் முடிந்தது.

### யூதரின் சிந்தனை

கண்ணுக்குக் கண், பல்லுக்குப் பல், பகைக்குப் பகை என்பதே யூதர் தம் வாழ்வில் பெற்றுவந்த சிந்தனை. அவர்கள் வாழ்ந்த சூழ்நிலை, அவர்களது மனநிலை என்பன பழிவாங்கல் போன்ற சிந்தனைகளையே வளர்த்தன. இதனால் அன்பு, சகோதரத்துவம், இரக்கம் போன்ற நற்பண்புகள் நண்பர்களுக்கும் அயலவருக்குமான சொத்தாக இருந்தது.

### இரக்கமே அடிப்படை

ஆனால் இயேசு மக்களுக்கு பெரும் சவால் நிறைந்த சிந்தனையைத் தனது போதனை மூலமாகக் கொடுக்கின்றார். பகைவர், வெறுப்போர், சபிப்போர், இகழ்ந்து பேசுவோர், துன்புறுத்துவோர் அனைவரும் நண்பர்களாகக் கருதப்பட வேண்டும். இவர்கள் அன்பு செய்யப்பட வேண்டும். இரக்கம் காட்டப்பட வேண்டும். இந்த புதுமையான புரட்சியின் மூலமாக அன்பினால் கட்டியெழுப் பப்படும் சமூகத்தை உருவாக்கலாம். எனவேதான் இயேசுவும் உங்கள் தந்தை இரக்கமுள்ளவராய் இருப்பதுபோல நீங்களும் இரக்கம் உள்ளவர்களாய் இருங்கள் என்றார். தந்தையின் இரக்கத்தை நாம் பழைய ஏற்பாட்டில் நிறைவாகப் பார்க்கிறோம். அவரது அளப்பரிய இரக்கமே உலக மீட்புக்காக தன் ஒரே மகனை இந்த உலகிற்கு அனுப்பிவைக்கத் தூண்டியது. நாம் பாவிகள். பெலவீனர்கள். ஆயினும் எமது பாவங்களைப் பாராது எமக்கு வேண்டிய ஆசீரைத் தரும் இறைவனின் இரக்கம் மேலானது. இந்த இரக்கத்தை தினமும் அனுபவிக்கும் நாமும் அடுத்தவர்மேல் இரக்கமுள்ளவராக இருக்க வேண்டும். அடுத்தவர் நிலையைப் புரிந்துகொண்டு, அவர்களை அன்பு செய்து, அவர்களை ஏற்று வாழும்போது சமூகத்தில் நாம் பாரிய மாற்றத்தை ஏற்படுத்தலாம். வாழ்ந்து காட்டுவோம். வாழ்வு பெறுவோம். அடுத்தவர்க்கும் வாழ்வு கொடுப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 12 – வெள்ளி – புரட்டாதி 2008

*1கொரி 9: 16–19, 22–27 திபா 84: 2–5, 11 லூக் 6: 39–42*

### தூய மரியாவின் அதிபுயர் நாமம்

நாம் செய்யும் ஒவ்வொரு நல்ல செயலும் கடவுளை நோக்கி எடுத்து வைக்கும் ஒரு அடியாகும்.

இயேசுவின் போதனைகள் தொடர்கின்றன. அவை சவாலாக அமைந்தாலும் வாழ்வு தருவன என்பதை உணர்ந்து செயல்பட அழைக்கின்றது நற்செய்தி.

**தீர்ப்பிடுதல், கண்டனம் செய்தல்**

தீர்ப்பு வேண்டாம், கண்டனம் வேண்டாம். மாறாக, மன்னிப்போம், கொடுப்போம். அடுத்தவர் எமக்கு எதிராகச் செயல்படும்போது அவர்களைத் தாக்குவது மனித இயல்பு. உடல்ரீதியாகத் தாக்குகின்றோம், அல்லது சூழ்ச்சிகள் செய்து அவர்களுக்குத் தீங்கு விளைவிக்கின்றோம். அதுவும் முடியாதபோது அவர்களுக்கு எதிராகத் தீர்ப்பிடுகின்றோம், அவதூறு பேசுகின்றோம். இது நடைமுறையில் நாம் காணும் தீர்வு. ஆனால் இவ்வாறு செயல்படுவதால் நாம் எதைச் சாதிக்கின்றோம் என்று எம்மையே கேட்டுப்பார்க்க வேண்டும். பகை மேலும் பகையையே உருவாக்கும். அதற்கு முடிவு இல்லை. ஆனால் இறைவன் ஒருவரே மனிதரின் உள்ளத்தை அறிபவர். நாம் பார்ப்பதும் அறிவதும் வெறும் வெளிச் செயல்களே. உள்ளத்தை அறியும் இறைவனால் மட்டுமே ஒருவரைத் தீர்ப்பிட முடியும். எனவே தீர்ப்பிடுவதை இறைவனிடம் விட்டுவிடுவோம். ஒருவரை நாம் தீர்ப்பிடாவிட்டால் அவரைக் கண்டனம் செய்யவும் அவசியம் இருக்காது.

**மன்னியுங்கள், கொடுங்கள்**

மாறாக பகைமையை அன்பாலும் இரக்கத்தாலும் அணுகும்போது அங்கு அமைதி பிறக்கும் என்பது உண்மை. இயேசுவும் தன் போதனையை வாழ்ந்துகாட்டினார். சிலுவையில் தொங்கியபோது தன் பகைவருக்காக மன்றாடினார். எனவே எந்த நிலையிலும் நாம் அடுத்தவரை மன்னிக்க பழகிக்கொள்வோம். அதுவே நல்ல உறவை வளர்க்கும். உலகில் நாம் பகைமையின் மனிதர்களாக அல்ல, அன்பின் மனிதர்களாக வாழ அழைக்கப் படுகின்றோம். இந்த அழைப்பை உணர்ந்து செயல்பட்டால் அன்பின் சமூகங்கள் உருவாகும். அதுவே கிறிஸ்தவ விசுவாசத்திற்கும் சாட்சியத்திற்கும் இட்டுச் செல்லும். அன்பின் மக்களாக வாழ்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 13 – சனி – புரட்டாதி 2008

1கொரி 10: 14–22 திபா 116: 12–13, 17–18 லூக் 6: 43–49

## நற்பயன்

பிறர் பார்க்காத சந்தர்ப்பங்களில் உனது நடத்தையைக் குறித்து எச்சரிக்கையாயிரு. அது என்றாவது ஒருநாள் இந்த உலகின் வெளிச்சத்துக்கு வந்தே சேரும்.

மரமும் கனியும் பற்றிய உவமையில் எமது நல்ல வாழ்வு பற்றியும் தீய வாழ்வு பற்றியும் சிந்திக்கத் தூண்டுகின்றார் ஆண்டவர்.

### நல்ல வாழ்வு அவசியம்

...என்னை நம்பாவிடினும் என் செயல்களையாவது நம்புங்கள்... (யோவா 10: 38) என்று கூறிய இயேசு தந்தைக்கும் தனக்கும் உள்ள உறவை விளக்கினார். தந்தையிடம் எம்மை அழைக்க வந்த இயேசு தந்தையோடு ஆழமான உறவை கொண்டிருந்தார் என்பதை அவரது வாழ்விலிருந்து காணலாம். இவ்வாறு இயேசு தந்தையிடமிருந்து வந்தவர் என்பதையும் தந்தையின் விருப்பத்தை நிறைவேற்றுவதே அவரது இலக்கு (காண். யோவா 3: 34) என்பதையும் அவரது வாழ்விலிருந்தே அறிந்து கொள்ளலாம்.

நற்செய்தியிலும் இயேசு இந்த சவாலையே எமக்கு முன்வைக்கிறார். கெட்ட மரம் கெட்ட கனி கொடுக்கும், நல்ல மரம் நல்ல கனி கொடுக்கும். திருமுழுக்கின் மூலம் உண்மைக் கிறிஸ்தவர்களாக வாழ அனைவரும் அழைக்கப்படுகின்றோம். அதிலும் உலகில் பணிக்கென அழைக்கப்படுவோர் பலர். இதில் யாரும் நூறு வீதம் தூயவர்களல்ல. ஆயினும் தூயவர்களாக மாற, வாழ அழைக்கப்படுகின்றோம். எமது மனநிலை, முயற்சிகளே முக்கியம். இயேசுவும் தன் பணி தொடங்கி, சீடர்களைத் தெரிவு செய்து அவர்கள் தனது பணியைத் தொடர வேண்டுமென விரும்பினார். இவர்கள் வாழ்வு இறைசித்தத்தின்படி அமைகின்ற வாழ்வாக வேண்டும். இவர்கள் தொடக்கத்தில் இயேசுவின் பணி, நோக்கங்களைப் புரிந்துகொள்ளாவிட்டாலும் தூய ஆவியைப் பெற்றபின் துணிந்து சான்றுபகர்ந்தார்கள்.

### நாம் நல்லவர்களா?

இன்று இயேசுவை ஆழமாக அறிந்துகொள்ள எமக்குப் பல சந்தர்ப் பங்களை நாம் பயன்படுத்தி இயேசுவின் கட்டளைப்படி வாழ முற்படுகின்றோமா? எமது வாழ்வு கிறிஸ்துவின் எண்ணங்களுக்கு ஏற்ப அமையட்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொதுக்காலம் 24ம் ஞாயிறு
## 14 — புரட்டாதி 2008

எண் 21: 4-9 திபா 78: 1-2, 34-38 பிலி 2: 6-11 யோவா 3: 13-17

## திருச்சிலுவையின் மகிமைப் பெருவிழா

இயேசு தொங்கிய திருச்சிலுவை கொண்டுவந்த மகிமை அளப்பரியது. உலக மக்களின் பாவம் போக்க வந்த இயேசு அவமானத்தின் சின்னமாகிய சிலுவையை ஏற்று அதை மகிமையின் சின்னமாகவும் மீட்பின் சின்னமாகவும் மாற்றினார். ஆண்டவரால் முடியாதது எதுவுமில்லை (காண். லூக் 1: 37) என்பது மறுக்கமுடியாத உண்மை. அலகையின் சூழ்ச்சியில் விழுந்த மனி தனை மீட்க அந்த அலகையையே முறியடித்து இயேசு வாழ்வு தந்தார். திருச்சிலுவை யின் மகிமையின் பெருவிழாவை சிறப்பிக்கும் நாம் சிலுவையின் மறையுண்மை களை ஆராய்வோம்.

### இஸ்ரயேலரின் தவறு

எகிப்திலிருந்து விடுதலை பெற்று மோசே வழிகாட்டலில் வாக்க ளிக்கப்பட்ட நாட்டை நோக்கிப் பயணம் செய்த இஸ்ரயேல் மக்கள் பல சந்தர்ப்பங்களில் இறைவனின் வழிகாட்டலையும் சக்தியையும் சந்தேகித்தனர். இதனால் மோசேக்கு எதிராகவும் இறைவனுக்கு எதிராகவும் முணுமுணுத்தனர். பொறுமையிழந்த கடவுள் இந்த மக்களைத் தண்டித்தார். மக்கள் முணுமுணுப் பதற்கு சில பின்னணிகள் இருந்தன.

1. தம் மூதாதையரைப்போல எதிர்ப்பு மனமும், அடங்காக் குணமும் கொண்டவர்கள் இவர்கள் (காண். திபா 78: 8).
2. கடவுளோடு செய்துகொண்ட உடன்படிக்கைகளைக் கடைப்பிடிக்கவில்லை (காண். திபா 78: 10).
3. கடவுள் ஆற்றிய அருஞ்செயல்களை அவர்கள் மறந்தனர் (காண். திபா 78: 11).

கடவுள் இந்த மக்களை நச்சுப் பாம்புகளை ஏவி தண்டித்தார். இந்தப் பாம்புகள் கொடிய துன்பத்தையும் மெதுவான மரணத்தையும் விளைவிக்கும். மக்கள் தமது அவநம்பிக்கையால் தண்டனை பெற்றாலும் இறைவனிடம் வேண்டி தமது பாவங்களுக்குப் பரிகாரம் தேடி வாழ்வு பெற்றனர் என்பதை முதல் வாசகம் தெளிவாகக் காட்டுகின்றது. வெண்கலத்தால் செய்யப்பட்ட பாம்பைப் பார்த்தோர் வாழ்வுபெற்றனர். இது இயேசுவின் சிலுவை மரணத்தை முன்குறித்து நின்றது. பாம்பு அவர்களைக் காக்கவில்லை. மாறாக, அவர்களது நம்பிக்கையே அவர்களை காத்தது என்பதே உண்மை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இன்று திருச்சிலுவை**

கி.பி. 326ல் இயேசு மரித்த திருச்சிலுவை கொன்ஸ்தாந்திநோபிள் அரசனின் தாய் தூய ஹெலேனாவினால் கண்டுபிடிக்கப்பட்டது. பின் பாரசீயரின் படையெடுப்பால் சிலுவையும் கடத்தப்பட்டது. பின் அரசன் ஹெரேக்கிளியஸ் 629ல் மீண்டும் சிலுவையின் பெரும்பகுதியைக் கண்டெடுக்க அது இன்று உரோமையில் வணக்கத்திற்காக வைக்கப்பட்டுள்ளது.

**இயேசுவில் நம்பிக்கை**

பழைய ஏற்பாட்டுப் பின்னணியில் யோவான் நற்செய்தியாளர் கிறிஸ்துவின் பணியைத் தெளிவுபடுத்தி எமக்கு இருக்க வேண்டிய நம்பிக்கையை வலியுறுத்துகின்றார். யூதருக்கு சிலுவை அவமானத்தின் சின்னம். ஆனால் கிறிஸ்தவருக்கோ அதுவே மீட்பின் சின்னம். தம் ஒரே மகன் மீது நம்பிக்கை கொள்ளும் எவரும் அழியாமல் நிலைவாழ்வைப் பெறும்பொருட்டு அந்த மகனையே இவ்வுலகிற்கு அனுப்புமளவிற்குக் கடவுள் உலகின்மேல் அன்பு கூர்ந்தார் (யோவா 3: 15).

உலகின்மீது இறைவனுக்கிருக்கும் அன்பு நிலையானது. தொடக்கத் திலிருந்தே இது தெளிவு (காண். தொநூ 3: 15). அதேபோல சாவை ஏற்கும் அளவிற்கு அதுவும் சிலுவைச் சாவையே ஏற்கும் அளவிற்கு தந்தைக்குக் கீழ்ப்படிந்த இயேசுவின் அன்பும் பெரியது. இயேசுவின் அன்பையும் அவரது கீழ்ப்படிதலையும் தூய பவுல் இரண்டாம் வாசகத்தில் தெளிவாகக் குறிப்பிடு கின்றார். ஆனால் தன்னையே அழித்த இயேசுவின் அன்பை உணர்ந்து வாழ்வுபெற அவரில் எமக்கிருக்கும் அன்பு எவ்வளவு ஆழமானது? எமது அன்பையும், நம்பிக்கையையும் சோதித்துப்பார்க்க மூன்று விடயங்களை நாமும் ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

1. ***எமது மனநிலை***. யூதர்கள் அன்று வாழ்ந்ததுபோல நாமும் கடின மனமுள்ளவர்களாக இறை–மனித உறவுகளை முறிக்கின்றோமா?

2. ***கீழ்ப்படிவு***. இறைவனின் கட்டளைகளை அறிந்து ஏற்று அதன்படி வாழ்ந்து காட்டுகின்றோமா?

3. ***நன்றியுணர்வு***. எமது வாழ்வில் இறைவன் செய்துவரும் நன்மைகளை மறந்து துன்பங்களின்போது அவரில் நம்பிக்கை இழந்து அவரையே தூற்றுகின்றோமா?

இன்று எமது முறைப்பாடுகளும் இந்த மூன்று விடயங்களின் பின்னணியில் அமைந்திருக்கலாம். அவற்றை ஆராந்தால் தீர்வுகள் கிடைக்கும். எனவே இயேசுவில் முழுமையான நம்பிக்கை வைத்து அவர் காட்டும் வழியில் நடந்து வாழ்வு பெறுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 15 - திங்கள் – புரட்டாதி 2008

எபி 5: 7–9 திபா 31: 1–5, 14–15, 19 யோவா 19: 25–27

## தூய வியாகுல அன்னை நினைவு

கடவுள் எல்லா இடத்திலும் இருக்க முடியவில்லை. ஆகவேதான் தாயை உண்டுபண்ணினார்.

இன்றைய நற்செய்தியில் மரியா வியாகுல அன்னையாக சித்தரிக்கப் படுகின்றார். அவர் காட்டிய வழி இன்று எமக்கு வாழ்வு.

**மரியாவின் வாழ்வில்...**

தொடக்கத்தில் அழைப்பு கிடைத்தபோது மரியா குழம்பிப்போனார். ஆனால் இறைவனின் வாக்கில் நம்பிக்கை வைத்த அவர் ஓரளவு தெளிவு பெற்றாலும் ஏனையவற்றை தியானித்துவந்தார். இது அவரது சிறப்பான பண்புகளுள் ஒன்று எனலாம். ஆலயத்தில் குழந்தை இயேசுவைக் காணிக்கையாக ஒப்புக்கொடுத்தபோது சிமியோன் இக்குழந்தை பற்றி சில உண்மைகளை முன்னறிவித்தார். மக்களுள் பலரின் வீழ்ச்சிக்கும் எழுச்சிக்கும் காரணமாக இருக்கும் என்ற சிமியோன் உமது உள்ளத்தையும் ஒரு வாள் ஊடுருவிப்பாயும் என்றும் குறிப்பிட்டார்.

மரியாவின் வாழ்வில் பல சவால்கள். மரியா குழந்தை இயேசுவைப் பெற்றெடுத்தவர். இயேசு இறைமகன், அவருக்கென்று தனித்துவமான பணிவாழ்வு உண்டு எனும் உண்மையை அறிந்திருந்தாலும் அவரது மகன் பணிவாழ்வில் பட்ட துன்பங்களை மரியா தனது துன்பங்களாகவே கருதியிருப்பார். தாயின் உள்ளமது. இயேசுவிற்கு எதிராகப் பலர் அவதூறு பேசுவதை அவர் கேட்டிருக்கலாம். அவருக்கு வந்த எதிர்ப்புகளையும் மரியா அறிந்திருப்பார். இயேசு பிடிபட்டபின் சீடர்கள் ஓடிவிட்டதையும், இயேசுவின் கல்வாரிப்பணத்தையும் அறிந்து, பார்த்து மரியா துடித்திருப்பார்.

சிலுவையடியில் துணிவோடு தன் மகனுக்கு ஆறுதலாக நின்றிருந்தார் மரியா. துணைக்கு யோவானும் நின்றார். தனது துன்பமல்ல, மாறாக, மகனின் துன்பத்தைப் போக்குவதே மரியாவின் நோக்கமாக இருந்திருக்கும்.

**எமது துன்பத்தில் மரியா...**

அன்று தன் மகனின் துன்பத்தில் துணையாக இருந்த மரியா இன்று எமது துன்பத்தில் நிச்சயமாக துணைநின்று எமக்காகப் பரிந்து பேசுவார் அவர். கொடிய துன்பத்தை அனுபவித்த அவர் எமது துன்பங்களையும் புரிந்துகொள்வார். அவரிடம் வேண்டுவோம், ஆறுதல் பெறுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 16 – செவ்வாய் – புரட்டாதி 2008

1கொரி 12: 12–14, 27–31 திபா 100: 1–5 லூக் 7: 11–17

## மறைசாட்சியரான தூய கொர்னேலியு, தூய சிப்ரியான் நினைவு

நயீன் எனும் ஊரில் இயேசு ஒரு விதவையின் மகனை உயிர்ப்பித்தார். இந்த சம்பவத்தின் மூலம் நாம் பெறும் பாடம் என்ன?

**விதவையின் நிலை...**

யூத சமூகத்தில் ஒரு விதவையின் நிலை பரிதாபமானது. இந்த விதவை கணவரை இழந்துவிட்டார். இப்போது தனது ஒரே மகனையும் இழந்து பரிதவித்து நிற்கின்றார். அதாவது வாழ்வின் ஆதாரங்கள் அனைத்தையும் இழந்த நிலையில் திசை தெரியாமல் நின்றார். இதனால் இவர் பிச்சையெடுத்து பிழைக்கவேண்டி வரலாம். உறவினர்கள் இவரை விலக்கியே வைக்கலாம். ஏனெனில் இதுபோன்ற துன்பங்கள் ஒருவர் செய்த பாவங்களுக்காக இறைவனின் தண்டனை என்று எண்ணியது யூத சமூகம். இந்த இழிநிலைக்கு இவர் தள்ளப்பட்டுள்ளார். விடுதலை கொடுப்பார் யாருமில்லை. இவரது நிலையறிந்தவர்கள் இவரைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தவே முயல்வர்.

**இயேசுவின் இரக்கப்பணி**

இறையன்பையும் இரக்கத்தையும் கொண்டுவந்தவர் இயேசு. அவர் விதவையின் நிலையறிந்து செயல்பட்டார். பாடையைத் தொட்டு, இளைஞனுக்கு உயிர்கொடுத்து, இளைஞனை அவன் தாயிடம் ஒப்படைத்தார்.

இந்த சம்பவம் அங்கிருந்த அனைவருக்கும் பெரும் அதிர்ச்சியைக் கொடுத்தது. இறைவனின் பிரசன்னம் தம்மத்தியில் இருப்பதையும் உணரச் செய்தது. இறைவனின் இரக்கம் இவ்வாறு இயேசுவில் வெளிப்பட்டது.

**பாவத்திலிருந்து உயிர்ப்பு**

இந்த சம்பவம் எமக்கு மேலும் ஓர் உண்மையை வெளிப்படுத்துகின்றது. உலகம் முழுவதும் பாவத்தில் மரணித்துள்ளது. இறந்த நிலையில் நாம் எமது மீட்புக்காக செயல்பட முடியாது. ஆனால் இரக்கம் மிகுந்த இறைவன் எமக்கு இயேசுவின் உயிர்ப்பில் பங்கெடுக்க சந்தர்ப்பம் தருகின்றார். இன்று எமது நேரிய வாழ்வின் மூலம் நிலைவாழ்விற்கான செல்வங்களை சேர்த்துக்கொள்வோம். அப்போது நாம் இறந்தாலும் எமது நற்செயல்கள் எம்மை மீட்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 17 – புதன் – புரட்டாதி 2008

*1கொரி 12: 31–13: 13 திபா 33: 2–5, 12, 22 லூக் 7: 31–35*

### உண்மை

நன்மைக்கும் தீமைக்கும் ஊற்று நம் உள்ளத்தில் இருக்கிறது. அங்கே குடிகொள்ளும் எண்ணங்களே புறச்செயல்களாக உருவம் எடுக்கின்றன.

குழந்தைகள் கபடற்றவர்கள். அவர்களைப்போல நாம் மாறவேண்டும். குழந்தை உள்ளம் கொண்டவர்களாக வாழவேண்டும். சிறுபிள்ளைத்தனத்தோடு வாழக்கூடாது என்பதை நற்செய்தி தெளிவுபடுத்துகின்றது. ஏனெனில் யூதத் தலைமை அடம்பிடிக்கும் குழந்தைகள் போல செயல்படுகின்றது என்பது இயேசுவின் வாதம்.

**குறைகூறும் மனநிலை**

உண்மைக்குப் புறம்பான வாழ்வு வாழ்வோர் தமக்குச் சவாலாக யாரும் வந்தால் எதிர்ப்பர் அல்லது தப்பியோட முயல்வர். இயேசுவின் போதனைகள், வாழ்வு, செயல்களை எதிர்த்தும் கண்டித்தும் வந்தனர் யூதத் தலைவர்கள். அதேபோல இயேசுவிற்கு முன்னோடியாக வந்த திருமுழுக்கு யோவானை யும் இவர்கள் குறைகூறினார்கள். ஏனெனில் உண்மைக்குப் புறம்பான வாழ்வு, வெளிவேடம் இவர்களுள் இருந்தது. எனவே யோவானும் இயேசுவும் இவர்களை நேரடியாகவும் துணிவோடும் கண்டித்துள்ளனர். இவர்கள் தம்மைப் பாதுகாக்க மேற்கொண்ட சில முயற்சிகளைப் பார்ப்போம்.

***நேரடியாக எதிர்த்தனர்:*** பிறவியிலேயே பார்வையற்றவரை இயேசு குணமாக்கியதும் யூதத் தலைவர்கள் குணமாகியவரையும், இயேசுவையும் இவர்கள் பல கேள்விகள் கேட்டு மடக்கப்பார்த்தனர் (காண். யோவா 9). கோவிலில் வியாபாரிகளை விரட்டினார் இயேசு (காண். யோவா 2: 13–22). இங்கும் இவர்கள் இயேசுவோடு வாதத்தில் இறங்கினார்கள். இவ்வாறு பல சந்தர்ப்பங்களில் யூதத் தலைவர்கள் இயேசுவை எதிர்த்தனர். தமது வெளிவேட வாழ்வை வெளிச்சத்திற்குக் கொண்டுவரும் யாரையும் (காண். மத் 23) இவர்கள் எதிர்த்து அல்லது தீர்த்துக்கட்டினார்கள்.

**எம்வாழ்வில்...**

இன்று நாமும் எமது பாவங்களை மறைக்க அல்லது வெளிவேட வாழ்வை மறைக்க அடுத்தவரையோ சமூக, திருச்சபைத் தலைவர்களையோ குறைகூறுகின்றோமா? அடுத்தவர்க்கு எம்மை மறைத்தாலும் கடவுளிடமிருந்து தப்பமுடியாது. உண்மை வாழ்வு வாழ்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 18 – வியாழன் – புரட்டாதி 2008

*1கொரி 15: 1–11 திபா 118: 1–2, 16–17, 28 லூக் 7: 36–50*

### மன்னிப்பு

பாவிகளை மன்னித்து ஏற்று புதுவாழ்வு தருபவர் இயேசு. நீதிமான்களையல்ல பாவிகளையே அழைக்க வந்தேன் என்றார். இவ்வாறு தனது வாழ்வு, போதனை, செயல்கள் மூலமாக மனம்மாறும் பாவிகளுக்கு புதுவாழ்வு கொடுத்தார். பாவியான ஒரு பெண் தனது பாவங்களுக்கு மன்னிப்பு பெற்ற சம்பவத்தையும் யூதர்களின் மனநிலையையும் நற்செய்தி தருகின்றது.

**யூதப் பெண்கள்...**

ஒரு பெண் எவ்வாறு யூத சமூகத்தில் இருக்க வேண்டும் என்பது அனைவரும் அறிந்த விடயம். யூதப் பெண் ஒருவர் பொது இடங்களில் வருவதையோ தலைமுடியை அவிழ்த்துவிடுவதையோ யூத சமூகம் தடை செய்திருந்தது. அவர் தலையை மூடியவாறே வெளியே வரவேண்டும்.

இவ்வாறு சமூகம் வரையறுத்திருந்தாலும் பாவியான இந்தப்பெண்ணோ துணிந்து இயேசுவிடம் வந்து அவரது கால்களை தன் கண்ணீரால் நனைத்து, கூந்தலால் துடைத்து, முத்தமிட்டு, கால்களுக்கு நறமணத் தைலம் பூசினார். இவரது இந்த செயல் பலரையும் ஆச்சரியப்பட வைத்தது. பாவிகளை யூதர்கள் ஏற்றுக்கொள்வதில்லை. சமூகத்திலிருந்து ஒதுக்கியே வைத்தனர். மனம்மாற மனிதாபிமான முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதில்லை. இந்தப் பெண் பாவியென்பதை இயேசு அறிந்திருந்தால் அவள் இவ்வாறு செயல்பட அனுமதிக்கலாமா என்பது யூதத் தலைமையின் கேள்வியாக இருந்தது.

இயேசுவோ அவர்களது எண்ணங்களை அறிந்து அவர்களது தவறை மையமாக வைத்தே அவர்களுக்குப் பதில்சொன்னார்.

**பாவிகள் மட்டில் அன்பு**

பாவிகளை மீட்க வந்த இயேசுவின் அன்புமிகு செயல் இது. இயேசு இந்தப் பாவிப் பெண்ணுக்கு நிபந்தனைகள் விதிக்கவில்லை. அவள் தனது பாவப்பொறுத்தலை நிறைவேற்ற விட்டுவிட்டார். பெண்ணின் கண்ணீர் அவரது பாவத்தின் கனத்தையும் மன்னிப்புக்கான வேண்டுதலையும் எடுத்துக்காட்டியது. கடவுள் எம்மையும் அன்பு செய்து மன்னிக்கிறார். ஆனால் பாவங்களை ஏற்று மன்னிப்புக் கேட்கவேண்டியது எமது வேலை. என்னுள் பாவமில்லை என்று கூறிக்கொண்டு ஒருவர் இருந்துவிட்டால் மன்னிப்பை சுவைக்க முடியாது. மனம்மாறுவோம், அவரில் புதுவாழ்வு பெறுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 19 – வெள்ளி – புரட்டாதி 2008

*1கொரி 15: 12–20   திபா 17: 1, 6–7, 8, 15   லூக் 8: 1–3*

### பணி

இயேசுவிற்கு அவரது பணியில் பல பெண்கள் துணையாக இருந்ததை லூக்கா நற்செய்தியாளர் காட்டுகின்றார். இறைபணிக்கு தம்மை அர்ப்பணிக்க அனைவருக்கும் அழைப்பு உண்டு.

**பெண்களின் பங்கு**

பெண்கள் ஒரு பெரியவரையோ, ஆசிரியரையோ தலைவராகக் கொண்டு அவருக்கு சீடராக இருந்து பணிசெய்வது யூத சமூகத்தில் நடைமுறையில் இல்லாத ஒன்று. பெண்களின் சுதந்திரம் அந்த சமூகத்தில் கட்டுப்படுத்தப் பட்டிருந்தது. ஆயினும் இயேசுவில் வாழ்வு பெற்ற பல பெண்கள் அவரது மீட்புப் பணியில் அவருக்குப் பக்கபலமாக இருந்துவந்துள்ளனர். நற்செய்தியில் பல பெண்கள் தமது உடைமைகளைக் கொண்டு அவருக்கு உதவினார்கள் என்று வாசிக்கிறோம். இவர்கள் சீடர்களாகத் தெரிவுசெய்யப்பட்டு பணிக்கென்று அனுப்பப்படவில்லை. திருத்தூதர்களாகவும் தெரிவுசெய்யப்படவில்லை. மாறாக இயேசுவின் பின்சென்று தம்மால் முடிந்த உதவிகளை இறைபணிக்கென்று செய்தார்கள். இயேசுவின் பின்பு திருத்தூதர்களுக்கும் இவர்கள் உதவியாக இருந்துள்ளனர் (காண். உரோ 16: 1–3, 6–12, 1கொரி 16–19). இயேசுவின் மரணத்தின்போதும் இவர்கள் அவருக்கு ஆறுதலாகப் பின்சென்றனர் (காண். லூக் 23: 49–55, 24: 1–11).

புதிய ஏற்பாட்டில் பெண்கள் பலர் இயேசுவின் நன்மைகளையும் குணமாக்கல்களையும் பெற்றிருந்தனர். விபசாரத்தில் பிடிபட்ட பெண், கானானேயப் பெண், பெரும்பாடுள்ள பெண், நயீன் ஊர்க் கைம்பெண், மார்த்தா, மரியா, சீமோனின் மாமியார் போன்ற பல பெண்கள் இதில் அடங்குவர். இவர்கள் பாரிய அளவில் பணிசெய்ய யூத சமூகம் அனுமதிக்கவில்லை. ஆனால் இவர்கள் அமைதியான முறையில் பணிவோடு பல நன்மைகள் செய்தனர். இவர்கள் புரட்சிப் பெண்கள்.

**இன்று எமது பங்கு**

பதவி, அந்தஸ்து இருந்தால்தான் பணிசெய்வேன் என்ற மனநிலையோடு இருக்கும் எமக்கு புதிய ஏற்பாட்டுப் பெண்கள் பெரும் உதாரணமே. அவர்களைப் போல பணிவோடு நாமும் திருச்சபையில் பணிசெய்ய முன்வருவோம். பார்வையாளர்களாக அல்ல பங்காளிகளாவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 20 – சனி – புரட்டாதி 2008

1கொரி 15: 35–37, 42–49 திபா 56: 9, 10–13 லூக் 8: 4–15

### இறைவாக்கு

இயேசு பல ஆன்மீக உண்மைகளை உவமைகள் வாயிலாக மக்களுக்கு விளக்கியுள்ளார். அதைக் கேட்போர் உவமை முன்வைக்கும் உண்மையை தமக்குள் கண்டுணர்ந்து அதற்கேற்ப தம் வாழ்வை அமைத்துக் கொள்ள வேண்டும். விதைப்பவர் உவமையே இன்றைய நற்செய்தி. கேட்டுக் கேட்டுப் பழகிப்போன உவமையிது என்றாலும் இந்த உவமை தரும் பாடங்கள் பல. இறைவார்த்தையை நாம் பல நிலைகளில் இருந்து பெற்றாலும் அவை எமது உள்ளங்களை மாற்ற நாம் இடமளிக்கின்றோமா என்று தொடர்ச்சியாகக் கேட்கத் தூண்டுகின்றது நற்செய்தி.

**இறைவாக்கு**

இறைவன் தனது விருப்பத்திற்கேற்ப தனது திட்டங்களை நிறைவேற்று கின்றார். எம்மை அவர் கட்டாயப்படுத்தி நல்லவர்களாக வாழ வைப்பவர் அல்ல. எனவே வார்த்தையைக் கேட்கும் நாம் அதை வாழ்வாக்க எமக்கு சுதந்திரம் உண்டு. இன்று இறைவாக்கு எமக்கு பல வழிகளில் வருகின்றது. திருப்புகழ்மாலை (காலைச் செபம்), திருப்பலியில் வாசகங்கள், மறையுரை, திருவிவிலிய வாசிப்பு, திருச்செபமாலை, செபக்கூட்டங்கள், தியானங்கள், ஞானஒடுக்கம், அருட்சாதனக் கொண்டாட்டம், அடக்கச் சடங்கு போன்ற பல சந்தர்ப்பங்களில் நாம் இறைவாக்கைக் கேட்கிறோம். அவை வழியோரம், பாறைநிலம், முட்புதர், நல்லநிலம் என்று எமது உள்ளங்களில் விதைக்கப் பட்டாலும் பதில் கூறி செயல்படுவது எமது கடமை.

**பலன்கொடுப்போம்**

இறைவார்த்தை எமது உள்ளங்களில் விதைக்கப்பட்டு நூறு மடங்காக பலன்கொடுக்க உள்ளிருந்தும், வெளியிருந்தும் தடைகள் வரத்தான் செய்யும். எமது சுயநல வாழ்வு உள்ளிருந்து வரக்கூடிய தடையாகவும், உலகம் காட்டும் கவர்ச்சிமிக்க வாழ்வு வெளியேயிருந்து வரக்கூடிய தடையாகவும் உள்ளது. ஆயினும் தடைகளையும் தாண்டி நூறு மடங்கு பலன் கொடுக்க வேண்டியது எமது கடமை, அழைப்பு. இதற்கு நாளாந்த விவிலிய வாசிப்பு அவசியம். இறைவாக்கை அறிந்து, உணர்ந்து, அர்ப்பணிக்க எமக்கு திறந்த மனமும் வேண்டும். இறைவாக்கு வாழ்வின் பாதைக்கு விளக்கு என்பதை அறிந்து ஏற்று வாழ்வு பெறுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொதுக்காலம் 25ம் ஞாயிறு

## 21 – புரட்டாதி 2008

*எசா 55: 6–9   திபா 145: 2–3, 8–9, 17–18   பிலி 1: 20–24, 27   மத் 20: 1–16*

### இறைசித்தம்

இறைவனின் எண்ணங்களோடு மனிதனின் எண்ணங்களை ஒப்பிட முடியாது. ஏனெனில் இறைவன் படைத்தவர், மனிதன் படைக்கப்பட்டவன். இறைவன் எல்லாம் வல்லவர், மனிதன் வரையறைக்குட்பட்டவன். மனிதனுக்குத் தெரிந்த விடயங்கள் பல. ஆனால் மறையுண்மைகளாக இருப்பன அதைவிட அதிகமானது. தனது குறைந்தளது அறிவைக்கொண்டு தன்னால் அனைத்தையும் தெரிந்துகொள்ள முடியும் என்று மனிதன் நினைத்தாலும் இறைவனோடு அவன் ஒருபோதும் போட்டியிட முடியாது என்பதே உண்மை. இந்த உண்மைகளை இன்றைய ஞாயிறு வாசகங்கள் விளக்குகின்றன.

**எசாயாவின் ஆறுதல் மொழிகள்**

எசாயா நூல் 40 முதல் 55 வரையிலான அதிகாரங்கள் மக்களுக்கு ஆறுதலைத் தரும் பகுதியாக அமைந்துள்ளன. தமது பாவங்களால் தண்டிக்கப் பட்ட இஸ்ரயேல் மக்கள் அடிமைகளாக பாபிலோனியாவில் வாழ்ந்தனர். இவர்களுக்கு பெரும் ஆறுதலாக அமைகின்றது இன்றைய வாசகம். ஆண்டவர் அண்மையில் உள்ளார் என்பதே இந்த மக்களுக்கு பெரும் ஆறுதல். ஆயினும் இறைவனின் அந்த வருகையை, அன்பை உணர்ந்து மக்கள் ஆண்டவரைத் தேடவேண்டும் என்பதை வலியுறுத்துகின்றார் எசாயா. மக்களோ தமது எண்ணங்கள் போக்கின்படியே வாழ்ந்து வந்தனர். இறைவன் அண்மையில் வந்தாலும் மக்களோ தமது பாவங்களால் தடைகளை ஏற்படுத்தி அவரை அடைவதில் தாமதம் காட்டினார்கள். அலட்சியப் போக்கோடு இருந்தார்கள். இறைவனின் திட்டங்களையும் எண்ணங்களையும் தம்மால் அறிந்துகொள்ள முடியும் என யூத மக்கள் தவறாகப் புரிந்து வைத்திருந்தனர். இதனால் தமது திட்டத்திற்குள் இறைவனைப் புகுத்தப்பார்த்தனர். ஆனால் இறைவனின் திட்டத்திற்குள் தம்மை சேர்த்துக்கொள்ளப் பார்க்கவில்லை. இதுவே இவர்கள் செய்த தவறு.

எனவேதான் உங்கள் எண்ணங்கள் இறைவனின் எண்ணங்கள் அல்ல என்று குறிப்பிட்ட எசாயா மனிதரின் எண்ணங்கள் வழிமுறைகளைவிட இறைவனின் எண்ணங்களும் வழிமுறைகளும் மிக உயர்ந்திருக்கின்றன என்றார். இது யூதர்களுக்குப் பெரும் சவாலாக இருந்தாலும் அதுவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையாகும். உணர்ந்து செயல்பட இவர்கள் அழைக்கப்பட்டனர்.

**இறைவனின் பேரருள்**

திராட்சைத் தோட்ட வேலையாளர்கள் உவமையின் மூலமாக இயேசு தந்தையின் இரக்கத்தைக் காட்ட விளைகிறார். தோட்டத்தில் வேலைசெய்ய பலருக்கு வேறுபட்ட நேரங்களில் அழைப்பு கொடுக்கப்பட்டது. காலை 9 மணி, மதியம் 12 மணி, மாலை 3 மணி, மாலை 5 மணியென்று பலதரப்பட்ட நேரங்களில் வேலை கொடுக்கப்பட்டாலும் காலையில் வேலை செய்யத் தொடங்கியவர்கள் மாலையில் அழைக்கப்பட்டவர்களைவிட தமக்கு அதிக ஊதியம் கொடுக்கப்படும் என்று எண்ணி ஏமாந்தார்கள், முணுமுணுத்தார்கள், முறைப்பட்டார்கள். உலகக் கணிப்பின்படி பார்த்தால் இவர்களது முறைப்பாடு சரியானதாகப்படும். ஆனால் உவமையின் மூலம் இறைவனின் அன்பையும் அருளையும் இயேசு காட்ட விளைகின்றார். இறையாட்சிக்குள் நுழைய அனைவருக்கும் அழைப்பு உண்டு. ஆனால் யார் வருவார், எப்போது வருவார் என்று தீர்மானிப்பது மனிதரது வேலையல்ல. இது இறைவனின் அருளால் தரப்படுவது. இறைவனின் அன்பு, இரக்கம் மனித சிந்தனைகளைவிட மேலானது. அனைவரும் மீட்படைய வேண்டும் என விரும்புகிறவர் கடவுள். அவரது முடிவுகளைக் குறைகூற எமக்கென்ன தகுதியுண்டு?

**உலக நடைமுறையில்...**

அன்றும் இன்றும் மக்கள் இறைவனின் பாதையில் அழைக்கப்படும்போது அந்த அழைப்பு கடவுளின் ஆசீராகவே வருகின்றது. அழைக்கப்பட்ட கிறிஸ்தவர்கள் பலதரப்பட்ட நிலையில் வாழ்கின்றனர். குடும்ப வாழ்வு, குருத்துவம், துறவறம், தனித்துவ வாழ்வு என்று பல நிலைகளிலும் ஒருவர் இருந்தாலும் தமது அழைப்புக்கேற்ப வாழ, தம்மை அர்ப்பணிக்க முன்வர வேண்டும். ஆனால் தமது அழைப்பு பெரிது, தமது பணி பெரிது, தமது பதவி பெரிது என்று இருந்துவிட்டு இறைவனின் விருப்பத்தை நிறைவேற்றாதவர்கள் நிலை முணுமுணுத்த இந்த வேலையாட்களைப் போலாகிவிடும்.

**வாழ்ந்து காட்ட அழைப்பு**

தூய பவுல் இரண்டாம் வாசகத்தில் இனி வாழ்வது நானல்ல, என்னில் வாழ்பவர் கிறிஸ்துவே என்று தனது கிறிஸ்து அனுபவத்தைக் குறிப்பிடுகின்றார். அனைவரும் மீட்படைய வேண்டும் எனும் எண்ணம் எமக்கும் இருக்க வேண்டும். அதேவேளை நாம் மறு கிறிஸ்துக்களாக வாழ்ந்து காட்டி அடுத்தவரையும் கிறிஸ்துவிடம் அழைத்துவர வேண்டும். இந்த அழைப்பை, பணியை நிறைவேற்றி அவரது ஆசீருக்காக காத்திருப்போம். அன்புள்ள ஆண்டவர் அனைவரையும் காக்க வேண்டும் என்று ஆசிப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 22 – திங்கள் – புரட்டாதி 2008

நீமொ 3: 27–35 திபா 15: 2–5 லூக் 8: 16–18

## உலகின் ஒளி

விளக்கு உவமையின் மூலமாக நாம் உலகிற்கு ஒளியாக விளங்க வேண்டுமென அழைக்கிறார் இயேசு நற்செய்தியில். ஒளியாக இருந்த அவர் அந்த ஒளியை நாமும் எமது வாழ்வில் பிரதிபலிக்க வேண்டுமென விரும்புகின்றார்.

### இயேசுவே ஒளி

உவமையில் விளக்கின் பயன்பாட்டை வாசிக்கிறோம். விளக்கை ஏற்றி மரக்காலின்கீழ் வைக்காமல் விளக்குத் தண்டின்மீது வைப்பர். ஏனெனில் அதன் நோக்கம் அடுத்தவர்க்கு ஒளி கொடுக்க வேண்டும் என்பதாகும். உலகின் ஒளி நானே என்றார் இயேசு. அவர் தனது வாழ்வின் மூலமாக அன்று அவர் வாழ்ந்த சமூகத்திற்கும் இன்று உலகிற்கும் ஒளியாகத் திகழ்கின்றார். அவரே உண்மையாகவும் விளங்கினார். எனவே இயேசுவின் வாழ்வு, போதனை, மரணம் உலகிற்கு ஒளியைக் கொடுத்தது. அவர் குன்றின்மீது வைக்கப்பட்ட தீபமாக இருந்தார்.

### நாம் அவரது ஒளி

உண்மையின் ஆண்டவர் என் வாழ்வில் ஒளியாக வரும்போது அந்த உண்மையின் ஒளி எனது வாழ்வில் ஒளிரச் செய்வது எனது கடமையாகும். இவ்வாறு நான் உண்மையை வாழ்ந்து காட்டும்போது அடுத்தவருக்கு நான் ஆசீராக அமைந்துவிடுகின்றேன். கிறிஸ்துவிற்குச் சான்று பகர்வதென்பது இரகசியமானதாக இருக்கக்கூடாது. மாறாக, அது பகிரங்கமாக அமைய வேண்டும். கிறிஸ்துவிடமிருந்து நாம் பெறும் நன்மைத்தனங்களை எம்மோடு வைத்துக்கொள்ளாது அவற்றை அடுத்தரோடு பகிர்ந்துவாழப் பழகிக் கொள்ள வேண்டும். அப்போது கிறிஸ்தவ வாழ்வின் நிறைவை நாம் அனுபவிக்கலாம்.

இதற்கு சந்தர்ப்பங்களை நாம் நாடிச் செல்ல வேண்டும். பணிசெய்வதற்கு நேரம், காலம் என்று இல்லை. சந்தர்ப்பங்கள் அமையும்போது நாம் எம்மை எமது இரக்கச் செயல்களின் மூலமாக அர்ப்பணிக்க வேண்டும். அப்போது எமது நல்ல எண்ணங்கள், வாழ்வின் மூலமாக அடுத்தவர் இறைவனின் அன்பை சுவைத்து அவரைப் புகழ்வார்கள். அதுவே முழுமை. அதுவே நிறை அமைதியைத் தரக்கூடியது. எனவே கிறிஸ்து தரும் வாழ்வை எமதாக்கி அடுத்தவரை வாழ்விப்பதில் கருத்தாயிருப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 23 – செவ்வாய் – புரட்டாதி 2008

நீமொ 21: 1-6, 10-13 திபா 119: 1, 27, 30, 34, 35, 44 லூக் 8: 19-21

### உறவு

இயேசு இந்த உலகில் மானிடமகனாகப் பிறந்து வாழ்ந்தாலும் உலகம் காட்டும் உறவையும் கடந்து இறைத்தந்தையோடு இருக்க வேண்டிய உறவுக்கு எம்மை அழைக்கிறார். அவரது தாயும் சகோதரர்களும் அவரைத் தேடி வந்த சம்பவத்தை லூக்கா நற்செய்தியில் நாம் வாசிக்கின்றோம்.

**உலக பார்வையில் உறவு...**

இயேசுவின் தாயும் அவரது சகோதரரும் ஏன் இயேசுவைத் தேடி வந்தார்கள்? இயேசுவின் வல்ல செயல்களைப் பற்றிக் கேள்விப்பட்டு அவற்றை தாங்களும் பார்க்க வேண்டுமென விரும்பி வந்திருக்கலாம். அல்லது என்னதான் நடக்கிறது என்று அறிய வந்திருக்கலாம். இந்தத் தேடலில் இயற்கை உறவு முன்னுரிமை பெற்றிருக்கலாம். அவர் எனது மகன், எமது உறவினர் என்று உரிமைகோர இவர்கள் முனைந்திருக்கலாம். ஆயினும் மரியாவிற்கு இயேசுவின் பணி, அவர் வந்ததன் நோக்கம் தெரிந்திருக்கும். இவர்கள் எதற்காக வந்தார்கள் என்று ஆராய்வதைவிட இயேசுவின் அகலப் பார்வையும் அவரது பதிலுமே முக்கியமானது.

**ஆன்மீகப் பார்வையில் உறவு...**

மரியாவும் இயேசுவின் உறவினர்களும் அவரை உரிமை பாராட்டினாலும் இயேசு தனது வருகை, பணி பற்றித் தெளிவோடு இருந்தார். இறைவாக்கைக் கேட்டு அதன்படி நடப்பவரே அவரது தாயும், சகோதர சகோதரிகளும் ஆவர் என்று கூடியிருந்த மக்களுக்கு அவர் பதில் கூறினார். இயேசு தன் தாயையும் சகோதரரையும் அவமதிக்கவில்லை. மாறாக, அவர்களைப் போற்றுகின்றார். மரியா தொடக்கமுதல் இறைவனின் வாக்கிற்கு அமைய வாழ்ந்து வந்தவர். அது இங்கு இயேசுவால் உறுதிசெய்யப்படுகின்றது. ஆயினும் மரியாவைப் போல இறைவனின் வாக்கின்படி வாழ்ந்தால் நாமும் அவரது தாயாகவோ, சகோதரராகவோ, சகோதரியாகவோ, நண்பர்களாகவோ மாற முடியும் என்பதே மகிழ்ச்சி நிறைந்த உண்மை.

இன்று இயேசுவிற்கு நான் தாய், தந்தை, சகோதரன், சகோதரி, நண்பன், நண்பி என்று என்னால் உறுதியாகக் கூறமுடியுமா? முடியுமானால் எனது ஆன்மீக வாழ்வு வளமுள்ளதாக அமைந்துள்ளது எனலாம். எம்மையே ஆராய்ந்து பார்த்து இறைவாக்கின்படி வாழ முன்வருவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 24 – புதன் – புரட்டாதி 2008

*நீமொ 30: 5–9 திபா 119: 29, 72, 89, 101, 104, 163 லூக் 9: 1–6*

### அனுப்பப்படுதல்

திருத்தூதர்கள் பணிக்கென இயேசுவால் அனுப்பப்படுகின்றனர். அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட கட்டளைகள், வரங்கள், நிபந்தனைகளை இன்றைய நற்செய்தியில் வாசிக்கிறோம்.

**தலைமைத்துவம்**

இயேசு திருத்தூதர்களை வல்லமையால் நிரப்பினார் (9: 1), திருத்தூதர்கள் செய்ய வேண்டிய சில முக்கிய நெறிமுறைகளைக் கொடுத்தார் (9: 3, 4), கடினமான நேரங்களில் எவ்வாறு செயல்பட வேண்டுமெனவும் அறிவுறுத்தினார் (9: 5), அவர்கள் தமது பணி பற்றிய அறிக்கை சமர்ப்பிக்கவும் பயிற்றுவித்தார் (9: 10). இவ்வாறு இயேசு தொடங்கிய பணியை தொடர்ந்தாற்ற இவர்கள் பணிக்கென அனுப்பப்பட்டனர்.

இயேசு இறையாட்சியை தனது போதனை மூலமும் வல்ல செயல்கள் மூலமும் அறிவித்தார். அவர் போதனையோடு மட்டும் நின்றிருந்தால் மக்கள் இறையாட்சியை வெறும் ஆன்மீக நிலையில் மட்டும் பார்த்திருப்பர். அவர் போதனை இல்லாமல் வல்ல செயல்களோடு மட்டும் நின்றிருந்தால் மக்கள் கிறிஸ்துவின் பணியில் ஆன்மீகத்தைப் பார்த்திருக்க மாட்டார்கள். மக்களோ ஆன்மீகத்தைவிட பொருளாதாரக் கொடைகளையே அதிகம் எதிர்பார்த்தார்கள்.

**சீடர்கள் பயணத்தின்போது...**

பயணத்தின்போது சீடர்கள் எவ்வாறு செயல்பட வேண்டும் என்று இயேசு அறிவுறுத்தினார். குறைந்த பொருட்களோடு இவர்கள் செல்ல வேண்டும். போதிப்பதே இவர்களது முதன்மைப் பணி. இது தரும் உண்மைகள்:

1. செல்வச் செழிப்பைத் தருவதற்கு மெசியா வரவில்லை என்பதை இது உணர்த்தியது.
2. தமது சக்தியில் இல்லாமல் இறைவனின் சக்தியிலும் வழிகாட்டலிலும் சீடர்கள் தங்கியிருக்கச் செய்தது.
3. மக்களும் இவர்களோடு இணையவும், உதவவும், இறைவாக்கைக் கேட்கவும் இந்த நிலை உதவும். இந்த முறை நிலையான ஒன்றாக இல்லாவிட்டாலும் சீடர்களுக்கு ஓர் அனுபவமாகவே இருந்தது.

நாமும் இறைவாக்குப் பணிக்கு அழைக்கப்படுகின்றோம். எமது நிலையில் இருந்து, எம்மைத் தாழ்த்தி பணிசெய்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 25 – வியாழன் – புரட்டாதி 2008

சஉ 1: 2–11 திபா 90: 3–6, 12–14, 17 லூக் 9: 7–9

### இயேசு

இயேசு யார் எனும் கேள்வி மக்கள் மத்தியில் இருந்தது. அவரது சக்தியைப் பல செயல்கள் மூலமாகப் பார்த்தாலும் அவர் யார் என்பதை இவர்களால் புரிந்துகொள்ள முடியவில்லை. திருத்தூதர்களும் எங்கும் சென்று போதித்தனர். மக்களோடு சேர்ந்து ஏரோது மன்னனும் குழம்பினான் என்பதை நற்செய்தி தருகின்றது.

**மக்களின் குழப்பம்**

இயேசு மெசியா என்றும் இறைமகன் என்றும் உணர்ந்து, அவரில் நம்பிக்கை வைத்து வாழ்வு பெறுவதற்குப் பதிலாக மக்கள் அவரைப் பலவா–றாக வர்ணித்தார்கள். திருமுழுக்கு யோவான், எலியா, இறைவாக்கினர்களுள் ஒருவர் என்று பல கணிப்புகள் இருந்தன. எலியா குதிரையோடும் தேரோடும் சுழற்காற்றில் விண்ணகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டார் (காண். 2அர 2: 1–11). எனவே இயேசு யார் என்று ஆராய்வதில் இவர்கள் நேரத்தையும் சக்தியையும் செலவிட்டதால் இயேசுவிலிருந்து நன்மைகளைப் பெறமுடியா–மலும் போயிருக்கலாம். பேதுரு ஒரு கட்டத்தில் சரியான பதிலைக் கொடுத்தார் (லூக் 9: 20).

**ஏரோதுவின் குழப்பம்**

இயேசு உயிருடன் எழுப்பப்பட்ட யோவான் என்ற கதை பரவ யோவானைக் கொன்ற குறுநில மன்னன் ஏரோது குழம்பினான். தனது கட்டளைப்படி யோவான் கொல்லப்பட்டார். துண்டாடப்பட்ட அவரது தலையை ஏரோது பார்த்துமுள்ளான். எனவே தன்னால் கொலை செய்யப்பட்ட யோவான் மீண்டும் உயிருடன் வந்தால் தனக்கும் தொல்லைகள் வரலாம் என்று ஏரோது குழம்பியிருக்கலாம். இவ்வாறு மக்களும் ஏரோதும் இயேசுவை மெசியாவாகப் பார்த்து நன்மைகள் அடைவதற்குப் பதிலாக அவர் யார் என்று கணக்குப் பார்ப்பதில் நேரத்தை செலவழித்தனர்.

இன்று எமது நிலையும் சில சந்தர்ப்பங்களில் இப்படித்தான் உள்ளது. சிலர் இயேசுவை இறைவனென்றும் மனிதனென்றும் ஏற்றுக்கொள்ளத் தயங்குவர். அவருக்கு மாற்று விளக்கங்கள் கொடுக்க சிலர் முயல்வர். எவ்வாறாக இருந்தாலும் இயேசு எனக்கு யார் என்பதே எனது கவலையாக இருக்க வேண்டும். பதில் காண வேண்டியதும் நானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 26 ~ வெள்ளி – புரட்டாதி 2008

சஉ 3: 1–11 திபா 144: 1–4 லூக் 9: 18–22

## வேதசாட்சிகளான தூய கோஸ்மாஸ், தமியான்

மக்கள் இயேசுவைப்பற்றி பல கணிப்புகள் வைத்திருந்தாலும் நீங்கள் நான் யார் என்று சொல்கிறீர்கள் என்பது சீடர்களிடம் இயேசு கேட்ட கேள்வி. நற்செய்தி தரும் இந்த கேள்விக்கு எமது பதில் என்ன?

### இரண்டு கேள்விகள்

*1. நான் யாரென்று மக்கள்...*

இயேசு இரண்டு கேள்விகள் கேட்டார். நான் யாரென்று மக்கள் கூறுகிறார்கள்? இந்தக் கேள்விக்கு பலவித பதில்களை சீடர்கள் கொடுக்கலாம். ஏனெனில் இது மறைமுகமான கேள்வி. தாம் கேள்விப்பட்டதை சொன்னால் மட்டும் போதும். இப்பதிலுக்கு யாரும் பொறுப்பேற்கத் தேவையில்லை. மக்களின் கணிப்பு பலவிதமாக இருக்கலாம். ஏனெனில் இயேசுவைப் பற்றி அவர்கள் அதிகம் அறிய வாய்ப்புகள் இருக்கவில்லை.

*2. நீங்கள் என்னை யாரென்று...*

நீங்கள் நான் யார் என சொல்கிறீர்கள்? இது இயேசு கேட்ட இரண்டாவது கேள்வி. இக்கேள்வி நேரடியானது. பொறுப்போடு பதில்கூற வேண்டும். சீடர்களோடு மக்களை ஒப்பிட முடியாது. ஏனெனில் சீடர்கள் இயேசுவோடு பல நாட்கள் அல்லது பல மாதங்கள் வாழ்ந்தவர்கள். இயேசுவின் போதனைகளைக் கேட்டும், புதுமைகளைப் பார்த்தும், அவரது வழிகாட்டலைப் பெற்றும் இருந்தனர். மொத்தமாக இயேசுவோடு இவர்கள் வாழ்ந்து வந்துள்ளனர். இந்த இயேசு அனுபவத்தின் பின்னணியில் இவர்களுக்கு இயேசு யார்?

### யாருக்கும் சொல்ல வேண்டாம்

மெசியா அனைத்தையும் கைப்பற்றி நிலையான ஆட்சியை நிறுவும் ஒருவராகவே வருவார் என்பது அனைவருக்கும் இருந்த நம்பிக்கை. இயேசு பாடுகள் பட்டு சிலுவை மரணம் ஏற்க வேண்டும். இதை சீடர்களுக்குச் சொன்னாலே குழம்பிப்போய்விடுவார்கள் என்பதை இயேசு அறிந்திருந்தார். அவரது உயிர்ப்பிற்குப் பின்பு சீடர்கள் தனது பணியை முழுமையாக உணர்ந்து கொள்வார்கள் என்பதும் அவருக்குத் தெரியும். இயேசு அனுபவம் இன்று எனக்கும் அவசியம். நம்பிக்கையோடு செயல்படுவேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 27 – சனி – புரட்டாதி 2008

*சஉ 11: 9–12: 8 திபா 90: 3–6, 12–14, 17 லூக் 9: 43–45*

## தூய வின்சன்ட் தே பவுல் நினைவு

இயேசு தனது பாடுகள், மரணம் பற்றி இரண்டாம் தடவையாக முன்னறிவிக்கின்றார். சீடர்கள் இயேசுவை எவ்வாறு புரிந்துகொண்டார்கள், செய்தியின் பின்விளைவுகள் என்ன?

### இயேசுவின் முன்னறிவிப்பு

இயேசு தனது பாடுகள், மரணம் பற்றி அறிவிப்பதற்கு முன்பாக தன் சீடர்களை ஆயத்தம் செய்தார். அனைத்து பயிற்சி, முன்னறிவிப்புகள், ஆயத்தங்களின் பின்பும் இயேசு பிடிபட்டபோது அவரது சீடர்கள் அவரை விட்டு ஓடிச்சென்றதை நாமறிவோம். இதுபோன்ற சூழ்நிலைகளை எதிர்பார்த்த இயேசு இவர்களை சிறிது சிறிதாக ஆயத்தம் செய்தார். இயேசு மூன்று முறைகள் தன் கடைசி நாட்களைப் பற்றி முன்னறிவித்ததாக நற்செய்தியாளர்கள் தெரிவிக்கின்றனர். ஒவ்வொரு தடவைக்கு முன்பும் நம்பிக்கை தரக்கூடிய சம்பவங்களோ, அல்லது சீடர்கள் இயேசுவைப்பற்றி அறிக்கையிடக்கூடிய சம்பவங்களோ தரப்படுகின்றன. நீங்கள் என்னை யார் என்று சொல்கிறீர்கள் என்ற இயேசுவின் கேள்வி அவர்களை ஆழமாக சிந்திக்கச் செய்திருக்கும். ஏனெனில் அது அவர்களது உறுதிப்பாட்டிலிருந்தும் நம்பிக்கையிலிருந்தும் வெளிப்பட வேண்டும். இவ்வாறு இயேசு சீடர்களை போதியளவு ஆயத்தம் செய்தார்.

### சீடர்களின் மனநிலை

இயேசு மெசியா, இறைமகன் என்று சீடர்கள் அறிந்து ஏற்றுக்கொண்டாலும் மக்களைப் போல சீடர்களும் மெசியா அனைத்தையும் தனது ஆட்சிக்குள் கொண்டுவந்து நிறைவாக்குவார் என்று எதிர்பார்த்தனர். இந்த எதிர்பார்ப்பு சீடர்களின் கண்களை மறைத்தது. இதனால் இயேசுவின் வெற்றி அவரது மரணத்தின் மூலம் வரும் என்பதையும் அவர் தேடுவது ஆன்மீக மீட்பையும் விடுதலையையுமே என்பதையும் சீடர்கள் புரிந்துகொள்ள முடியவில்லை. தன் மரணத்தின் மூலம் மரணம் எனும் தண்டனையை வெல்லுதல் என்பது இயேசுவின் இலக்காக இருந்தது.

இயேசுவின் வாழ்வு, பணி, மரணம், உயிர்ப்பு அனைத்தையும் சிறப்பான முறையில் அறிந்துகொள்ள நாம் இன்று பாக்கியம் பெற்றுள்ளோம். அவரே எமது வாழ்வாகட்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொதுக்காலம் 26ம் ஞாயிறு
## 28 – புரட்டாதி 2008

எசே 18: 25–28 திபா 25: 4–9 பிலி 2: 1–11 மத் 21: 28–32

## இறைநீதி

இறைவன் நீதியுள்ளவர். அனைவரும் மீட்படைய வேண்டுமென்றே விரும்புகிறார். ஆனால் மனிதர் நாம் எமது குறுகிய சிந்தனையில் எமது வழியில் இறைவனைக் கொண்டுவரப் பார்க்கின்றோம் எனும் சிந்தனையை இன்றைய ஞாயிறு வாசகங்கள் தருகின்றன. இறைநீதியை நாம் ஒருபோது குறைகூற முடியாது. ஏனெனில் அவரே அனைத்து உள்ளங்களையும் அறிபவர். அவர் இரக்கம் உள்ளவர். அவர் அனைவர் மீதும் நன்மைகளைப் பொழிபவர். வாசகங்களுக்குள் செல்வோம்.

### அனைவருக்கும் வாழ்வு

இந்த உலகில் நீதிமான்கள், அநீதர்கள் என்று இருவகையானோர் உள்ளனர். ஆனால் இறைவனின் பார்வையில் அனைவரும் அவரது பிள்ளைகளே. அனைவருக்கும் மீட்பு உண்டு. அனைவருக்கும் வாழ்வு உண்டு. நீதிமான்கள் சமூகத்தில் இருக்க அதே சமூகத்தில் தீயவரும் இருப்பது இயல்பு. தீயவர்கள் தண்டிக்கப்பட வேண்டும், அழியவேண்டும் என்று மனித சமூகம் சிந்தித்தாலும் இறைவனின் சிந்தனைகள் வேறாக இருக்கின்றது. தீயவர்கள் மனம்மாறும்போது இறைவனின் இரக்கம், புதுவாழ்வு எப்போதும் அவர்களுக்கு உண்டு என்பது நல்ல செய்தியே.

### நீதிமான்கள் நிலை

நீதிமான்கள் யார்? கடவுளின் நீதி நியமங்களை அறிந்து அதன்படி வாழ்பவர்கள். இறைவனோடும் அடுத்தவரோடும் தன்னோடும் ஒருவர் வைக்கும் நேரிய உறவையே நீதி சுட்டிக்காட்டுகின்றது. நீதி நிறைந்த வாழ்வை ஒருவர் வாழும்போது அதுவே அவருக்கு நிறைவாழ்வளிக்கும்.

அதேவேளை நீதிநெறிகளை அறிந்தவர்கள் நெறிதவறி வாழும்போது அவர்களுக்குத் தண்டனை நிச்சயம் என்பதையும் எசேக்கியேல் தன் நூலில் குறிப்பிடுகின்றார். பிறர் உறவில் பல முரண்பாடுகளை இவர்கள் ஏற்படுத்துவதன் மூலமாக இவர்களது அநீத வாழ்வு வெளிப்படுகின்றது. நேர்மையற்ற வாழ்வு, அடுத்தவரை ஒடுக்கி அடிமைப்படுத்தி வாழ்தல் போன்றன தீய வாழ்வின் அடையாளங்கள். அவர்களது அநீதியிலேயே அவர்கள் மடிவர் (18: 26). தமது அழிவை அவர்களே தேடிக்கொள்கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஆம், இல்லை...**

இரு புதல்வர்கள் உவமை மூலமாக இயேசு எமக்கும் ஓர் செய்தியைத் தருகின்றார். இறைவனின் அழைப்பு எமக்கு எப்போதும் இருந்தாலும் அந்த அழைப்புக்கு உரிய முறையில் உரிய நேரத்தில் பதில் சொல்ல வேண்டியது எமது கடமை. தோட்டத்திற்குச் சென்று வேலை செய் என்று தந்தை கூறிய போது இல்லை என்று பதில் சொன்னாலும் பின் சென்றான். அதேபோல அடுத்த மகன் ஆம் என்று பதில் சொன்னாலும் செல்லவில்லை. இருவரின் பேச்சிலும் செயலிலும் முரண்பாடுகளை நாம் காண்கிறோம். எமது நடைமுறை வாழ்விலும் இறைவனோடு நாம் வைத்துள்ள உறவிலும் உவமையில் வரும் சம்பவம் அடிக்கடி நடைபெறலாம். இறைவனின் அழைப்பை ஏற்கிறோம். ஆனால் அதற்கு முரணாக வாழ்கிறோம். அல்லது அழைப்பை தட்டிக் கழிக்கிறோம். ஆனால் பின் அதற்கேற்ப வாழ்கிறோம். எமது வாழ்வில் இந்த முரண்பாடுகள் தொடர்ந்த வண்ணமே இருக்கின்றன. அதற்குக் காரணம் என்ன? இயேசுவின் வாழ்விலிருந்து பாடம் கற்றுக்கொள்வோம்.

**இயேசுவின் ஆம்**

தந்தையின் பணியை செய்து முடிப்பதே எனது உணவு என்று கூறியவர் இயேசு (காண். யோவா 4: 34). நாம் ஒன்றாய் இருப்பதுபோல அவர்களும் ஒன்றாய் இருக்குமாறு நீர்... (யோவா 17: 22) என்று இயேசு தந்தையை நோக்கி செபித்தார். என் அன்பார்ந்த மகன்... பூரிப்படைகிறேன் (லூக் 3: 29), என்றும் நான் தேர்ந்துகொண்டவர் இவரே. இவருக்குச் செவிசாயுங்கள் (லூக் 9: 35) என்றும் இறைத்தந்தையே இயேசுவைப் பற்றிச் சான்றுபகர்ந்தார். எனவே தொடக்கத்தில் ஆம் என்று கூறிய இயேசு இறுதிவரை தனது அர்ப்பணத்தில் நிலையாயிருந்தார்.

**கிறிஸ்துவின் மனநிலை**

தந்தைக்கு எப்போதும் கீழ்ப்படிந்த இயேசுவின் மனநிலை எம்மிலும் எப்போதும் இருக்க வேண்டுமென தூய பவுல் இரண்டாம் வாசகத்தில் வலியுறுத்துகின்றார். அப்போது நாமும் எமது திருமுழுக்கு வாக்குறுதியில் எப்போதும் உறுதியாயிருந்து உண்மைக் கிறிஸ்தவர்களாக வாழ்ந்துகாட்டுவோம்.

– எமது திருமுழுக்கு வாக்குறுதிக்கும் வாழ்விற்கும் முரண்பாடுகள் இருக்கின்றனவா? இருந்தால் நாம் என்ன செய்ய வேண்டும்?

– இறைவனின் நீதி நெறிகளை அறிந்தும் அதன்படி வாழத் தடையாக இருக்கும் காரணிகள் என்ன?

கிறிஸ்து கொண்டிருந்த மனநிலையோடு வாழ்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*தானி 7: 9–10, 13–14 திபா 138: 1–5 யோவா 1: 47–51*

## அதிதூதர்களான தூய மிக்கேல், கபிரியேல், இரபேல் பெருவிழா

தூய மிக்கேல், கபிரியேல், இரபேல் அதிதூதர்களாக இறைபணி செய்தவர்கள். இறைவனின் கருவிகளாக, இறைவனின் உன்னத தூதர்களாக வாழ்ந்தவர்கள். பழைய ஏற்பாட்டிலும் புதிய ஏற்பாட்டிலும் இவர்களது பணி குறிப்பிடப்படுகின்றது. மிக்கேல் (காண். தானி 10: 13, யூதா 9, திவெ 12: 7), கபிரியேல் (காண். தானி 8: 16, லூக் 1: 19, 26), இரபேல் (காண். தொபி 3: 17, 5: 4) ஆகிய முக்கிய பகுதிகளில் இவர்களின் செயல்களை வாசிக்கிறோம். தீமையை ஒழிக்கவும், இறைவனின் நீதியை நிலைநிறுத்தவும், இறைவனின் மக்களை அலகையிடமிருந்து காக்கவும் இவர்கள் செயல்பட்டுள்ளனர்.

### இயேசு–நத்தனயேல்

இயேசுவுக்கும் நத்தனயேலுக்கும் இடையே சுவையான உரையாடல் நடைபெறுவதை இன்றைய நற்செய்தி காட்டுகின்றது. நாசரேத்திலிருந்து நல்லது எதுவும் வர சந்தர்ப்பமில்லை என்பது நத்தனயேலின் எண்ணமாக இருந்தாலும், இவர் உண்மையான இஸ்ரயேலர், கபடற்றவர் என்பது நத்தனயேல் பற்றிய இயேசுவின் கருத்து.

நத்தனயேலின் கபடற்ற கருத்துகள் இயேசுவைக் கவர்ந்திருக்கும். ஆனால் அதையும்விட இயேசுவில் நம்பிக்கை கொள்வோர் மேலும் பல மறையுண்மைகளைக் காண்பர் என்பது இயேசுவின் கருத்து. ஆண்டவரில் நம்பிக்கை ஒருவருக்கு அவசியமானது. ஏனெனில் அதிதூதர்களைவிட இயேசு இறைவனுக்கும் மனிதருக்குமிடையே சிறந்த உறவுப் பாலமாக அமைந்துள்ளார்.

### எமக்கும் அழைப்பு

நத்தனயேலைப்போல இறையனுபவம் பெற எமக்கும் அழைப்புண்டு. அழைப்பை உணர்ந்து அவரை நோக்கிச் சென்று பயன்பெறுவது எம்மைப் பொறுத்தது. இவர் உண்மையுள்ளவர், கபடற்றவர் என்று இயேசு என்னையும் பார்த்துச் சொல்ல முடியுமா? எனது வாழ்வு உண்மையுள்ள வாழ்வாக அமைந்துள்ளதா? நத்தனயேல் யாராக இருந்தாலும் இயேசுவைப் பார்க்க ஆர்வம் கொண்டிருந்தார். எமக்கும் அதே ஆர்வம் பெருகட்டும். இறையனுபவங்கள் பெற்று நாமும் வாழ்வு பெறுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 30 – செவ்வாய் – புரட்டாதி 2008

யோபு 3: 1-4, 11-17, 20-23 திபா 88: 1-7 லூக் 9: 51-56

### மனநிலை

எருசலேம் நோக்கிய இயேசுவின் பயணம் தொடர்ந்தது. வழியில் வந்த தடைகள் பற்றி இன்றைய நற்செய்தியில் வாசிக்கிறோம். அடுத்தவர் பற்றிய எமது மனநிலையை ஆராய்ந்து பார்க்க வாசகம் அழைக்கின்றது.

**சமாரியர் மனநிலை**

யூதருக்கும் சமாரியருக்கும் எப்போதும் முறுகல்நிலையே இருந்துவந்தது. சரித்திரத்தில் ஓர் படையெடுப்பின்போது சமாரியாவில் வாழ்ந்த யூதர்கள் கலப்புத் திருமணம் செய்ததால் யூதர்கள் சமாரியரை தமது இனமாக ஏற்றுக்கொள்ளாமல் வெறுத்துவந்தனர். இவர்கள் பிற இனத்தவர் போலவே கணிக்கப்பட்டு வந்தனர். சமாரியப் பெண்ணோடு இயேசுவின் உரையாடல் இதைத் தெளிவுபடுத்துகின்றது (காண். யோவா 4: 1-9). சமாரியரும் யூதரை வெறுத்து வந்தனர். யூதர்களும் கலிலேயாவிலிருந்து எருசலேம் நோக்கிச் செல்வதானால் சமாரியாவைத் தவிர்த்து வேறு பாதையால் செல்வர். எருசலேம் நோக்கிய இயேசுவின் பயணம் சமாரியா ஊடாக இருந்ததால் அவர்கள் இயேசுவை ஏற்றுக்கொள்ளவில்லை. ஏனெனில் இயேசு ஓர் யூதர்.

**சீடர்களின் மனநிலை**

சமாரியர் இவர்களைத் தடுத்தபோது யாக்கோபுவும் யோவானும் இவர்களுக்குத் தண்டனை கொடுக்க வேண்டும் எனும் மனநிலை-யோடு இருந்தனர். இயேசு அதிகாரம் மிக்கவர், மெசியா, தமது தலைவர். அவருக்குத் தடையாக எதுவும் வரக்கூடாது என்பது இவர்களது எண்ணமாக இருக்கலாம்.

இயேசுவோ இவர்கள் இருவரையும் கடிந்துகொள்கிறார். சக்தியிருந்தால் எதையும் செய்யலாம் என்பதல்ல. மாறாக, அமைதி காத்து அன்பை வளர்க்க முயல வேண்டும். இயேசுவின் பணி அனைவருக்குமானது. எனவே யூதர் சமாரியர் என்று அவர் வித்தியாசம் காட்டவில்லை. இயேசுவின் நல்ல வார்த்தைகள், நல்ல அணுகுமுறை சமாரியப் பெண்ணையும் அவரது சமூகத்தவரையும் மனமாறவும் வாழ்வு பெறவும் செய்தது (காண். யோவா 4: 1-42). எமது மனநிலையும் பல சந்தர்ப்பங்களில் சீடர்களைப்போல அமைந்து விடலாம். நாம் நல்லவர்கள். எனவே எமது எதிராளிகளுக்கு எமது கண்முன்னேயே ஆண்டவர் தண்டனை கொடுக்க வேண்டும் என்று ஆசிப்பதுண்டு. நல்லதை நாடுவோம். நல்லதை ஆசிப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 01 – புதன் – ஐப்பசி 2008

எசா 66: 10–14 திபா 131: 1–3 மத் 18: 1–5

# குழந்தை இயேசுவின் தூய தெரேசா நினைவு

விண்ணரசில் மிகப் பெரியவர் யார் எனும் சந்தேகம் சீடரிடையே எழ அவர்கள் இயேசுவைக் கேட்டார்கள். இயேசு தந்த பதில் இவர்களை ஆச்சரியப்பட வைத்திருக்கும். இயேசு ஒரு சிறுமியை உதாரணமாக வைத்து தனது செய்தியைக் கொடுத்தார். அவரது போதனையில் இரண்டு முக்கிய விடயங்களைப் பார்க்கலாம்.

**மனந்திரும்ப வேண்டும்**

மனமாற்றம் இல்லாமல் நாம் எதையும் சாதிக்க முடியாது. நிலைவாழ்வு எமது இலக்காக இருந்தால் அதை அடைய முதற்படி மனமாற்றம். அதற்கான அழைப்பைக் கொடுக்கவும் (காண். மத் 4: 17, மாற் 1: 15), இறைவனின் அன்பையும் இரக்கத்தையும் வெளிப்படுத்தவுமே இயேசு இவ்வுலகிற்கு வந்தார். மனமாற்றம் பெற்று இயேசுவைப் பின்சென்றால் உண்டு வாழ்வு. எனவே விண்ணரசில் மிகப் பெரியவர் எனும் நிலையை அடைய வேண்டுமானால் இயேசு முன்வைக்கும் முதல் நிபந்தனை மனமாற்றம். இந்த மனமாற்றம் அடுத்த நிலைக்கு ஒருவரை இட்டுச் செல்லும் என்பதும் அவரது போதனை. இயேசுவில் வாழ்வு பெற்ற பலர் இயேசுவிற்காகத் தம்மை அர்ப்பணித்த சம்பவங்கள் பல. சீமோனின் மாமியார் (காண். லூக் 4: 38–39). இயேசுவால் நோய் நீங்கப் பெற்றவர்கள் செயல்பட்டனர். அதற்கு சான்று பகர்ந்த மக்களும் மலைத்துப்போய் கடவுளைப் புகழ்ந்த சம்பவங்களும் உண்டு.

**தம்மைத் தாழ்த்த வேண்டும்**

உண்மைக் கிறிஸ்தவ வாழ்வு மனமாற்றத்தோடு நின்றுவிடாது. மாறாக, தூய வாழ்விற்கும் ஒருவரை அழைத்து வரும். அதற்கு தாழ்ச்சி மிக முக்கியம். மரியா தாழ்ச்சிக்கு சிறந்த உதாரணம். எனவேதான் இயேசுவும் சிறு பிள்ளையைப் போலத் தம்மைத் தாழ்த்த வேண்டுமென்றார். தாம் மட்டும் கடவுளால் அழைக்கப் பட்டவர்கள், தமக்கு மட்டுமே மீட்பு உண்டு என்று யூதர்கள் எண்ணியதால் அடுத்தவரை அணுக முடியவில்லை. ஆனால் இயேசுவின் கண்ணோட்டத்தில் அனைவரும் கடவுளின் பிள்ளைகள், அனைவருக்கும் மீட்பு உண்டு. அந்த மனநிலைக்கு தாழ்ச்சி அவசியம். நாம் கிறிஸ்தவர்கள் என்று இன்று மார்தட்டுவதில் எந்தப் பயனும் இல்லை. மனமாற்றம், தாழ்ச்சி இரண்டையும் நாடுவோம், வாழ்வு பெறுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 02 – வியாழன் – ஐப்பசி 2008

விப 23: 20–23 திபா 91: 1–6, 10–11 மத் 18: 1–5, 10

## தூய காவல் தூதர்கள் நினைவு

இறைவன் பார்வையில் அனைவரும் முக்கியமானவர்கள். உலகில் நல்லவர்கள், கெட்டவர்கள் என்று மக்களை நாம் பிரித்துப் பார்க்கிறோம். கெட்டவர்கள் சந்தர்ப்ப சூழ்நிலைகளால் அந்த நிலைக்கு மாறுகின்றார்கள் என்பதையும் ஆராய்ச்சிகளிலிருந்தும் அனுபவங்கள் வாயிலாகவும் அறிந்து கொள்கிறோம். அதேபோல கிறிஸ்தவத்தில் இறைவனின் தூதர்கள், அலகை, தூயவர்கள், இறைபணி செய்வோர், சாதாரண பொதுநிலையினர் என்று பல நிலைகளிலும் மக்களைப் பார்க்கின்றோம். இன்று நாம் நினைவுகூரும் காவல் தூதர்களுக்கும் எமக்கும் உள்ள தொடர்பை ஆராய்வோம்.

**காவல் தூதர்கள்**

தொடக்கத்தில் காவல் தூதர்கள் விழா தூய மிக்கேல் தூதரின் விழாவோடு திருச்சபையில் கொண்டாடப்பட்டு வந்தது. இறைவனின் தூதர்கள் இறைவனுக்குப் பணிசெய்யவும் தூதுவர்களாக செயல்படவும் படைக்கப் பட்டவர்கள். உலகம் படைக்கப்படுமுன்னே இவர்கள் படைக்கப்பட்டனர். எம்மை எப்போதும் ஆன்மீக, சரீர ஆபத்துகளிலிருந்து காப்பது காவல் தூதர்களின் பணி. இதையே இன்றைய முதல் வாசகத்தில் நாம் வாசிக்கிறோம். வழியில் தன் மக்களைப் பாதுகாக்க அவர்களுக்கு முன்பாக தன் தூதரை கடவுள் அனுப்புகின்றார். மக்கள் நேரிய வழியில் நடந்தால் அவர்களுக்குப் பாதுகாப்பும் உண்டு.

**சிறுபிள்ளைகள்போல...**

இயேசுவைப் பின்செல்வது பெருமையான ஓர் செயல் என்று கருதிய சீடர்களுக்கு இயேசு நல்ல போதனையைத் தருகின்றார். இது அவர்களின் சிறுபிள்ளைத்தனத்தைக் காட்டியது. ஆனால் இவர்கள் சிறுபிள்ளைகளைப் போல உள்ளத்தில் தூய்மையும், பணிவும், நேர்மையும் கொண்டவர்களாக வாழவேண்டும் என்பது இயேசுவின் போதனை. சிறுபிள்ளைகள் பெரியவர்க-ளில் நம்பிக்கை வைத்து அவர்களில் தங்கியிருப்பர். அதேபோல சீடர்களும் இயேசுவில் தங்கியிருக்க வேண்டும்.

நாமும் இன்று வாழ்வில் உயரும்போது சீடர்களைப்போல சோதிக்கப் படலாம். எமது நிலை, வளர்ச்சி, பதவி போன்றன எம்மை உண்மைக் கிறிஸ்தவ வாழ்விலிருந்து விலக்கிவிடலாம். தெளிவாயிருப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 03 – வெள்ளி – ஐப்பசி 2008

*யோபு 38: 1, 12–21, 40: 3–4 திபா 139: 1–3, 7–10, 13–14 லூக் 10: 13–16*

### மனமாற்றம்

வாழ்வில் மனமாற்றம் அவசியம். பாவ வாழ்விலிருந்து விலகி தூய வாழ்வு வாழ அனைவரும் அழைக்கப்படுகின்றோம். மனம்மாற விரும்பாத நகர்கள் பற்றிய இயேசுவின் வாக்குகளை நற்செய்தி தருகின்றது. மனம்மாறி ஆண்டவரிடம் வர எம்மையும் அழைக்கின்றது.

**இயேசுவின் சாபங்கள்**

கொராசின், பெத்சாய்தா, கப்பர்நாகும் போன்ற நகர்களுக்கு எதிராக இயேசு கடினமான வார்த்தைகளைப் பயன்படுத்தினார். யூதர்களுக்கு பழைய ஏற்பாட்டு நூல்களும் அவைகளில் நடைபெற்ற சம்பவங்களும் நன்றாகவே தெரியும். இறைவன் இரக்கமுள்ளவராக இருந்தாலும் மக்கள் திருந்திவாழ தொடர்ச்சியாக மறுத்து பாவத்தில் தொடர்ந்து வாழும்போது இறைவன் தனது இறுதி முயற்சியாக அவர்களைத் தண்டித்த சம்பவங்கள் பல பழைய ஏற்பாட்டில் உள்ளன. புதிய ஏற்பாட்டில் இயேசு யார் எனும் கேள்விகளும், ஊகங்களும், கருத்துகளும் பலவாறாக அமைந்தாலும் மக்கள் மனம்மாற வேண்டியது அவசியமே. இயேசுவை இவர்கள் ஏற்றுக்கொள்ள மறுத்து அவரைப் புறக்கணித்தாலும் அவர் கொண்டு வந்த செய்தி தமது வாழ்விற்கு உரியதாக அமைந்தால் மக்கள் செயல்பட வேண்டியது அவர்களது கடமை. போதனையை ஏற்று திருந்த மறுத்த மக்கள் பலர், ஊர்கள் பல. இவர்களுக்கு பெரும் எச்சரிக்கையாக இயேசுவின் வார்த்தைகள் வருகின்றன.

**எமக்கும் இயேசு தரும் சவால்**

மனமாற்றத்திற்கான அழைப்பு அன்று மட்டுமல்ல இன்றும் பொருந்தும். எமது வாழ்வை ஆராய்ந்து தீயதை விலக்கி நல்லதைப் பெற்றுக்கொள்ள எமக்கு போதிய அறிவுண்டு. செயல்படுகின்றோமா? தூய வாழ்விற்கான அழைப்பு எம்மைப் பொறுத்தவரையில் பல நிலைகளிலிருந்தும் வருகின்றது. திருப்பலி, அருட்சாதனங்கள், விவிலிய வாசிப்பு, மறைக்கல்வி என்று நாம் தினமும் செய்திகளைப் பெற்றாலும் திருந்தி வாழாவிட்டால் எமக்கு தண்டனையுண்டு. என்னால் முடியாது, எனக்குப் பழகிப்போய்விட்டது என்பதெல்லாம் நாம் எமக்கே கூறிக்கொள்ளும் நொண்டிச் சாக்குகளாகும். நாம் எம்மையும் அடுத்தவரையும் ஏமாற்றினாலும் இறைவனை ஏமாற்ற முடியாது என்பதை உணர்ந்து நல்லவர்களாக வாழ்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 04 – சனி – ஐப்பசி 2008

யோபு 42: 1–3, 5–6, 12–17 திபா 119: 66, 71, 75, 91, 125, 130 லூக் 10: 17–24

## தூய பிரான்சிஸ் அசிசி

பணி முடித்து மகிழ்ச்சியோடு வந்த 72 சீடர்களும் தமது மகிழ்ச்சியை ஆண்டவரோடு பகிர்ந்துகொண்டனர். இயேசுவோ அனைத்திலும் தெளிவாகவே இருந்தார். அந்த தெளிவை சீடர்களுக்கும் காட்டினார். மகிழ்ச்சி இருந்தது. ஏனெனில் பணியில் வெற்றியிருந்தது. ஆனால் அதையும் கடந்து உண்மை மகிழ்ச்சி எதில் இருக்க வேண்டுமென இயேசு தெளிந்து சீடர்களுக்கும் கற்றுக்கொடுத்தார்.

### சீடர்களின் மகிழ்ச்சி

பணிக்கென்று அனுப்பப்பட்டது சீடர்களுக்குப் புது அனுபவம். எவ்வாறு செல்ல வேண்டும், என்ன கொண்டுசெல்ல வேண்டும், எவ்வாறு செயல்பட வேண்டும் என்று ஆண்டவர் சீடர்களை அனுப்பும்போது தெளிவாகக் கூறியிருந்தார் (காண். லூக் 10: 1–12). சென்றவர்கள் பெற்ற அனுபவம் எதிர்பாராதது.

***பேய்கள் அடிபணிந்தன:*** இயேசுவின் பெயரால் நடைபெற்ற செயல்கள் பல. அவற்றில் முக்கியமானது பேய்கள் அடிபணிந்தது. இயேசு செய்த இந்த செயல்களை சீடர்களாலும் செய்ய முடிந்ததை அவர்கள் பெருமையாகக் கூட கருதியிருக்கலாம். காலப்போக்கில் இந்த மகிழ்ச்சி பெருமையாகி தம்மால் பேய்களையும் ஓட்ட முடிந்தது என்று பெருமைப்படும் அளவிற்கு இவர்களது நிலை மாறலாம். இது அலகை தரும் சோதனை. இவர்கள் இதிலும் தெளிவாக இருக்க வேண்டும். அலகை வீழ்ந்தது என்று மகிழ்ச்சி தேவை. ஆனால் அந்த அலகையே மீண்டும் வேறு வேடத்தில் வந்து சீடர்களையே வெல்ல வல்லது. தெளிவாயிருந்த இயேசு உண்மை மகிழ்ச்சி எதில் இருக்க வேண்டும் என்பதைப் போதிக்கின்றார்.

### உண்மை மகிழ்ச்சி

உங்கள் பெயர்கள் விண்ணகத்தில் எழுதப்பட்டிருக்கின்றன என்பது பற்றியே மகிழுங்கள் என்றார் இயேசு. தீய ஆவிகள் அடிபணிகின்றன என்பதைவிட இது மேலானது என்பதும் தெளிவு. எனவே சீடர்கள் தமது பணியில் எப்போதும் தெளிவாக இருக்க வேண்டும் என்பதையும் முன்னுரிமைகள் பற்றியும் இயேசு தெளிவாக்கினார். இன்று எமது பெயர்கள் விண்ணகத்தில் எழுதப்பட்டுள்ளன என்று என்னால் கூறமுடியுமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொதுக்காலம் 27ம் ஞாயிறு
## 05 – ஐப்பசி 2008

எசா 5: 1–7 திபா 80: 8, 11–15, 18–19 பிலி 4: 6–9 மத் 21: 33–43

### வாழ்வு

இறைவனின் ஆசீர் உலக மக்களுக்கு நிறைவாக இருந்தாலும் மக்கள் அவற்றை உணர்ந்து ஏற்று தமது வாழ்வில் நல்ல பலன் கொடுக்க வேண்டும். மாறாக மனிதர் அநீத வாழ்வு வாழ்ந்து அடுத்தவரையும் அடிமைப்படுத்தி வாழும்போது இறைவன் துன்புறுவோரை மீட்டு துன்புறுத்துவோரை தண்டிப்பார். இந்த சிந்தனைகளை இன்றைய ஞாயிறு வாசகங்கள் தருகின்றன. இறைவன் எமக்குத் தந்துள்ள கொடைகளை நாமும் ஆராய்ந்து பார்த்து பலன்கொடுக்க வாசகங்கள் எம்மையும் அழைக்கின்றன.

**கடவுளின் மக்கள்**

யூத இனம் இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட இனம். சிறப்பு நோக்கத்திற்காக அழைக்கப்பட்ட இனம். உலக மக்களில் ஆபிரகாம் மூலமாக யூத அல்லது இஸ்ரயேல் இனத்தை மட்டும் தெரிவுசெய்து வளர்த்தெடுத்து காத்துவந்தாலும் இந்த மக்கள் இறைவனுக்கு விசுவாசமுள்ளவர்களாக வாழ்ந்தார்களா? உடன்படிக்கைகள் பல இறைவனால் முன்வைக்கப்பட்டாலும் இறைவன் மட்டுமே உடன்படிக்கைக்கு நூறு வீதம் விசுவாசமுள்ளவராக இருந்துள்ளார். உடன்படிக்கையின் மக்களோ இறைவனை நம்பாத, சந்தேகித்த, அவருக்கு எதிராக முணுமுணுத்த, அவரைவிட்டு விலகிச்சென்ற சம்பவங்களே பல.

**முயற்சியின் விளைவுகள்**

ஆண்டவர் ஆர்வத்துடன் நட்ட கன்று யூதா மக்களே. அவர் எதிர்பார்த்தது நீதி. ஆனால் இரத்தப் பழியே பதிலாகக் கிடைத்தது என்கிறார் எசாயா. ஒரு மரத்தையும் மனிதனையும் அதன் கனிகளால் அல்லது செயல்களால் அறியலாம் என்று இயேசுவே தனது போதனைகளில் குறிப்பிட் டுள்ளார் (காண். மத் 7: 20). ஆனால் இங்கு நல்ல கனி தரும் என்று எதிர்பார்த்து ஆர்வத்தோடு நட்ட மரங்கள் காட்டுப் பழங்களையே தந்தன.

இதனால் இறைவனின் தண்டனை இஸ்ரயேல் மக்களுக்குண்டு என்பது நிச்சயம். அது கடினமானதாகவும் இருக்கும். ஏனெனில் இறைவ–னின் பொறுமையை இவர்கள் தொடர்ச்சியாக சோதித்துள்ளனர். இவர்களது விசுவாசமற்ற செயல் இன்று எமக்கும் ஓர் பாடமாக அமைகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கொடிய குத்தகைக்காரர்**

திராட்சை உற்பத்தி பாலஸ்தீனாவில் பலராலும் மேற்கொள்ளப்பட்டது. எனவே அதன் பின்னணியை வைத்து இயேசுவும் உவமை மூலமாக முக்கிய செய்தியைக் கொடுக்கின்றார். இயேசு கூறிய இந்த கொடிய குத்தகைக்காரர் உவமையைக் கேட்ட யூதத் தலைவர்கள் இவர் தம்மைப் பற்றியே குறிப்பிடு கின்றார் என்று உணர்ந்து அவருக்கு எதிராக செயல்படவும் தொடங்கினர். உவமையும் அது தாங்கிவந்த செய்தியும் தெளிவு. யூதத் தலைவர்கள் தமது பொறுப்புகளை முறையாகச் செய்யாமல் அதைத் தட்டிக் கேட்போரையும் ஒழித்து வந்தனர்.

முதல் வாசகத்தோடு ஒப்பிடும்போது அதில் குறிப்பிடப்படும் திராட்சைத் தோட்டமும் திராட்சையும் இஸ்ரயேல் மக்களைக் குறித்துநின்றது. ஆனால் நற்செய்தியில் வரும் உவமையில் யூதத் தலைவர்களையே இயேசு குறித்துக் காட்டினார். குத்தகைக்காரர்கள் யூதத் தலைவர்களே. கணக்குக் கேட்க வந்த இறைவாக்கினர்களை இவர்கள் ஏற்கவில்லை. நிலக்கிழாரின் மகன் இயேசுவைக் குறிக்கின்றது. அவரை தலைவர்கள் கொன்றுவிட்டனர். இவ்வாறு யூதத் தலைவர்களின் பொறுப்பற்ற தன்மையை இயேசு குறிப்பிட்டாலும் இன்று பொறுப்பில் உள்ள அனைவருக்கும் இந்த உவமை சவாலாகின்றது. இன்று ஏதோவொரு வகையில் நாம் அனைவரும் பொறுப்பில் உள்ளோம். எனவே நாம் என்ன செய்ய வேண்டும்? சவாலுக்கு முகம் கொடுத்து, தவறை ஏற்று திருந்தி வாழ்வோம்.

**பவுல் தரும் வழிகாட்டல்**

வாழ்வில் சவால்கள் வந்தாலும் நாம் கவலைகொள்ளாமல் இறை அமைதியை நோக்கிச் செல்ல வேண்டும். அமைதி தேடி ஏக்கத்தோடு இருக்கும் நாம் இறையமைதியைத் தேடவேண்டும். அதுவே நிறைவானது, நிலையானது. அதுவே எமது உள்ளத்தையும், மனத்தையும் பாதுகாக்கும் என்கிறார் பவுல். அதற்கு எமக்கு இருக்க வேண்டிய பண்புகளையும் அவர் பட்டியலிட்டுக் காட்டுகின்றார். இனி வாழ்வது நானல்ல, கிறிஸ்துவே என்னில் வாழ்கிறார் என்று உறுதியாகக் கூறியவர் பவுல் (காண். கலா 2: 20). கிறிஸ்துவில் அவர் கண்ட அமைதி அவரை இவ்வாறு கூறவைத்தது.

எனவே பவுல் போதிப்பதைப் போல நாமும் நற்பண்புகளை எம்முள் வளர்ப்போம். இறைவனின் கட்டளைகளைக் கடைப்பிடிப்பதில் உறுதியாய் இருப்போம். அவர் தரும் அமைதியை அடைய ஆர்வத்தோடு செயல்படுவோம். அப்போது எமது வாழ்வு வளம்பெறும். அடுத்தவர் வாழ்வு வளம்பெற நாம் அவர்களுக்கு ஆசீராவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 06 – திங்கள் – ஐப்பசி 2008

*கலா 1: 6–12 திபா 111: 1–2, 7–10 லூக் 10: 25–37*

### அன்பு

திருச்சட்ட அறிஞர் ஒருவருக்கும் இயேசுவுக்குமிடையே நடைபெற்ற உரையாடல் இது. நல்ல சமாரியர் உவமை எமக்கு அதிகம் தெரிந்த ஓர் உவமை எனலாம். தன்னை நல்லவர், நேர்மையுள்ளவர் என்று எண்ணிப் பெருமைப்பட்ட திருச்சட்ட அறிஞரை இயேசு தனது போதனையின் மூலமாக சிந்திக்க வைத்தார். எனது அயலான், அடுத்திருப்பவர் யார் என்று இன்று எம்மையும் கேட்க வைக்கின்றது நற்செய்தி.

**அடுத்திருப்பவர்**

கேள்வி கேட்டு விளக்கம் பெற வேண்டுமென்பது அறிஞரின் நோக்கமல்ல. மாறாக, தான் நேர்மையாளன் என்று காட்டுவதே அவரது இலக்காக இருந்தது. நிலைவாழ்வு பெற நான் என்ன செய்ய வேண்டும் என்பது திருச்சட்ட அறிஞரின் முதல் கேள்வி. கடவுளை முழுமையாக அன்பு செய். அதேபோல அயலானையும் (அடுத்திருப்பவர்) அன்பு செய் என்பது இயேசுவின் பதில்.

எனக்கு அடுத்திருப்பவர் யார்? என்பது அறிஞரின் இரண்டாம் கேள்வி. இதற்கு இயேசு கூறிய உவமையே நல்ல சமாரியர் உவமை. யூதருக்கும் சமாரியருக்கும் நல்ல உறவு இல்லை. தொடர்ச்சியான பகைமையே இருந்தது. ஆயினும் அடிபட்டவர் யூதர் என்று தட்டிக் கழிக்காமல் உவமையில் வரும் சமாரியர் அவருக்கு வேண்டிய உதவிகளைச் செய்தார், மேலதிகமாகவும் செய்தார். ஆனால் யூத இனத்தைச் சேர்ந்த குரு, லேவியர் கள்வரால் அடிபட்டு குற்றுயிராய் இருந்த யூதரைக் கவனிக்கவில்லை.

**இயேசுவின் மனநிலை**

இயேசுவின் பார்வையில் அனைவரும் இறைவனின் பிள்ளைகளே. இனம், குலம் அனைத்தும் மனிதரால் உருவாக்கப்பட்டவை. அடிபட்டவருக்கு இரக்கம் காட்டியவரே உண்மை அயலான் என்று மறைநூல் அறிஞர் வாயாலேயே பதிலை வரவைத்தார் இயேசு. இயேசு யூத இனத்தில் பிறந்தாலும் அவர் அனைவருக்காகவும் வந்தவர். அனைத்து எல்லைகளையும் தாண்டி இறைவனின் அன்பை அவர் பரப்பினார். இன்று நானும் மனிதர் உருவாக்கிய தடைகளைக் கடந்து அன்பை விதைப்பேன். என் உள்ளத்திலும் அடுத்தவர் உள்ளத்திலும் அதை வளரச் செய்வேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 07 – செவ்வாய் – ஐப்பசி 2008

திப 1: 12–14 லூக் (பதிலுரை) 1: 47–55 லூக் 1: 26–38

## செபமாலை அன்னை

செபமாலை அன்னையின் விழா இன்று. மரியா திருச்சபையின் சரித்திரத்தில் தனது காட்சிகளின்போது உலக மீட்புக்காக திருச்செபமாலை சொல்லும்படி பணித்தார். மரியா மீட்புப் பணியில் பெரும் பங்கேற்றவர் என்று கூறலாம். செபமாலை சொல்வதன் மூலமாக நாம் கிறிஸ்துவின் வாழ்வையே தியானிக்கிறோம். மரியாவின் அழைப்பு பற்றிய நற்செய்தி மூலம் மரியாவின் இறையனுபவத்தைப் பார்ப்போம்.

### ஆம் என்று கூறிய மரியா

மரியா அன்று யூத சமூகத்தில் மிக முக்கிய ஒருவராக இருக்கவில்லை. சாதாரண ஏழைக் குடும்பத்தில் அவர் பிறந்து இறைவனில் ஆழமான நம்பிக்கை வைத்து அனைவரைப் போல அவரும் மெசியாவின் வருகைக்காகக் காத்திருந்தவர். இறைவனின் அழைப்பு மரியாவிற்கு வந்தது.

ஒரு பெண் திருமணமாகுமுன்பு கருத்தாங்கியிருந்தால் அன்றைய சமூகத்தில் அது பாரிய குற்றமாகும். மரண தண்டனையே கிடைத்தது. குழந்தையின் தந்தை அவரைத் திருமணம் செய்ய சம்மதிக்காவிட்டால் அப்பெண் வாழ்நாள் முழுவதும் விதவையாகவே இருக்க வேண்டிய நிலை ஏற்படும். தனது வயிற்றுப் பசியைப் போக்க அவர் பிச்சை எடுக்க வேண்டிவரும் அல்லது விபசாரத்தில் இறங்க வேண்டிவரும். தூய ஆவியால் கருத்தாங்கி யிருப்பதாக அவர் சமூகத்திற்குச் சொன்னால் சமூகம் கைகொட்டிச் சிரிக்கும். ஆயினும் மரியா தேவையான விளக்கங்கள் பெற்றபின்பு கடவு- ளில் முழுமையான நம்பிக்கை வைத்து நான் ஆண்டவரின் அடிமை. உம் சொற்படியே எனக்கு நிகழட்டும் என்று பதில் கூறினார். சமூகம் தரக்கூடிய துன்பங்களைப் பற்றிக் கவலைகொள்ளாது அவர் பணியை ஏற்றார். ஏனெ- னில் வரும் அழைப்பு கடவுளிடமிருந்தே வந்துள்ளது என்பதை அவர் உறுதி செய்திருந்தார்.

### பணிய அழைக்கும் மரியா

இன்று நாமும் இறைவனின் அழைப்புக்கு திறந்த மனதோடு ஆம் என்று பதில் கூறி செயல்பட முன்வரவேண்டும். தனது இவ்வுலகப் பணி முடிந்தாலும் உலக மீட்புக்காக மரியா தொடர்ந்து பரிந்து பேசுகின்றார் என்பதை உணர்ந்து எம்மையும் இறைபணிக்கு அர்ப்பணிப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 08 – புதன் – ஐப்பசி 2008

கலா 2: 1–2, 7–14  திபா 117: 1, 2  லூக் 11: 1–4

## செபம்

இயேசுவின் வாழ்வில் செபம் மிக முக்கிய இடம் வகித்தது. அதுவே அவருக்குப் பலம், சக்தி. அவர் செபிப்பதில் அதிக நேரத்தைச் செலவிட்டார் என்று நற்செய்திகள் கூறுகின்றன. அவர் மாலை நேரங்கள், இரவு வேளைகள் என்று மக்களை அனுப்பிவிட்டு தனித்துச் சென்று தந்தையோடு செபத்தில் இருந்தார். மிக முக்கிய முடிவுகள் எடுப்பதற்கு முன்பாக அதிக நேரங்கள் செபிப்பதில் செலவழித்தார். இவ்வாறு செபத்திற்கு முன்னுரிமை கொடுத்த இயேசு தனது சீடர்களுக்கும் செபிக்கக் கற்றுக்கொடுத்தார்.

### பரலோக மந்திரம்

தந்தையே... என்று இயேசு செபத்தைத் தொடங்கினார். இறைவன் இயேசுவின் தந்தை. அந்த புனிதமான உறவை இயேசு சீடர்களுக்கும் அறி முகம் செய்தார். மத்தேயு தனது நற்செய்தியில் விண்ணுலகிலிருக்கிற எங்கள் தந்தையே... என்று தொடங்குகின்றார். யூதர்கள், இறைவன் தந்தை என்றும், தமக்கு மட்டும் தந்தை என்றும் கருதிவந்தனர். எனவே அதே சிந்தனையோடு மத்தேயுவும் குறிப்பிடுகின்றார்.

இறைவனைப் புகழ்வது அனைத்து செபங்களுக்கும் முதல்படியாகும். இது எமது நன்றியுள்ளத்தையும் எடுத்துரைக்கின்றது. இப்புகழ்ச்சி எமது தேவைகளை எடுத்துரைப்பதற்கு ஏற்ற தளத்தை ஏற்படுத்திக்கொடுக்கும்.

இறைவன் எமக்குத் தேவையான அனைத்துக் கொடைகளையும் ஒரேயடியாகத் தந்துவிடுவதில்லை. மாறாக தேவைக்கேற்ப, அவரது விருப்பத்திற்கேற்ப அவற்றை எமக்குத் தருகின்றார். எமது தேவைகளும் அவரது ஆசீரும் சந்திக்கும்போது இறையனுபவம் பிறக்கின்றது.

இயேசு செபிக்கக் கற்றுக்கொடுத்தபோது மன்னிப்பை மூலைக்கல்லாகப் பயன்படுத்தினார். இறைவன் எம்மை மன்னித்ததுபோல நாமும் அடுத்தவரை மன்னிக்க வேண்டும்.

### எம் வாழ்வில் செபம்

இறைவனைப் புகழ்வதும், அவரது ஆசீரை வேண்டி நிற்பதும், அவரது மன்னிப்பை வேண்டுவதும் செபத்தின் முக்கிய பண்புகள். எமது செபம் எம்மையும் எமது சுயநலன்களையும் சுற்றி உள்ளதா? இறைவனையும் நலவாழ்வையும் தேடுவோம். ஏனையவை தொடரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 09 – வியாழன் – ஐப்பசி 2008

கலா 3: 1–5 லூக் (பதிலுரை) 1: 69–75 லூக் 11: 5–13

## நம்பிக்கை

இறைவேண்டல் பற்றிக் கற்றுக்கொடுத்த இயேசு ஓர் உவமையின் மூலமாக தந்தையின் பராமரிப்பையும் செபிப்பதில்லை இருக்க வேண்டிய விடாமுயற்சியையும் நற்செய்தியில் குறிப்பிடுகின்றார். இறைவனின் அன்பை மனிதர் குறைவாகக் கணிப்பது இயல்பு. இயேசுவோ உலகப் பெற்றோரின் மனநிலையை உதாரணமாக வைத்து இறைவனின் அன்பை விளக்குகின்றார்.

### விடாமுயற்சி அவசியம்

விருந்தோம்பல் என்பது யூதர்களின் வழமை. எனவேதான் விருந்தினர்களுக்குக் கொடுக்க உணவு இல்லாதபோது தன் நண்பர் வீட்டிற்குச் செல்கிறார் இவர். ஆனால் நண்பர் வீட்டில் நிலைமை வேறு. ஒரே படுக்கையில் உறங்கும் தன் குடும்பத்தவர் தூக்கம் கலையக்கூடாது என்பதால் அவர் எழுந்திருக்கவில்லை. ஆனாலும் நண்பரின் தொல்லை பொறுக்க முடியாமல் அவர் எழுந்து தேவையானதைக் கொடுக்கின்றார். இதனால் நாம் கேட்பதை எல்லாம் இறைவன் தருவார் என்றில்லை. மாறாக, எமது செபம் என்றும் வீணாகாது. எமது செபத்திற்குப் பலன் உண்டு என்பதை நாம் நினைவிற் கொள்ள வேண்டும். நாம் கேட்பது தவறானதாக இருக்கலாம். ஆனால் இறைவனோ எமக்கு நல்லதைத் தவறாமல் தருகின்றார். இதை உணர்ந்து கொள்ள எமக்கு பக்குவம் தேவை.

### உலகப் பெற்றோர் உதாரணம்

குழந்தைகளுக்குப் பெற்றோரே உலகம். ஆயினும் பெற்றோர் தவறு செய்வதும் உண்டு. ஆனால் பெற்றோர் தவறு செய்தாலும் பிள்ளைகளுக்கு நன்மையானதைக் கொடுக்காவிட்டாலும் தீமையானதைக் கொடுக்க மாட்டார்கள். இவ்வாறு உலகப் பெற்றோர் இருந்தாலும் இறைவன் தன் மக்களுக்கு பல மடங்காக நன்மைகளைச் செய்வார் எனும் செய்தியை இயேசு நற்செய்தியில் தருகின்றார். நம்பிக்கையோடு இயேசுவிடம் வந்து நன்மைகளைப் பெற்றவர்கள் பலர். அவர்கள் யூதர், கானானியப் பெண் (காண். மத் 15: 21–28), நூற்றுவர் தலைவர் (காண். லூக் 7: 1–10), சக்கேயு (காண். லூக் 19: 1–10) என்று பல உதாரணங்கத் தரலாம்.

இறைவன் நல்லவர், பேரிரக்கமுள்ளவர். அவரிடம் நம்பிக்கையோடு வருவோம். நன்மைகளைப் பெறுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 10 – வெள்ளி – ஐப்பசி 2008

கலா 3: 7–17 திபா 111: 1–6 லூக் 11: 15–26

### இறைசக்தி

பேச்சிழந்த ஒருவரிடமிருந்து பேயை ஓட்டிய இயேசுவுக்கு பெரும் சவால் காத்திருந்தது. இயேசு பெயல்செபூலைக் கொண்டே பேயை ஓட்டுகின்றார் எனும் குற்றச்சாட்டு சிலரிடமிருந்து வர இன்னும் சிலர் வானிலிருந்து ஓர் அருங்குறி காட்டுமாறு கேட்டனர். இயேசுவின் பதிலோ தெளிவான விளக்கத்தைக் கொடுத்திருக்கும்.

**தவறாகப் புரிந்து கொள்ளுதல்**

இயேசு பேச்சிழந்தவனின் பேயை ஓட்டியதைப் பார்க்கப் பொறுக்காமல் அவரது எதிரிகள் வேறு காரணங்களை முன்வைத்தனர். பேய்களின் தலைவனோடு இவருக்குத் தொடர்பு உண்டு என்பது இவர்களது வாதம். இயேசு பேய்களை ஓட்டுவதற்கு இரண்டு விளக்கங்கள் கொடுக்கின்றார்.

1. தனக்கெதிராகத் தானே பிழவுபடும் எந்த அரசும் நிலைக்காது. இயேசு பேய்களின் தலைவனைக் கொண்டு இந்தப் பேயை ஓட்டினால் அவற்றினுள் பெரும் குழப்பமே ஏற்பட்டுவிடும் என்பது உண்மை.

2. இறையாட்சியின் வெளிப்பாடு. இயேசு அலகையையும் வென்றவர். அவரது சக்தியை யூதர்கள் முழுமையாகப் புரிந்துகொண்டிருக்கவில்லை. எனவே அவரது சக்திக்கு வேறு காரணங்களைத் தேடினார்கள். இயேசுவை இறைமகன் என்றோ, மெசியா என்றோ இவர்களால் இன்றும் சரியாகப் புரிந்துகொள்ள முடியவில்லை.

**இறைவனின் சக்தி**

இறைவனின் இரக்கத்தை உலகிற்கு தனது வாழ்வின் மூலமாக வெளிப் படுத்தினார் இயேசு. அதைப் புரிந்துகொண்டவர்கள், நம்பியவர்கள் சிலரே. ஆயினும் இயேசு தனது பணியிலிருந்தோ முயற்சிகளிலிருந்தோ பின்வாங்க வில்லை. மக்களுக்கு நன்மைகள் செய்வதில் அவர் குறை எதுவும் வைக்க வில்லை. தொடக்கத்திலிருந்தே உலகையும் மனிதனையும் ஆட்டிப்படைத்த அலகையை வெல்ல வேண்டுமென்பதே இயேசுவின் நோக்கம். எனவேதான் இறையாட்சி வந்துவிட்டது என்பது அடையாளம் என்றும் இயேசு நினைவூட்டினார். ஆனால் அதையும் நம்ப யாருமில்லை. அவரை நம்பி வாழ்வு பெற அனைவருக்கும் அழைப்பு உண்டு.

இயேசுவின் சக்தியில் நம்பிக்கை வைத்து வாழ்வு பெறுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 11 – சனி – ஐப்பசி 2008

கலா 3: 22–29 திபா 105: 2–7 லூக் 11: 27–28

## உண்மைப் பேறு

இயேசுவையும் அவரது தாயையும் போற்றிப் புகழ்ந்தார் கூட்டத்தில் இருந்த ஓர் பெண். ஆனால் இயேசுவின் மனிநிலையும் பதிலும் அதற்கு வித்தியாசமானதாகத் தெரிந்தது. நாம் எதில் பெருமை பாராட்ட வேண்டும் என்று சிந்தித்து செயல்பட அழைக்கின்றது நற்செய்தி.

**மனிதரின் மதிப்பு**

யூத சமூகத்தில் குடும்ப கட்டமைப்பு முக்கிய இடத்தைப் பெற்றுவந்தது. தாம் இறைவனால் அழைக்கப்பட்ட மக்கள் என்பதை உறுதிசெய்ய இவர்கள் தமது மூதாதையரின் மரபுவழி அட்டவணைக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தனர். எனவேதான் இயேசு இறைமகன், மெசியா, எதிர்பார்க்கப்பட்டவர், தாவீதின் மரபில் வந்தவர் என்று காட்ட மத்தேயுவும் லூக்காவும் இயேசுவின் தலைமுறை அட்டவணையைத் தருகின்றனர். ஒரு ஆணின் மதிப்பு அவரது மூதாதையரிடமிருந்து வந்தது. ஒரு பெண்ணின் மதிப்பு அவர் பெற்ற ஆண் பிள்ளைகளிடமிருந்து வந்தது.

**பெண்ணின் பாராட்டு**

நற்செய்தியில் வந்த பெண் இயேசுவின் தாயைப் பாராட்டினார். ஆனால் இயேசுவின் மனநிலையோ வேறு. இயேசுவின் சிந்தனையில் ஒருவரின் மதிப்பு மரபுவழி மூலம் வருவதில்லை. மாறாக, இறைவனோடு அவருக்கு இருக்கும் சீரான உறவுமுறையிலிருந்து வருகின்றது. இறைவார்த்தையைக் கேட்டு அதைக் கடைப்பிடிப்போர் அதிகம் பேறுபெற்றோர்.

இங்கு யூத சிந்தனையிலிருந்து இயேசுவின் சிந்தனை ஆழ்ந்த அர்த்தமுள்ளதாக அமைந்துவிடுகின்றது. மரபுவழிக்கு யூதர்கள் அதிக கவனம் செலுத்தினாலும் அது ஒருவருக்கு மீட்பைக் கொண்டுவராது. நான் யூதன், கடவுளால் தெரிவுசெய்யப்பட்ட சமூகத்தில் பிறந்தவன் என்பது பெருமைக்குரிய விடயமாக அவருக்கு இருக்கலாம். ஆனால் அவர் கடவுளின் உடன் படிக்கைக்கு ஏற்ப வாழ்ந்தால்தான் கடவுளின் ஆசீரைப் பெறுவார். இதையே இயேசுவும் வலியுறுத்தினார். அவர் கூற்றின்படி கடவுளின் சித்தத்தை நிறைவேற்றிய மரியா உண்மையிலேயே பேறுபெற்றவரே.

நாம் எமது பதவி, நிலை, செல்வத்தில் பெருமை பாராட்டாது இறைவனின் விருப்பப்படி வாழ்வதில் கருத்தாயிருப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொதுக்காலம் 28ம் ஞாயிறு

## 12 — ஐப்பசி 2008

*எசா 25: 6–10   திபா 23: 1–6   பிலி 4: 12–14, 19–20   மத் 22: 1–14*

## மீட்பு

ஆண்டவர் கொண்டுவந்த மீட்பு உலக முழுமைக்குமானது என்பதை இன்றைய ஞாயிறு வாசகங்கள் மூலமாக நாம் அறிந்துகொள்கின்றோம். இயேசுவின் காலத்து யூதர்களின் மனநிலைக்கும் எதிர்பார்ப்புக்கும் இது முரணாக இருந்தது. இயேசு போதித்த இறையாட்சி பற்றிய செய்தி யூத இனம் தொடங்கி அனைவரையும் சென்றடைய வேண்டும் என்பது அவரது நோக்கம். அதை அவரது சீடர்களே முறையாகப் புரிந்துகொள்ள முடியவில்லை. ஆனால் மீட்பு உலகம் அனைத்துக்குமானது என்பதை எசாயா பல வருடங்களுக்கு முன்பாகவே தனது நூலில் தந்துள்ளார். வாசகங்கள் தரும் செய்தியைத் தியானிப்போம்.

### அனைவருக்குமான மீட்பு

படைகளின் ஆண்டவர் அனைவருக்கும் ஓர் விருந்து படைக்கிறார். சாவை ஒழித்து, கண்ணீரைத் துடைத்து மக்களின் நிந்தையை அகற்றிவிடுவார் அவர். தீமையை ஒழித்து அதன் வெற்றியைக் கொண்டாட ஓர் விருந்து. இந்த விருந்து எதிர்பாராத விதமாக யூதருக்கு மட்டுமல்ல. பிற இனத்தாருக்கும் கொடுக்கப்படுகின்றது என்கிறார் எசாயா. இவரே நம்மை விடுவித்தார். இவருக்கென்றே நாம் காத்திருந்தோம் என்பதன் மூலம் நம்பிக்கையில் வாழும் அனைவருக்கும் ஆண்டவரின் மீட்பு வந்தடைகின்றது எனலாம். எசாயா நூல் 55ம் அதிகாரமும் இந்த கருத்தையே தருகின்றது.

### இறைவனின் இரக்கம்

இறைவனின் மனநிலை, எண்ணங்கள் இங்கு வெளிப்படுகின்றன. மக்கள் இதை உணரவில்லை. ஏனெனில் தமது மீட்பொன்றே அவர்கள் மனதில் இருந்தது. தொடக்கத்திலிருந்தே யூதர்கள் இந்த மனநிலையோடு வாழ்ந்து வந்தார்கள். யூதத் தலைமையும் அதற்கேற்றவாறு சட்டங்களையும் அமைத்திருந்தது. இதனால் இயேசுவோடு இவர்களுக்கு பல முரண்பாடுகளும், முறுகல் நிலையும் ஏற்பட்டது.

எசாயாவின் இந்த இறைவாக்கு பிற இனத்தாருக்குப் பெரும் ஆறுதல் தரும் இறைவாக்காக அமைந்திருக்கும். ஏனெனில் யூதர்களும் பிற இனத்தவர்களும் காலத்துக்குக் காலம் அடிமைகளாக வாழ்ந்துள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அழைக்கப்பட்டவர்கள்**

எசாயா நூலில் கொடுக்கப்பட்ட அதே எண்ணத்தை இயேசு திருமண விருந்து உவமை மூலமாகக் கொடுக்கின்றார். அழைக்கப்பட்டவர்கள் பலர். ஆனால் தேர்ந்துகொள்ளப்பட்டவர்கள் சிலர்.

யூதர்களது கலாசாரத்தில் விருந்து கொடுக்குமுன் இரண்டு அழைப்புகள் அனுப்பப்படும். முதலாவது விருந்தில் கலந்துகொள்ள வருமாறு அழைப்பு. இரண்டாவது விருந்து ஆயத்தமானதும் அதில் கலந்துகொள்ளுமாறு அழைப்பு. இயேசுவின் உவமையில் அரசர் விருந்து ஆயத்தம் என திருமணத்திற்கு அழைப்புப் பெற்றவர்களுக்கு மூன்று தடவைகள் செய்தி அனுப்பினார். ஆனால் மூன்று தடவைகளும் அவர்கள் அழைப்பைத் தட்டிக்கழித்தனர். அனுப்பப்பட்ட பணியாளர்களையும் துன்புறுத்தி கொலை செய்தார்கள்.

**தெரிந்துகொள்ளப்பட்டவர்கள்**

அழைக்கப்பட்டவர்கள் தமது அழைப்பை உதாசீனம் செய்ய அரசர் ஏனையோரை அழைக்கின்றார். இன்று யார் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள். யூதருக்கு மட்டுமல்ல பிறஇனத்தவருக்கும் வந்தேன் என்று இயேசு வெளிப்படையாக போதிக்கவில்லை. கானானியப் பெண் அவரிடம் தன் மகளை குணமாக்கும்படி கேட்டபோதுகூட தான் அவர்களுக்காக வரவில்லை என்று நேரடியாகவே குறிப்பிட்டார் (காண். மத் 15: 21-28). ஆனாலும் சமாரியப் பெண்ணோடு உரையாடியது (காண். யோவா 4: 1-42), பாவிகளைத் தேடிச் சென்றது போன்ற சம்பவங்களில் இறைவனின் இரக்கம் அனைவருக்கும் உண்டு என்பதைக் காட்டினார்.

**பிற இனத்தாருக்கும் மீட்பு**

இயேசு தனது உயிர்ப்புக்குப்பின் சீடர்களுக்குப் போதிக்கும் கட்டளையைக் கொடுத்தார். உலகெங்கும் சென்று எல்லா இனத்தாரையும் சீடராக்குங்கள் என்று அவர் பணித்தார் (காண். மத் 28: 18-20). உயிர்த்த ஆண்டவர் தன் பணி தொடர சவுலை அழைத்தார். பிற இனத்தவருக்கு நற்செய்தி அறிவிப்பதே பவுலின் முதன்மைப் பணியாக இருந்தது (காண். திப 9: 15).

அழைப்பு இன்று எமக்கும் உண்டு. ஆனால் எமது சுயநலப் போக்குகளினால் நாம் அசட்டையாக இருந்தால் சந்தர்ப்பத்தை இழப்பது உறுதி. இறைவனின் அழைப்பில், வழிகாட்டலில் தெளிவாக இருந்து அவரது கட்டளைப்படி வாழ்ந்துகாட்டுவோம். அப்போது ஆண்டவர் தரும் புதுவாழ்வை நாம் அனுபவிக்க முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 13 - திங்கள் - ஐப்பசி 2008

கலா 4: 22-24, 26-27, 31-5: 1 திபா 113: 1-7 லூக் 11: 29-32

### மனமாற்றம்

தன்னை நம்புவதற்கு அடையாளம் கேட்கும் தன் தலைமுறையைக் கண்டனம் செய்கின்றார் இயேசு. யோனாவின் அடையாளமும் தென்னாட்டு அரசியின் அடையாளமும் தவிர வேறெந்த அடையாளமும் அவர்களுக்குக் கொடுக்கப்படமாட்டாது என்ற இயேசு அவரே முதன்மையான அடையாளம் என்றும் சுட்டிக்காட்டினார்.

**யோனாவின் அடையாளம்**

நினிவே மக்கள் பிறஇனத்தவர். பாவத்திலே வாழ்ந்தவர்கள். இறைவன் யோனாவை அங்கு அனுப்பி அவர்களது பாவங்களை உணரச் செய்தார். இன்னும் நாற்பது நாட்களில் நினிவே அழிக்கப்படும் (யோனா 3: 4) எனும் யோனாவின் செய்தியை நினிவே மக்கள் கேட்டதும் தாமதமின்றி அரசன் தொடங்கி கால்நடைகள் வரை சாக்கு உடை உடுத்தி, சாம்பலில் உட்கார்ந்து, உண்ணா நோன்பிருந்தனர். இம்மக்களின் மனமாற்றத்தைப் பார்த்த ஆண்டவர் தனது மனதை மாற்றிக்கொண்டு அவர்களைத் தண்டிக்காமல் விட்டுவிட்டார்.

சேபா நாட்டு அரசி சாலமோனின் புகழைக் கேள்விப்பட்டு அவரைப் பார்க்க வந்தார். அவரது ஞானத்தைக் கண்டு ஆண்டவரைப் போற்றினார் (காண். 1அர 10: 1-10). இவரும் சிறந்த அடையாளம் என்று இயேசு குறிப்பிடுகின்றார். ஏனெனில் இவர் பிறஇனத்தவராக இருந்தாலும் இறைவனில் நம்பிக்கை வைத்தார்.

**இயேசுவே அடையாளம்**

வீண் பிடிவாதக் குணமுள்ளவர்கள் யூதர்கள். இயேசுவின் வல்ல செயல்களைப் பார்த்தும் அவர்கள் தொடர்ச்சியாக அடையாளங்களையே கேட்டனர். இதுவே அவர்களது நம்பிக்கையின்மையைக் காட்டியது. ஆனால் இயேசு இவர்கள் கேட்டதையும்விட அவரே சிறந்த அடையாளம் என்றார். பழைய ஏற்பாட்டு நூல்களில் வந்தவர்களைவிட இயேசுவின் சக்தி, செயல்கள் மேலானவை. யோனாவோடு இயேசுவை ஒப்பிட முடியாது. இயேசுவின் போதனை, வாழ்வு பலருக்கும் வாழ்வு கொடுத்தது. அவரை நம்ப மறுப்போர் எத்தனை அடையாளங்கள் கொடுத்தாலும் நம்பப்போவதில்லை.

ஆண்டவரில் நம்பிக்கை வைத்து வாழ்வோம். அவரே வாழ்வு தருபவர் என்று ஏற்று வாழ்வு பெறுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 14 – செவ்வாய் – ஐப்பசி 2008

கலா 5: 1–6 திபா 119: 41–48 லூக் 11: 37–41

### 1ம் கலிஸ்து உ திருத்தந்தை, மறைசாட்சி

பரிசேயரின் வெளிவேட வாழ்வை இயேசு கண்டிக்கின்றார். செய்ய வேண்டியதைச் செய்யாமல் அவசியமில்லாதவற்றில் அதிக கவனம் செலுத்தும் இவர்கள் சிந்தனைகளையும் வாழ்வையும் வெளிப்படுத்துகின்றார் இயேசு. இது எமக்கும் சவாலாக அமைகின்றதா?

**தூய்மையாக்கும் சடங்கு**

பாத்திரங்களையும் கைகளையும் கழுவி தூய்மையாக்குவது என்பது நோய்களைத் தவிர்ப்பதற்காக அல்ல. மாறாக, அசுத்தமானவற்றைத் சம்பந்தப் பட்டவர்கள் தொட்டிருந்தால் அந்த அதிலிருந்து அவர்கள் விடுபடவேண்டும் என்பதற்காகவே இந்த சடங்கிற்கு பரிசேயர் முக்கியத்துவம் கொடுத்திருந்தார்கள். இது குருக்கள் மட்டும் கடைப்பிடிக்க வேண்டிய ஓர் சடங்கு. ஆனால் காலப்போக்கில் மக்களும் இதைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று பரிசேயர் அதை மக்கள்மீது திணித்தார்கள். தாமும் மக்கள் முன்பாக அடிக்கடி செய்துகாட்டினார்கள். இதனால் தம்மைத் தூய்மையானவர்கள் என்று பரிசேயர் எப்போதும் நினைத்து வந்தனர். ஆனால் அவர்கள் நினைத்ததைபோல தாம் தூய்மையாயில்லை என்பதை இயேசு தெளிவுபடுத்தினார்.

**இயேசுவின் கண்டனம்**

தாம் சுத்தமானவர்கள் என்று எண்ணுவதிலும் மக்களுக்குக் காட்டுவதிலும் பரிசேயர் பெருமைப்பட்டனர். ஆனால் இறைவன் மட்டிலும் ஏழைகள் மட்டிலும் அவர்கள் காட்டிய கஞ்சத்தனம் அவர்கள் உள்ளத்தால் சுத்தமற்றவர்கள் என்பதையே காட்டியது. இந்த உண்மையையே இயேசு மக்கள் முன்பாக தெளிவாக்கினார். வெளியே தூயவர்களாக, சுத்தமானவர்களாக இவர்கள் தம்மைக் காட்டிக்கொண்டாலும் உட்புறத்தில் கொள்ளையும் தீமை யுமே நிறைந்திருந்தது. இவர்கள் மக்களை ஏமாற்றினாலும் உள்ளங்களை அறியும் ஆண்டவரை ஏமாற்ற முடியாது.

எமது வெளிவேட வாழ்வு பற்றியும் நாம் தெளிவாக இருக்க வேண்டும். அனைத்தையும் அறியும் ஆண்டவர் எமது உள்ளங்களையும் நன்றாக அறிந்திருக்கிறார். எமது வாக்கிற்கும் வாழ்விற்கும், வழிபாட்டிற்கும் வாழ்விற்கும் நெருங்கிய தொடர்பிருக்கிறதா என்றறிந்து செயல்படுவோம். நன்மைகளின் ஆண்டவர் எம்மை வழிநடத்துவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 15 – புதன் – ஐப்பசி 2008

கலா 5: 18–25 திபா 1: 1–6 லூக் 11: 42–46

## அவில்லா நகர் தூய தெரேசா

பரிசேயர், திருச்சட்ட அறிஞர்களுக்கு எதிரான இயேசுவின் கண்டனங்கள் தொடர்கின்றன. இவர்களது வாழ்வுக்கும் போதனைக்குமிடையே முரண்பாடுகள் பல இருந்தன. எனவே இவர்களை வெளிப்படையாகக் கண்டிக்க இயேசு தயங்கவில்லை. எமது வாழ்வில் நாம் காணும் வெளிவேடங்களையும் சிந்தக்க நற்செய்தி அழைக்கின்றது.

### இறைவனுக்குக் காணிக்கை

ஒரு யூதர் தனது வருமானத்தில் பத்தில் ஒரு பங்கு கடவுளுக்குக் கொடுக்க வேண்டும் என்பது இஸ்ரயேல் வாழ்வில் இருந்த சட்டம் (காண். எண் 18: 26, இச 26: 12). அதற்கும் மேலாக நிலத்தின் முதற்பலன்களும் கடவுளுக்குக் காணிக்கையாக செலுத்தப்பட்டன. இந்த சட்டங்களை பரிசேயர் குறைவில்லாமல் கடைப்பிடித்தனர். மக்களும் கடைப்பிடிக்க வேண்டுமென கருத்தாயும் கண்டிப்பாயும் இருந்தனர். ஆனால் இவர்கள் தமது வாழ்வில் ஏழைகளின் சொத்துகளை சூறையாடுவதிலும் வல்லவர்களாக இருந்தனர். நீதி, நேர்மை, இரக்கம், அன்பு இவர்களின் வாழ்வில் தென்படவில்லை. இதையே இயேசு கண்டித்தார்.

### மோசமான ஆன்மீகம்

பரிசேயர் பொது இடங்களில் முதல் இருக்கைகளையும், வணக்கத் தையும் எதிர்பார்த்தனர். தமது மோசமான ஆன்மீக வாழ்வின் மூலமாக அடுத்தவரையும் தீய வாழ்விற்கு வழிநடாத்தினார்கள். திறந்த வெளியில் வாளால் கொல்லப்பட்டவர், தானாக செத்தவர், மனித எலும்பு, அல்லது கல்லறையைத் தொடுபவர் தீட்டுப்பட்டவர் என்பது சட்டமாக இருந்தது (காண். எண் 19: 16). இயேசுவின் கூற்றுப்படி பரிசேயர்கள் அடையாளம் தெரியாத கல்லறைகள். ஏனெனில் அவர்களுக்குள் இருக்கும் அழுக்குகள் இறைவனுக்கு மட்டுமே தெரியும். இவர்களை கடுமையாகச் சாடுகின்றார் இயேசு. இதனால் பல எதிர்ப்புகளையும் இயேசு எதிர்கொண்டார்.

இன்று இந்த பரிசேயரைப் போல நாமும் பல தீமைகளோடு வாழ்ந்து அடுத்தவரையும் தவறாக வழிநடத்தலாம். தெளிவாயிருந்து திருந்தி வாழ்வோம். எமது வாழ்வு எப்போதும் அடுத்தவருக்குத் தடையாக இல்லாமல் வாழ்வாக மாற விரும்பி செயல்படுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 16 – வியாழன் – ஐப்பசி 2008

எபே 1: 1–10 திபா 98: 1–6 லூக் 11: 47–54

## தூய எட்விஜ், மார்கரீத் மரியா அலக்கோக்கு

இயேசுவின் கண்டனங்கள் தொடர்கின்றன. ஏனெனில் இஸ்ரயேலின் மதத் தலைவர்கள் என்று கூறி பெருமைப்படும் இவர்களது வாழ்வு தீயதாக அமைந்திருந்தது. இந்த வெளிவேட வாழ்வையும் இவர்களது உள்ளங் களையும் ஆண்டவர் தெளிவாகவே அறிந்திருந்தார்.

**பரிசேயர், மறைநூல் அறிஞர்**

இயேசு இந்த இரண்டு பிரிவினரையும் கடுமையாக கண்டித்ததை லூக்கா நற்செய்தியாளர் 11ம் அதிகாரத்தில் குறிப்பிடுகின்றார். இவற்றுக்கான பொதுவான காரணங்களைப் பார்ப்போம்.

1. இவர்கள் வெளிப்புறத்தை சுத்தமாக வைத்திருந்தனர். ஆனால் இவர்களது உள்ளங்கள் கறைபட்டிருந்தன.
2. சட்டத்தின்படி வருவாயிலும் விளைச்சலிலும் பத்தில் ஒரு பகுதியைக் கொடுத்த இவர்கள் வாழ்வில் நீதியைக் கடைப்பிடிக்கவில்லை.
3. அடுத்தவரிடமிருந்து பாராட்டுகளைப் பெறவும், பொது இடங்களில் மக்களது கவனத்தை ஈர்க்கவும் இவர்கள் கருத்தாய் இருந்தனர்.
4. தமது சமய சட்டங்களையும் சடங்குகளையும் மக்கள்மீது திணித்து அவர்களுக்கு பெரும் பாரத்தை வருவித்தனர்.
5. இயேசு பற்றிய உண்மையை ஏற்றுக்கொள்ள மறுத்து அவருக்கு எதிராகச் செயல்படவும் தொடங்கினர்.
6. அடுத்தவர் இயேசுவை ஏற்றுக்கொள்வதையும் எதிர்த்து வந்தனர்.

இவ்வாறு தமது வெளியடையாளங்களில் அதிக கவனம் செலுத்தி உளமாற்றத்தையும் தூய்மையையும் மறந்தனர்.

**எம் வாழ்வில் வெளிவேடம்**

பரிசேயர், மறைநூல் அறிஞர்கள் போல எமது வாழ்விலும் நாம் வெளித்தோற்றத்தில் மட்டும் நல்லவர்களாக வாழலாம். நாம் சமூகத்தவரை ஏமாற்றலாம். ஆனால் உள்ளங்களை அறியும் ஆண்டவரை ஏமாற்ற முடியாது.

எமது உள்ளங்கள் இறைவனால் வழிநடாத்தப்படட்டும். அப்போது எமது வாழ்வு சீரியதாக அமைந்துவிடும். வாழ்வில் நாம் எந்த நிலையில் இருந்தாலும் எமது வாக்கிற்கும் வாழ்விற்கும் எப்போதும் தொடர்பு இருக்க வேண்டும். அப்போது எமது வாழ்வே இறையன்பைப் பிரதிபலிக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 17 – வெள்ளி – ஐப்பசி 2008

எபே 1: 11–14 திபா 33: 1–5, 11–13 லூக் 12: 1–7

### தூய அந்தியோக்கு நகர் இஞ்ஞாசி

இயேசுவைப் பின்செல்வதென்பது இலகுவானதல்ல. இயேசுவிற்கு எமது வாழ்வின் மூலமாக சான்று பகர்வதென்பது பல சவால்களைக் கொண்டது. ஏனெனில் உலகம் தரும் கவர்ச்சி, உலகம் தரும் எதிர்ப்பு இரண்டையும் தாண்டி நாம் சான்று நிறைந்த வாழ்வு வாழ்ந்துகாட்ட வேண்டும். ஒருவர் தனது சுயநலத்தினால் அல்லது எதிர்ப்புகளுக்குப் பயந்து உண்மைக்குப் புறம்பான வாழ்வு வாழலாம். ஆயினும் கிறிஸ்துவுக்கு சான்று பகர்வதே எமது இலக்காக வேண்டும். இந்த சிந்தனைகளைத் தருகின்றது நற்செய்தி.

**இயேசுவை மறுதலித்தல்...**

சில காரணங்களுக்காக நாம் இயேசுவை மறுதலிக்கின்றோம். எப்போது?

1. நாம் கிறிஸ்தவர் என்பதை யாரும் அறியமாட்டார்கள் என்றறியும்போது,
2. நீதிக்காக நாம் குரல் கொடுக்காதபோது,
3. இறைவனோடு எமக்குள்ள உறவு பற்றி அமைதி காக்கும்போது,
4. உலக சிந்தனைகளோடு நாம் ஒத்துப்போகும்போது,
5. கிறிஸ்தவ பண்புகளுக்கு எதிரான கலாசாரங்களோடு இசைந்து போகும்போது.

**இயேசுவை ஏற்றுக்கொள்தல்...**

1. கிறிஸ்து மையமான, ஒழுக்கம் நிறைந்த நேரிய வாழ்வு வாழும்போது,
2. எமது விசுவாசத்தை நாம் அடுத்தவரோடு பகிர்ந்துகொள்ளும்போது,
3. தேவையிலிருப்பவருக்கு உதவிடும்போது,
4. நீதிக்காக குரல்கொடுக்கும்போது,
5. பகைவரையும் அன்பு செய்யும்போது,
6. கிறிஸ்துவின் பணிசெய்ய எமது ஆற்றல்கள், வளங்களைப் பயன் படுத்தும்போது நாம் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்கிறோம்.

இயேசுவை ஏற்றுக்கொள்ளவோ, மறுதலிக்கவோ எமக்கு சுதந்திரமுண்டு. அவரை ஏற்று அவருக்கு சான்றுபகர்ந்தால் உலகின் எதிர்ப்புகளையும் சந்திக்க வேண்டிவரும். ஆயினும் கொன்றபின் நரகத்தில் தள்ள வல்லவருக்கே அஞ்சுங்கள் என்று உறுதி தருகின்றார் இயேசு. ஏனெனில் உலக படைப்புகள் அனைத்திலும் நாம் மேலானவர்கள். ஆண்டவர் எமக்கு வேண்டிய பாதுகாப்பைத் தருகின்றார். எனவே ஆண்டவரில் நம்பிக்கை வைத்து அவரது கட்டளையை வாழ்ந்து காட்டுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 18 – சனி – ஐப்பசி 2008

2திமொ 4: 9–17 திபா 145: 10–13, 17–18 லூக் 10: 1–9

## நற்செய்தியாளரான தூய லூக்கா பெருவிழா

இறைவாக்குப் பணியில் தனது எழுத்தின் மூலமாக பெரும்பங்காற்றியவர் தூய லூக்கா. நற்செய்தியையும் திருத்தூதர் பணி நூலையும் எழுதி பாரிய பங்களிப்புச் செய்துள்ளார். இவரை சிறப்பிக்கின்ற இந்த நாளில் இறையாட்சி வளர எமது பங்களிப்பை சிந்தித்துப் பார்ப்போம்.

**இரக்கத்தின் நற்செய்தி**

இழந்துபோனதை மீட்கவே மானிடமகன் வந்தார் என்பது லூக்கா எழுதிய நற்செய்தியின் மையக் கருத்து. பாவிகள், பெண்கள், ஏழைகள், சமாரியர் மட்டமானவர்கள் எனும் மனநிலையோடு இருந்த யூத சமூகத்தில் இவர்களும் இறைவனின் பிள்ளைகளே என்பதை தனது நற்செய்தியில் காட்ட விழைகின்றார் லூக்கா. பிற இனத்தவரும் இயேசுவை அறிந்து மீட்படைய வேண்டும் எனும் நோக்கம் அவருக்கு இருந்தது. இவர் ஓர் வைத்தியர். பவு-லோடு சேர்ந்து பணியாற்றியவர்.

**பணிக்கென சீடர்கள்**

இயேசு பணிக்கென 72 சீடர்களை நியமித்து இருவர் இருவராக அனுப்பினார். பணியின் தேவை, ஆள் பற்றாக்குறை, பணியின்போது வரக்கூடிய ஆபத்துகள், பணியின்போது செய்ய வேண்டியவை என்று பல விடயங்களையும் இயேசு அவர்களுக்குச் சொல்லி அனுப்பினார். இயேசு தொடங்கிய மீட்புப் பணி தொடர வேண்டும். இதற்கு இயேசு பலரையும் அழைத்தார். பயிற்சிகள் கொடுத்து பணிக்கென அனுப்பினார். திருத்தூதர்கள், சிறப்புச் சீடர்கள் மூவர், இன்றைய நற்செய்தியில் அனுப்பப்பட்ட சீடர்கள் என்று பலரும் அனுப்பப்பட்டனர்.

இவ்வாறு நற்செய்தி எங்கும் பரவ லூக்காவைப் பயன்படுத்திய ஆண்டவர் இன்று எம்மையும் பயன்படுத்துகின்றார். நாம் குடும்பத்தில் அல்லது சமூகத்தில் அல்லது குருவாக, துறவறத்தவராக வாழலாம். எந்த நிலையிலும் எமது நல்ல வாழ்வின் மூலமாக நாம் இறைசெய்தியை அறியாதவருக்குக் கொடுக்கலாம். எமது மனநிலை, வாழ்வு பல செய்திகளை அடுத்தவருக்குக் கொடுக்கும். இல்லம், பங்கு, அலுவலகம், சமூகம், பாட-சாலை போன்ற பல இடங்களில் பலரையும் சந்திக்கும் நாம் எமது நீதியான, நேர்மையான வாழ்வின் மூலமாக சான்று பகர்கின்றோமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொதுக்காலம் 29ம் ஞாயிறு
## 19 – ஐப்பசி 2008

எசா 45: 1, 4–6 திபா 96: 1, 3–10 1தெச 1: 1–5 மத் 22: 15–21

## உலக மறைபரப்பு ஞாயிறு

கடவுள் அரசர்க்கெல்லாம் அரசர். அவர் ஒருவரே கடவுள். அவரைத் தவிர வேறு கடவுள் இல்லை என்பதை ஆண்டவர் தனது செயலின் மூலமாக நிரூபிக்கின்றார். இறைவனின் சக்தியையும் அவர் தன் சக்தியை பயன்படுத்திய விதத்தையும் அவரது ஞானத்தையும் இன்றைய ஞாயிறு வாசகங்கள் தருகின்றன. மனித சக்திக்கு முன்னுரிமை கொடுக்கும் இந்த உலகிற்கு இன்றைய வாசகங்கள் சவாலாகின்றன.

**சைரசு அரசனாக...**

சைரசு ஓர் பிற இனத்தவர். ஆனால் ஆண்டவர் அவரை அபிஷேகம் செய்து பலவற்றை சாதித்தார். விவிலியத்தில் இங்குதான் ஒரு பிற இன அரசர் அபிஷேகம் செய்யப்பட்டதை வாசிக்கிறோம். கடவுள் சர்வ வல்லமை உடையவர். தனது பணியை நிறைவேற்ற அவர் தனக்கு விரும்பியோரை அபிஷேகம் செய்கிறார். சைரசின் அரசு அன்று மிகப் பலம்வாய்ந்த அரசாகவும் பல நிலப்பரப்பைக் கொண்டதாகவும் இருந்தது. இது அசிரியா, பாபிலோன் போன்ற பேரரசுகளையும் உள்ளடக்கியிருந்தது. சைரசு எருசலேம் மீண்டும் கட்டியெழுப்பப்பட அவர் அனுமதிப்பார். சைரசு அரசர் தன் காலத்தில் பாரிய பணி செய்துள்ளார். இவருக்கு நானே ஆண்டவர், என்னையன்றி வேறு கடவுள் இல்லை என்று ஆண்டவர் தன்னை வெளிப்படுத்துகின்றார்.

**ஆண்டவரின் சக்தி**

பிற இனத்தவரையும் பயன்படுத்தி தனது திட்டங்களை தனது விருப்பத்திற்கு ஏற்ப நிறைவேற்றுபவர் ஆண்டவர். பிற இனத்தவர் யூதர்களால் ஏற்றுக்கொள்ளப்படாதவர்கள். ஆயினும் இறைவன் இவர்களை பயன்படுத்திய சம்பவங்கள் பல. அவரை யாருக்கும் ஒப்பிட முடியாது (காண். எசா 40: 25). அவரே தொடக்கமும் முடிவும். அவரன்றி வேறு யாரும் கடவுள் இல்லை (காண். எசா 44: 6). சைரசை தெரிவுசெய்ததும் இறைவன் தனது வல்லமையை வெளிப்படுத்தவே.

இறைவனின் செயல்கள் மகத்தானவை. அவரது ஞானத்தை மனிதரால் புரிந்துகொள்ள முடியாது. தனது திட்டத்தின்படி அவர் அனைத்தையும் நிறைவேற்றுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இயேசுவுக்கு எதிராக சதி**

பாலஸ்தீனாவில் பரிசேயர்கள் உரோமையரின் ஆக்கிரமிப்பை எதிர்த்து வந்தனர். ஏரோதை ஆதரிக்கும் ஒரு குழுவினர் ஏரோது அந்திப்பாசையும் உரோமையரின் திட்டங்களையும் ஆதரித்து வந்தனர். பரிசேயரும் ஏரோதியரும் பரம விரோதிகள். இவர்களுக்குள் பெரும்பகை இருந்தது. ஆயினும் இந்த இரு பிரிவினருக்கும் இயேசு பொது எதிரியாக இருந்ததால் இவர்கள் இயேசுவை ஓரங்கட்ட ஒன்றுசேர்ந்தனர். பரிசேயர் தம் சீடரை ஏரோதியருடன் இயேசுவிடம் அனுப்பி வைத்தனர்.

பாலஸ்தீனாவில் அன்று சமயம், அரசியல் என்று இரண்டு பிரிவுகள் இருந்தன. தமது ஆட்சிக்கு தடைகள் இல்லாதவரை சமய சட்டங்களில் உரோமையர்கள் தலையிடுவதில்லை. இதன் பின்னணியில் இயேசுவை கேள்வி கேட்டு மடக்க பரிசேயரும் ஏரோதியர்களும் இயேசுவிடம் சீசருக்கு வரி செலுத்துவது முறையா இல்லையா என்று கேட்டார்கள். உரோமைய அரசு நிலைக்க யூதர்கள் வரி செலுத்தக் கட்டாயப்படுத்தப்பட்டார்கள். யூதரோ இதை எதிர்த்தார்கள். ஏனெனில் இந்தப் பணம் நேரடியாக சீசரின் கஜானாவுக்குச் சென்றது. அதிலிருந்து ஒரு தொகை பிறஇன ஆலயப் பராமரிப்புக்கும் சென்றது. நாணயத்தில் சீசரின் முகம் பதியப்பட்டிருப்பது இஸ்ரயேலரின் உரோமைய அடிமைத்தனத்தை நினைவூட்டியது.

**இயேசுவின் பதில்**

இயேசு ஆம் என்று சொன்னாலும் அல்லது இல்லை என்று சொன்னாலும் அவரை சிக்கலில் மாட்டவைக்கலாம். ஆம் என்றால் அவர் கடவுளுக்கு எதிராகப் பேசுகிறார் என்று பரிசேயர் குறை கூறலாம். இல்லை என்றால் உரோமைய அரசுக்கு எதிராகப் பேசுகிறார் என்று ஏரோதியர் அவரைப் பிடித்து உரோமையரிடம் கையளிக்கலாம். இது சீசருக்கு செய்யும் பாரிய துரோகமாகிவிடும். ஆனால் இயேசுவோ அவர்களது தீய எண்ணங்களை அறிந்து ஒரு நாணயத்தைக் கேட்டு சீசருக்கு உரியதை சீசருக்கும் கடவுளுக்கு உரியதை கடவுளுக்கும் கொடுங்கள் என்றார். இவ்வாறு பரிசேயர், ஏரோதியரின் வெளிவேடங்களை வெளிப்படுத்தி அவர்களை தலைகுனியச் செய்தார் இயேசு.

**எம் வாழ்வில்...**

கடவுள் ஒருவரே. ஆயினும் நாம் இந்த உலகில் வாழ்வதால் அரசியல் சட்டங்களுக்கும் உள்ளாகின்றோம். எம்மைச் சுற்றி பல அதிகாரிகள், தலைவர்கள், அரசர்கள் இருந்தாலும் அவர்கள் அனைவரும் கடவுளின் கருவிகள் என்பதை ஏற்று வாழ்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எபே 2: 1–10 திபா 100: 1–5 லூக் 12: 13–21

### பேராசை

ஒருவருக்கு செல்வம் இருப்பது தப்பல்ல. ஆனால் அது பேராசையாக மாறும்போது அவரது செல்வம் அவருக்கே தீமையாகிவிடும். செல்வம் பற்றிய இயேசுவின் போதனையை நற்செய்தி தருகின்றது. எமது வாழ்வின் முன்னுரிமைகளை ஆராய வாசகம் அழைக்கின்றது.

**பேராசையால் வரும் விளைவு**

இந்த உலகம் நிலையற்றது. உலகில் ஒருவர் நிறைவாக செல்வம் சேர்த்தாலும் மரணத்தின்பின்பு அது அவருக்கு எந்தவிதத்திலும் பயனுள்ளதாக இருக்காது. எனவேதான் அறிவற்ற செல்வரின் உவமையில் அனைத்தும் இருந்தும் இரவே மரணம் வரப்போகிறது என்றால் சேர்த்துவைத்த சொத்துக்கள் அவரைக் காக்காது எனும் உண்மையைத் தருகிறார் இயேசு.

உலகில் பணம் இல்லாமல் ஒருவர் வாழ முடியாது. எதைப் பெறவேண்டு மானாலும் பணம் தேவை. அதேவேளை தமது செல்வங்களை சேர்த்து இன்புறும் மக்களையும் நாம் எம் சமூகத்தில் பார்க்கிறோம்.

ஆயினும் கிறிஸ்தவர் எமது இலக்கு, முன்னுரிமைகள் என்ன? செல்வம் சேர்ப்பது அவசியம். பிள்ளைகளின் எதிர்காலத்திற்கு அது நன்மையாக வரும். ஆனால் செல்வம் சேர்ப்பதில் மட்டும் எமது எண்ணங்கள் இருக்க அது ஆசையாகி, பேராசையாகி அது எமது வாழ்வையே அழித்துவிடும் என்பதையும் மறந்துவிடக் கூடாது. எனவேதான் இயேசுவும் நற்செய்தியில் மிகுதியான செல்வத்தால் எமக்கு வாழ்வு வந்துவிடாது என்றார்.

**உண்மைச் செல்வம்**

உலகில் வாழும் கிறிஸ்தவர் நாம் உலகம் தரும் நிலையற்ற செல்வங்களைவிட நிலையான வாழ்வுக்குத் தேவையான செல்வங்களை சேர்க்கப் பழகவேண்டும். எமது நற்செயல்கள் மூலமாக நாம் சேர்க்கும் ஆன்மீக செல்வங்களே நாம் இறந்த பின்பும் எம்மை மீட்க வல்லன. இந்த நிலையான செல்வங்களைச் சேர்ப்பதே எமது இலக்காக அமைய வேண்டும். பொதுவாக எமது உழைப்பிற்கு உடன்பதில் எதிர்பார்ப்பது எமது வழமை. எமது அன்பு, இரக்கம், மன்னிப்பு, நற்செயல்கள் போன்றன உடன் நன்மைகளை எமக்குத் தராவிட்டாலும் அதுவே எமக்கு நிலைவாழ்வைத் தேடித்தர வல்லன. இதை உணர்ந்து தெளிவோடு நிலைவாழ்விற்கான செல்வங்களைத் தேடுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 21 – செவ்வாய் – ஐப்பசி 2008

எபே 2: 12–22 திபா 85: 8–13 லூக் 12: 35–38

### விழிப்பு

இயேசுவின் இந்த உலக வாழ்வு நிலையற்றது. நிலையான உலகிற்குச் செல்ல தகுதிபெற நாம் விழிப்பாயிருந்து எம்மை ஆயத்தம் செய்ய வேண்டும் என்பதை இயேசு பல உவமைகள் போதனைகள் மூலமாகக் கூறியுள்ளார். விழிப்பாயிருப்பதன் அவசியத்தை நற்செய்தி தருகின்றது.

**விழிப்புத் தேவை**

உலகிற்கு மனிதனாக வந்ததன் பணி முடிந்ததும் இயேசு தன் தந்தையிடம் செல்ல வேண்டும். உலகில் நிலையாக மனிதனாக இருக்க அவர் வரவில்லை என்பது அவரது போதனைகளிலிருந்து தெளிவாகின்றது. அவர் தந்தையிடம் சென்றாலும் தன் சீடர்களை திக்கற்றவர்களாக விட்டுவிட வில்லை. மாறாக, தந்தையிடம் சீடருக்கென்று இடங்கள் ஆயத்தம் செய்வார். இந்த நம்பிக்கையை இயேசு தன் சீடர்களுக்குக் கொடுத்துள்ளார் (காண். யோவா 16).

அதேவேளை தான் இந்த உலகைவிட்டுச் செல்ல வேண்டும் என்றும் சென்று மீண்டும் திரும்பி வருவதாகவும் இயேசு தொடர்ச்சியாகக் கூறிவந் துள்ளார் (காண். மத் 24–25, யோவா 14: 1–3). அவரது வருகை எப்போதும் இருக்கலாம். இந்த நம்பிக்கையில் தொடக்கத் திருச்சபையில் கிறிஸ்தவர்கள் கொடிய துன்பங்களை அனுபவித்தனர். அவரது வருகைக்காக தாம் ஆயத்தமாயிருந்து அடுத்தவரையும் மனமாற்றத்திற்கு அழைத்தனர். இந்த விழிப்பு எப்போதும் இருந்துவந்தது. இயேசுவின் வருகை இறுதித் தீர்வையாகவும் இருக்கலாம் என எதிர்பார்த்த இந்த கிறிஸ்தவர்கள் அதற்கு தம்மை ஆயத்தம் செய்தும் வந்தனர்.

**இன்று விழிப்பு**

ஆண்டவர் இரண்டாம் தடவை வருவார் என்பது எமது விசுவாசம். அதில் நாம் நம்பிக்கை வைத்திருந்தாலும் நாம் அந்த வருகைக்காக முழு ஆயத்தம் செய்துவருகின்றோமா? இந்த விழிப்பு எமக்கு எப்போதும் தேவை. திருடன் இன்ன சாமத்தில் திருட வருவான் என்று எமக்குத் தெரிந்தால் நாம் விழிப்பாயிருந்து எமது சொத்துக்களைக் காப்பாற்றுவோம். அதேபோல மானிடமகன் வரும் நேரம் எமக்குத் தெரியாது. நேரத்தைவிட ஆயத்தமே முக்கியம் என்பதை உணர்ந்து செயல்படுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 22 – புதன் – ஐப்பசி 2008

எபே 3: 2–12 எசா (பதிலுரை) 12: 2–6 லூக் 12: 39–48

## ஆயத்தம்

தலைவர் வரும்போது பணியாளர் ஆயத்தமாயிருந்து பணிவிடை செய்ய வேண்டும் என்பது உலக வழமை. அதையே இயேசு உவமையாக்கி நாம் அவரது இரண்டாம் வருகையின்போது முழு ஆயத்தத்தோடு இருக்க வேண்டுமென அழைக்கின்றார். எமது பதில் என்ன என்பதை சிந்திக்க வைக்கின்றது இன்றைய நற்செய்தி.

### ஆயத்தம் அவசியம்

அன்றைய சமூகத்தில் தலைவருக்கும் பணியாளருக்கும் இடையே பாரிய வித்தியாசம் இருந்தது. சீடன் குருவுக்கு மேற்பட்டவனல்லன் என்று இயேசு குறிப்பிட்டதைப்போல தலைவன் வரும்போது வீட்டுப் பொறுப்பாளர் விழிப்பாயிருந்து தன் பணிகளைச் செய்துகொண்டிருந்தால் தலைவரின் நல்லெண்ணத்தைப் பெற்றுக்கொள்வார். அவரும் வீட்டுப் பொறுப்பாளருக்கு இன்னும் பாரிய பொறுப்புகளைக் கொடுப்பார். மாறாக, அவர் பொறுப்பற்றவராக இருந்தால் அவருக்குத் தண்டனை நிச்சயம். அதேபோல ஆண்டவரின் வருகையும் அமைந்திருக்கும் எனும் செய்தியைத் தருகின்றார் இயேசு.

### இரண்டாம் வருகை

ஆண்டவரின் இரண்டாம் வருகை எப்போது இருக்கும் எனும் வாதம் தொடக்க திருச்சபையிலிருந்து இருந்துகொண்டே வருகின்றது. இதன் பின்னணியில் கிறிஸ்தவ சமூகங்களிடையே பல பிளவுகளும் விசுவாசக் குறைவும் இருந்தது. பவுல் தெசலோனிக்கருக்கு எழுதிய கடிதம் இதையே பின்னணியாகக் கொண்டுள்ளது. எதிர்பாராத நேரத்தில் இயேசுவின் இரண்டாம் வருகை என்பது எம்மை குறையோடு கைப்பற்ற இறைவனின் ஓர் திட்டமல்ல. ஆனால் அதிக மக்கள் ஆண்டவரை அறிந்து மனம்மாற வேண்டும் என்பதற்காக இறைவன் தனது வருகையை தாமதிக்கலாம் என்பது ஓர் கருத்து. எனவே அவரது வருகைக்கு முன்பாக நாம் எமது விசுவாசத்தை வாழ்ந்து காட்ட சந்தர்ப்பங்கள் அதிகம் உண்டு.

இன்று ஆண்டவரின் வருகை எப்போது என்று கேட்பதில் நேரத்தை செலவழிக்காமல் அவரது வருகை எப்போது நடைபெற்றாலும் அதற்கு நான் ஆயத்தமாக இருக்கின்றேனா என்பதே எனது கேள்வியாக வேண்டும். விடைகண்டு செயல்படுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 23 – வியாழன் – ஐப்பசி 2008

எபே 3: 14–21 திபா 33: 1–5, 11–12, 18–19 லூக் 12: 49–53

### அமைதி

நற்செய்தியில் அமைதியைக் கொணரவில்லை தீமூட்டவே வந்தேன் எனும் இயேசுவின் வார்த்தைகள் பெரும் சவாலாக எமக்கு வருகின்றன. அனைவரும் அமைதியாக, ஒற்றுமையாக வாழ வேண்டும் என்று விரும்பும் இக்காலத்தில் இயேசு குறிப்பிடும் அமைதி, பிளவு எதைக் குறிக்கின்றது என்று பார்ப்போம்.

**அமைதி**

ஆண்டவர் அமைதியின் மன்னர் என்று எசாயாவின் இறைவாக்கு (காண். எசா 9: 5, செக் 9: 10). சலோம் என்பதற்கு சமாதானம் என்பது பொருள். இவ்வாறு சலோம் என்று கூறி யூதர்கள் ஒருவரை ஒருவர் வாழ்த்துவது வழமை. இயேசுவும் பணிக்கென தன் சீடர்களை அனுப்பியபோது எந்த வீட்டிற்குள் சென்றாலும் இந்த வீட்டிற்கு அமைதி உண்டாகுக என்று சொல்லுங்கள் என்றார் (லூக் 10: 5). பாவிகளும் நோயாளிகளும் நலம்பெற்றபோது இயேசு அவர்களுக்கு அமைதியுடன் செல்க என்று சொல்லி அனுப்பியுள்ளார் (காண். லூக் 7: 50).

**பிளவுகள்**

அமைதி எனும் சொல்லை அடிக்கடி பயன்படுத்திய ஆண்டவர் நற்செய்தியில் பிளவை ஏற்படுத்தவே வந்தேன் என்றும் கூறுகின்றார். இங்கு அவர் குறிப்பிடும் பிளவு, பிரிவு என்ன? அவரது வாக்கிற்கு ஏற்ப நாம் வாழத் துணியும்போது அவரது பெயரால் பல பிளவுகள் ஏற்படும் என்பதையே இங்கு ஆண்டவர் குறிப்பிடுகின்றார் எனலாம்.

நாம் இயேசுவில், இயேசுவிற்காக வாழும்போது நீதிக்காகக் குரல் கொடுக்க வேண்டும், அநீதிகளை எதிர்க்க வேண்டும், அடுத்தவரை நிபந்தனையின்றி ஏற்றுக்கொள்ள வேண்டும், பகைவரையும் மன்னித்து நன்மைகள் பல செய்ய வேண்டும். இவ்வாறு வாழும்போது எமது குடும்பத்திலிருந்தும், சமூகத்திலிருந்தும் எதிர்ப்புகள் வர சந்தர்ப்பமுண்டு. அவற்றையும் எதிர்கொண்டு நாம் கிறிஸ்துவை வாழ்ந்துகாட்டும்போது ஆண்டவர் தருகின்ற நிறை அமைதி எமக்குக் கிடைக்கும்.

இன்று எனது அழைப்பு, அர்ப்பணம் என்ன? ஆழமான இயேசு அனுபவம் எனக்கு நிறைஅமைதியைத் தரட்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 24 – வெள்ளி – ஐப்பசி 2008

*எபே 4: 1–6 திபா 24: 1–6 லூக் 12: 54–59*

### அடையாளம்

காலத்தின் அறிகுறிகளைக் கொண்டு வரவிருக்கும் நாட்களை அறிய மனித சமூகம் தொடக்கத்திலிருந்தே கற்றிருந்தது. யூதர்களும் பல அடையாளங் களைக் கொண்டு எதிர்காலத்தை அறிந்தாலும் இயேசுவின் வருகை, செயல்கள், வாழ்வு எதைக் குறிக்கின்றது என்பதை உணர்ந்துகொள்ளத் தவறிவிடுகின்றனர். இதைச் சுட்டிக்காட்டிய இயேசு தெளிவோடு செயல்பட அழைக்கின்றார். காலத்தின் அறிகுறிகள் இன்று எமக்கும் சவாலே.

**பருவகால மாற்றங்கள்**

உலக சரித்திரத்தில் விவசாயம் பலராலும் செய்யப்பட்டுவந்த ஓர் தொழிலாகும். இதற்கு பருவகால மாற்றங்களை விவசாயி நன்கு அறிந்திருக்க வேண்டும். அல்லது விவசாயத்தில் நல்ல விளைச்சலைக் காண முடியாது. யூதர்களும் பருவகால மாற்றங்களை அடிப்படையாகக் கொண்டு வரவிருக்கும் காற்று, மழை, வெப்பம் போன்றவற்றைக் கணித்தார்கள். இவ்வாறு பருவ–காலம் தொடங்கி வாழ்வில் பல நிலைகளிலும் நடைபெறும் சம்பவங்களை அடிப்படையாகக் கொண்டு யூதர்கள் தமது எதிர்காலத்தை அறிந்து கொண்டார்கள்.

ஆனால் இயேசுவின் வருகை இவர்களுக்கு எந்த மாற்றத்தையும் ஏற்படுத்தவில்லை அல்லது மாற்றத்தை ஏற்றுக்கொள்ள இவர்கள் விரும்பவில்லை.

***அடையாளங்கள்***

திருமுழுக்கு யோவான் தொடங்கி இயேசு வரை பாலஸ்தீன யூதர்கள் பல சம்பவங்களை அவதானித்தனர். யோவான் தனது போதனையில் வரவிருக்கும் மெசியாவைப் பற்றி அறிவித்து மக்களை ஆயத்தம் செய்தார். அவரது போதனைகளில் இருந்த சவால்களை இவர்களால் மறுக்க முடியவில்லை. அதைவிட மேலாக இயேசுவின் வருகை, போதனைகள், புதுமைகள், இயற்கைமீது அவருக்கிருந்த அதிகாரம் அனைத்தையும் யூதத் தலைவர்கள் பார்த்தும் அவரை நம்பவில்லை அல்லது நம்ப விரும்பவில்லை. இது இவர்களின் மனநிலையைக் காட்டியது. நாமும் எம் வாழ்வில் காலத்தின் அறிகுறிகள் மூலமாக இறைவனின் அன்பையும் பராமரிப்பையும் உணர்கின்றோம். அவரில் நம்பிக்கை வைத்து வாழ்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 25 – சனி – ஐப்பசி 2008

எபே 4: 7–16 திபா 122: 1–5 லூக் 13: 1–9

### மனமாற்றம்

மனமாற்றமும் அதற்கான காலக்கெடு பற்றியும் இன்றைய நற்செய்தி எமக்குத் தருகின்றது. மனமாற்றத்திற்கான அழைப்பு அன்று முதல் இன்றுவரை தொடர்கின்றது. ஆனால் இந்த அழைப்பை உணர்ந்து உரிய காலத்தில் மனம்மாறி புதுவாழ்வு வாழ்கின்றோமா என்று சிந்திக்கத் தூண்டுகின்றது நற்செய்தி.

**மனம்மாற அழைப்பு**

ஒருவர் செய்த பாவத்திற்குத் தண்டனையாகவே அவருக்கு அழிவு வருகின்றது என்பது யூதர்கள் கொண்டிருந்த மனநிலை. அந்த அழிவு கணவர் அல்லது மனைவி இறப்பினாலோ, குடும்பத்தில் மரணம் ஏற்படு வதினாலோ, பெற்றோரை இழந்து அனாதையாவதினாலோ, தீராத நோய்களினாலோ வர லாம். இறைவனே தண்டிக்கிறார் என்பது யூதரின் கருத்து. அதே பின்னணியில் பலி செலுத்திக்கொண்டிருந்த கலிலேயரைப் பிலாத்து கொன்றான் எனும் செய்தியும் வந்தது. இவர்கள் செய்த பாவத்தினால்தான் இந்த அழிவு என்பது மக்களின் கருத்து.

இயேசுவோ சீலோவாமில் கோபுரம் விழுந்த சம்பவத்தையும் சுட்டிக் காட்டி மனம்மாற மறுப்பதே அழிவிற்குக் காரணம் என்கிறார். மக்கள் மனம்மாறி தமது வாழ்வை சீர்செய்யாமல் தொடர்ச்சியாகப் பாவத்தில் வாழ்ந்தபோது அவர்களை தண்டித்த சம்பவங்கள் பழைய ஏற்பாட்டில் பல உண்டு. எனவே மனமாற்றமே அவசியம். அந்த மனமாற்றம் புதுவாழ்வுக்கும் கொண்டுவரும்.

**மனம்மாற சந்தர்ப்பம்**

காய்க்காத அத்திமரம் உவமையை இயேசு இந்த சந்தர்ப்பத்தில் அங்கிருந்த மக்களுக்குக் கூறி இறைவன் பொறுமையுள்ளவர், சினம் கொள்ளத் தாமதிப்பவர் என்பதையும் நினைவூட்டுகின்றார். கடவுள் எமது குற்றங்கள் ஒவ்வொன்றிற்கும் எம்மைத் தண்டிக்கத் தொடங்கினால் எமது நிலை என்னவாகும். இயேசுவின் வருகை, வாழ்வே மனமாற்றத்திற்கு ஓர் சிறந்த அடையாளம். மனம்மாற அழைத்த இயேசு மன்னிக்கும் அதிகாரமும் கொண்டிருந்தார். அதைப் பயன்படுத்தியோர் சிலரே.

எமது வாழ்வில் மனம்மாறவும் புதுவாழ்வு வாழவும் பல சந்தர்ப்பங்கள் உண்டு. இறைவனோடும் அடுத்தவரோடும் ஒப்புரவாகி புதுவாழ்வு வாழ்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொதுக்காலம் 30ம் ஞாயிறு
## 26 – ஐப்பசி 2008

*விப 22: 21–27 திபா 18: 1–3, 46, 50 1தெச 1: 5–10 மத் 22: 34–40*

### அன்பு

இறைவனின் கட்டளைகளை இறை–மனித அன்புக் கட்டளைகளாக வகுக்கலாம். அனைத்துக் கட்டளைகளும் இறையன்பு, மனித அன்பு போன்ற இரண்டு கட்டளைகளுக்குள் அடங்கும். இந்த அன்பின் கட்டளையை நடைமுறையில் எவ்வாறு செயல்படுத்துவது எனும் போதனையும் யூத மக்களுக்கு அவசியமாக இருந்தது. ஏனெனில் இறைவன், தமது அழைப்பு, பிற இனத்தார் பற்றிய யூதர்களின் மனநிலை இறைவனின் கட்டளைக்கு முரணானதாக அமைந்திருந்தது. அன்பு நிறைந்த வாழ்வு வாழ செய்ய வேண்டியவைகளை இன்றைய ஞாயிறு வாசகங்கள் தருகின்றன. எமது அன்பின் செயல்கள் பிறர்நலம் நிறைந்தவைகளாக அமைந்திருக்கின்றனவா என்பதை சிந்திக்கவும் அவை தூண்டுகின்றன.

**அன்னியர்மீது பரிவு**

தமது அழைப்பை பெருமையாகக் கணித்த யூதர்கள் புனித நாட்டில் குடியேறியபின் தம்மை மிக உயர்வாகக் எண்ணி ஏனையோரை அந்நியராகக் கருதி வெறுக்கவும் தொடங்கினர் (காண். விப 12: 47–48). ஆனால் இஸ்ரயேலர் தம் மக்கள்மீதும் பிறஇனத்தவர் மேலும் அன்புகொண்டு, அவர்களை அடிமைகளாகக் கருதாது சகோதரராகக் கணித்து உதவ வேண்டும் என்று ஆண்டவர் கட்டளையிடுகின்றார். எகிப்தில் அந்நியராகத் துன்பப்பட்ட இவர்கள் தம்மைச் சுற்றியுள்ள ஏனைய மக்களைப் புரிந்துகொள்ள வேண்டும் என்று முதல் வாசகம் அழைக்கின்றது.

**துயருறுவோர்மீது பரிவு**

இறைவன் பத்துக் கட்டளைகளைக் கொடுத்தாலும் மேலும் நடைமுறைக்குத் தேவையான சட்டங்களையும் யூத சமூகத்திற்குக் கொடுத்துள்ளார். சமூகத்தில் விதவைகள், அனாதைகள், ஏழைகள் உள்ளனர். இவர்களும் கடவுளின் பிள்ளைகள், அவரது பராமரிப்பில் உள்ளவர்கள். இதை உணர்த்திய ஆண்டவர் அவர்களும் இஸ்ரயேல் மக்களால் பராமரிக்கப்பட வேண்டும் என்பது அவரது கட்டளை. எனவே இறைவன் மனிதரைப் படைத்து அவர்களை ஒருவர் ஒருவரது பராமரிப்பில் விட்டுள்ளார். அன்புக் கட்டளை இங்கு வாழ்ந்துகாட்டப்பட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இறைவனுக்கு முழு அன்பு

இஸ்ரயேல் மக்களுக்கு மொத்தமாக 613 சட்டங்கள் இருந்தன. இவை காலப்போக்கில் மக்களுக்கு பெரும் சுமையாக மாறியது. இந்நிலையில் இந்த சட்டங்களில் முதன்மையான சட்டம் எது எனும் வாதங்கள் எழுந்தன. பல அறிஞர்கள் தமது கருத்துகளை தெரிவித்தாலும் பொதுவானதாக எதுவும் இருக்கவில்லை. இந்தப் பின்னணியில் யூதத் தலைவர்கள் இயேசுவிடமே முதன்மையான கட்டளை எது எனும் கேள்வியை எழுப்பினார்கள்.

இயேசுவோ அவற்றை சுருக்கி இரண்டு சட்டங்களாக காட்டினார். முதலாவது இறைவனை முழுமையாக அன்பு செய்வது. யூதர்கள் தமது செபவேளையில் இதைச் செபிப்பர். யூதர்கள் இந்த சட்டத்தை தமது பிள்ளைகளுக்கு பரம்பரை பரம்பரையாக கூறவேண்டும் என்பதும் சட்டமாக இருந்தது. எங்கு இருந்தாலும் எங்கு சென்றாலும் இந்த கட்டளையை தியானிக்க வேண்டும். இதை சீட்டில் எழுதி கையிலும் நெற்றியிலும் வீட்டு நிலைகளிலும் கட்டிவைக்க வேண்டும் (காண். இச 6: 7-9). இந்த அன்பு வார்த்தைகளில் இருக்காமல் செயலிலும், அனுபவத்திலும் இருக்க வேண்டும். இந்த அன்பே அவர் படைத்த அனைத்துப் படைப்புகளையும் அன்பு செய்ய எம்மைத் தூண்டும். அவர் தந்த கட்டளைகளை முழுமையாக நிறைவேற்றவும் அவரது மனநிலையைக் கொண்டிருக்கவும் உதவும். இந்த அன்பு அடுத்தவரையும் அன்பு செய்யத் தூண்டும்.

## அடுத்தவர்க்கு முழு அன்பு

நான் என்னை அன்பு செய்வதுபோல அடுத்திருப்பவரையும் அன்பு செய்ய வேண்டும் என்பது இரண்டாவது கட்டளையாகும். நடைமுறையில் இந்த கட்டளையின் செயல்பாடுகளைப் பார்ப்போம்.

முதல் வாசகத்தில் யூத சமூகத்தை மட்டுமல்ல, அந்நியரையும், ஏழைகளையும், வறுமையில் இருப்போரையும் நாம் அன்பு செய்ய வேண்டும் என்று கடவுள் கட்டளையிடுகின்றார். இயேசுவும் நிபந்தனையின்றி தனது அன்பை தன் போதனைகள், செயல்களில் வெளிப்படுத்தினார். அதன் உச்சமாகவே அவர் தன்னை சிலுவையில் கையளித்தார்.

எம் வாழ்விலும் இயேசு குறிப்பிடும் இந்த அன்பின் கட்டளை வெறும் வார்த்தைகளில் இல்லாமல் செயலில் காட்டப்பட வேண்டும். யூதர்கள் சிந்தனையில் அயலவரை மட்டும் அன்பு செய்தால் போதும் என்று இருந்தாலும் இயேசுவின் மனநிலை அதுவல்ல. அந்த அன்பு நிபந்தனையற்றதாக மாறவேண்டும். அப்போதுதான் உண்மை அன்பை நாமும் அடுத்தவரும் அனுபவிக்க முடியும். அன்பின் மக்களாக வாழ்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எபே 4: 32–5: 8 திபா 1: 1–6 லூக் 13: 10–17

## அன்பு

இயேசுவின் அன்பு வாழ்ந்துகாட்டப்படுகின்றது. பதினெட்டு ஆண்டுகளாக உடல் ஊனமுற்ற ஒரு பெண்ணை இயேசு விடுவித்தார். அவர் அவ்வாறு செயல்பட்டது ஓய்வுநாளில் என்பதால் எதிர்ப்புகள் வந்தன. தொழுகைக்கூடத் தலைவரினதும் இயேசுவினதும் மனநிலைகளைப் பார்ப்போம்.

### தொழுகைக்கூடத் தலைவர்

தொழுகைக்கூடத் தலைவர் பல ஆண்டுகளாக அதே இடத்தில் பணியாற்றுபவர். அங்கு வருவோர் போவோரை அவருக்கு நன்கு தெரிந்திருக்கும். புதியவர்கள் வந்தாலும் அவரால் அறிந்துகொள்ள முடியும். இங்கு பதினெட்டு ஆண்டுகளாக தீய ஆவி பிடித்து உடல்நலம் குன்றிய பெண் இருக்கின்றார். சிறிதும் நிமிர முடியாத நிலையில் இவர் வாழ்ந்துவந்துள்ளார். தொழுகைக் கூடத்திற்கும் வந்துபோயிருப்பார். இவரது உடல் ஊனம் தொழுகைக்கூடத் தலைவருக்குத் தெரிந்திருக்கும். ஆயினும் அவருக்கு இப்பெண்ணின் உடல்நிலையைவிட ஓய்வுநாள் சட்டமே முதன்மையானதாக இருந்துள்ளது. எனவேதான் இன்று அல்ல, வேறு நாளில் வந்து குணம் பெற்றுக்கொள்ளுங்கள் என்றார் கோபத்தோடு. இவருக்கு சட்டமே முன்னுரிமை பெற்றது.

### இயேசுவின் மனநிலை

இயேசுவுக்கு இப்பெண்ணின் நிலையை முன்கூட்டியே அறிந்துகொள்ள வாய்ப்பிருந்திருக்காது. இப்பெண்ணைப் பார்த்ததும் ஓய்வுநாள் சட்டத்தைவிட அவளது துன்பகரமான உடல்நிலையே அவரது இதயத்தைத் தொட்டிருக்கும். எனவே அவர் செயல்பட்டார். இங்கு இயேசுவின் அன்பு மேலோங்கியது. எதிர்பார்த்தபடி அவருக்கு எதிர்ப்புகளும் வந்தன.

இயேசுவோ அவர்களது நாளாந்த செயல்களை வைத்தே அவர்களை வெட்கமடையச் செய்தார். ஓய்வுநாளில் அவர்களது ஆடு அல்லது மாடு கிணற்றில் விழுந்தால் அவர்கள் அதைக் காப்பாற்றுவர். இதை இயேசு சுட்டிக்காட்டி அவர்களுக்கு நல்ல பாடம் புகட்டினார்.

எம் வாழ்வில் நாமும் அவசியமில்லாதவற்றிற்கு முன்னுரிமை கொடுத்து அன்பைப் புறக்கணித்துவிடுகிறோம். அடுத்தவரில் நாம் வைத்திருக்கும் அன்பே முன்னுரிமை பெறவேண்டும். அந்த அன்பு நிபந்தனைகள் அற்ற அன்பாக மாறும்போது அடுத்தவர் வாழ்வு பெறுவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 28 – செவ்வாய் – ஐப்பசி 2008

எபே 2: 19–22 திபா 19: 1–4 லூக் 6: 12–19

### *திருத்தூதர்களான தூய சீமோன், யூதா பெருவிழா*

இயேசு பன்னிருவரைத் தேர்ந்தெடுத்த சம்பவம் நற்செய்தியில் குறிப்பிடப் படுகின்றது. இந்த பகுதியிலிருந்து நாம் பெறும் பாடம் என்ன என்பதைப் பார்ப்போம். எமது அழைப்பு பற்றியும் இப்பகுதி சிந்திக்கத் தூண்டுகின்றது.

**இயேசு செபத்தில்...**

இயேசு நாள் முழுவதும் பல இடங்களுக்குப் பயணம் செய்து பணிசெய்தாலும் மாலை வேளைகளிலும் இரவு நேரங்களிலும் அதிகாலையிலும் தந்தையோடு செபத்தில் ஒன்றித்திருந்த சம்பங்கள் நான்கு நற்செய்திகளிலும் தரப்படுகின்றன. அவர் பல முக்கிய முடிவுகள் எடுப்பதற்கு முன்பாக இரவு முழுவதும் செபத்தில் செலவிட்ட சம்பவங்களையும் நற்செய்தியாளர்கள் தருகின்றார்கள். இங்கு தனக்குப் பக்கபலமாக இருக்கவும் தனது பயிற்சியைப் பெற்று தனக்குப்பின் இறையாட்சிப் பணியைத் தொடரவும் பன்னிருவரைத் தெரிவு செய்தார். இயேசுவைச் சுற்றி பல சீடர்கள் இருந்தாலும் அவர் சிறப்புக் பணிக்கென பன்னிருவரைத் தேர்ந்தார். இவர்கள் திருத்தூதர்களென அழைக்கப்படுகின்றனர்.

**திருத்தூதர்களின் வேற்றுமை**

திருத்தூதர்கள் அனைவரும் யூதராக இருந்தாலும் இவர்கள் பல விடயங்களில் வேறுபட்டிருந்தார்கள். இவர்கள் மாறுபட்ட பின்னணியிலிருந்து வரும் சாதாரண மக்கள். மீன்பிடித்தொழில், வரிதண்டுதல் என்று பல துறைகளிலும் இவர்கள் இருந்துள்ளார்கள். தனது கடைசி நாட்களை நிர்ணயம் செய்வதிலும் இவர்களில் சிலரின் பங்கு இருக்கும் என்பதையும் இயேசு அறிந்திருந்தார். ஒருவர் காட்டிக்கொடுப்பார், ஒருவர் மறுதலிப்பார், உயிர்ப்பிற்குப் பின்பும் ஒருவர் நம்ப மறுப்பார், பிடிபடும்போது அனைவரும் ஓடிவிடுவார்கள் என்பதை இயேசு அறிந்திருப்பார்.

இவர்களுக்கு முன்பாக இயேசுவைத் தேடிவந்து பயனடைந்த திரளான மக்கள் கூட்டத்தையும் திருத்தூதர்கள் அறிந்திருப்பார்கள். இவர்களுக்கு இயேசுவைப்பற்றிய அறிவும் அவர் உலகிற்கு வந்ததன் நோக்கமும் தெரிந்திருக்க வேண்டும். ஏனெனில் இயேசுவிற்குப்பின் திருச்சபையை வழிநடாத்தப் போவது இவர்களே. இன்று எனது அழைப்பு சிறியதாக இருந்தாலும் அதில் முழுமையான ஈடுபாடு வைத்து செயல்படுவேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 29 ~ புதன் – ஐப்பசி 2008

எபே 6: 1–9 திபா 145: 10–14 லூக் 13: 22–30

### மீட்பு

எமது வாழ்வில் நாம் எந்த நிலையில் இருந்தாலும் மீட்புப் பெற நாம் உழைக்க வேண்டும். எமது வார்த்தைகளில் மட்டுமல்ல வாழ்விலும் அன்பு வெளிப்படுத்தப்பட வேண்டும் என்பதை நற்செய்தி வலியுறுத்துகின்றது. எமது அழைப்பையும் கிறிஸ்தவ வாழ்வையும் சிந்தித்துப் பார்க்க வாசகம் அழைக்கின்றது.

**மீட்பு சிலருக்கு மட்டுமா?**

மீட்பு பற்றிய கேள்வி இயேசுவிடம் முன்வைக்கப்படுகின்றது. மீட்பு அனைவருக்கும் என்றால் யாரும் நல்ல வாழ்வு வாழ முயலமாட்டார்கள். கடவுளையும் மறந்துவிடுவர். மீட்பு சிலருக்கு மட்டுமானால் ஏனையவர்கள் முயற்சி செய்வதையே விட்டுவிடுவார்கள். ஆனால் மீட்பு அனைவருக்கும் உண்டு. அதை அவரவர் தமது தூய வாழ்வின் மூலமாக அடைந்துகொள்ள வேண்டும் என்பதே இயேசு தரும் போதனை.

**வாழ்ந்துகாட்ட அழைப்பு**

உலகம் தரும் கவர்ச்சிகள், சவால்கள் பல. இவற்றையும் கடந்து உண்மைக் கிறிஸ்தவர்களாக வாழ வேண்டுமானால் அது இலகுவானதல்ல. அதுவே இடுக்கமான வழி. அன்றும் இன்றும் இறைவாக்குப் பணிக்காக பலர் அழைக்கப்படுகின்றனர். இவர்களில் பலர் தமது ஆற்றல்களைப் பயன்படுத்தி திறமையாக நற்செய்திப் பணியில் ஈடுபடுவர். ஆனால் இவர்கள் பல சோதனை களுக்கும் ஆளாகி இறைவனின் வழியில் வாழாது தவறிவிடுகின்ற சம்பவங்களை எமது சமூகங்களிலே பார்க்கிறோம். நற்செய்திப் பணி என்பது புனிதமானது. அதுவே இறுமாப்பாகி சுயநலப் பணியாக மாறும்போது உள்ளங்களை அறியும் ஆண்டவரின் தண்டனையிலிருந்து யாரும் தப்ப முடியாது. எனவேதான் கடைசி நாளில் உமக்காக நாம் எவ்வளவோ செய்தோம் என்று இவர்கள் ஆண்டவரிடம் கூறினாலும் நான் உங்களை அறியேன் என்று அவரே ஒதுக்கிவிடுவார்.

நாம் எந்தநிலையில் அழைக்கப்பட்டாலும் அழைப்புக்கேற்ற வாழ்வு வாழவேண்டும். எப்போதும் ஆண்டவருக்கு விசுவாசமாக வாழ்ந்துகாட்ட வேண்டும். சுயநலன்களுக்கு இடம்கொடுக்காது இறைபணிக்கு முன்னுரிமை கொடுத்து வாழ்ந்துகாட்டுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 30 – வியாழன் – ஐப்பசி 2008

எபே 6: 10–20 திபா 144: 1–2, 9–10 லூக் 13: 31–35

### மனமாற்றம்

மனம்மாறாத எருசலேமுக்காகப் புலம்புகிறார் இயேசு. அவரது புலம்பலுக்குக் காரணமில்லாமல் இல்லை. அவரது மனநிலையை அறிய முயன்று எமது வாழ்வோடு ஒப்பிட்டுப் பார்ப்போம்.

**எருசலேம்**

இயேசு ஏன் எருசலேமிற்காகப் புலம்பினார்? எருசலேம் முழு இஸ்ரயேல் நாட்டையும் அடையாளப்படுத்தியது. அது கடவுளின் நகர். இஸ்ரயேலின் மிகப் பெரிய நகர். நாட்டின் சமய, அரசியல் தலைநகர் அது. பல இடங்களிலும் வாழும் யூதர்கள் எருசலேமை நோக்கி அடிக்கடி யாத்திரை செல்வர். அது ஒரு புனித நகர். அதேவேளை கடவுளின் இறைவாக்கினர்களை புறக்கணித்த கசப்பான சரித்திரமும் எருசலேமிற்கிருந்தது (காண். 1அர 19: 10, எரே 2:30, 26: 20–23). இறைவாக்கினர்களை ஏற்க மறுத்ததுபோல எருசலேம் மெசியாவையும் புறக்கணிக்கும் என்பது நியதி. இயேசு தனது பணிநாட்களிலும் இதை அனுபவித்தார்.

**இறைத்திட்டம்**

இறைவனாகவே தனது முடிவை மாற்றினால் தவிர இறைவனின் திட்டத்திற்கு யாரும் தடையாக வரமுடியாது. இங்கு இயேசுவின் மீட்புப் பணிக்கு இரண்டு தடைகள் வந்தன.

1. *ஏரோது:* இங்கிருந்து போய்விடும், ஏரோது உம்மைக் கொல்லத் தேடுகிறான் என்று பரிசேயர் இயேசுவை எச்சரித்தது இயேசுவை சிக்கலில் மாட்டவைக்க அவர்கள் போட்ட திட்டமாக இருக்கலாம். ஆனால் இயேசு தயங்கவில்லை. கடுமையான பதிலையே கொடுத்தார். இயேசுவின் வாழ்வும் பணியும் மரணமும் ஏரோதினாலோ பரிசேயரினாலோ முடிவுசெய்யப்படுவதில்லை. அது இறைவனின் திட்டத்தின்படி நடைபெற வேண்டியவை.

2. *எருசலேம்:* எருசலேம் இயேசுவை ஏற்க மறுத்தாலும் அவரது பணி எருசலேமிலும் தொடரும் என்பதே உண்மை. இறைவனின் திட்டங்களை மனிதரோ (காண். மாற் 8: 31–33), அரசரோ, நகர்களோ கட்டுப்படுத்த முடியாது. அவை அவரது திட்டத்தின்படி நடைபெற்றே தீரும்.

எனது வாழ்விற்கு இறைவனின் திட்டங்களை அறிந்து, ஏற்று வாழ நான் முன்வரவேண்டும். அப்போது வாழ்வு வளம்பெறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 31 – வெள்ளி – ஐப்பசி 2008

பிலி 1: 1–11 திபா 111: 1–6 லூக் 14: 1–6

### ஓய்வுநாள்

இயேசு மீண்டும் ஓய்வுநாளில் குணமாக்கினார். அதைப் பார்த்துக்கொண்டு இருந்த பரிசேயருக்கு ஓர் செய்தியையும் கொடுத்தார். நன்மைகள் செய்யும் ஆண்டவருக்கு ஓய்வுநாள் தடையாக இருக்காது.

**ஓய்வுநாள் சட்டம்**

ஓய்வுநாள் சட்டம் யூதரின் வாழ்வில் மிக முக்கிய சட்டம். இந்த நாளில் ஒருவர் யாதொரு வேலையும் செய்யக்கூடாது. பரிசுத்தமாக இந்த நாளை நினைவுகூர வேண்டும். இறைவனைத் தியானித்து வழிபட வேண்டும் என்பதும் சட்டமாக இருந்தது (காண். விப 20: 11, இச 5: 12).

இயேசு பரிசேயர் ஒருவரின் வீட்டில் உணவருந்திய வேளை நீர்க்கோவை நோயுள்ளவரைக் குணமாக்கினார். இந்த நோய் ஒருவருக்கு வரும் சாபம் என்று கருதப்பட்டது (காண். எண் 5: 21–22). குணமாக்கியது குற்றமல்ல. ஆனால் ஓய்வுநாளில் குணமாக்கியதே குற்றமாகும். இதுபோன்ற சூழ்நிலைகளை நற்செய்திகளில் பல இடங்களில் நாம் வாசிக்கலாம். சட்டத்தின் கடமைக்கும் மனிதனின் தேவைக்கும் இடையே சமரசம் ஏற்பட வேண்டும். மீட்படைய சட்டத்தைக் கடைப்பிடித்தால் மட்டும் போதும் என்றிருந்தனர் யூதர்கள். இதனால் இவர்களுக்கும் இயேசுவிற்கும் பல முறுகல் நிலைகள் ஏற்பட்டன. மனிதத் தேவைகளுக்கு முன்னுரிமை கொடுக்க இயேசு முற்பட்டாலும் அவர் சட்டத்தை மீறுகிறார் என்றே குறைகூறினார்கள். மக்களின் தேவைகள் இவர்களுக்கு பெரிதாகத் தெரியவில்லை. மனிதத் தேவைகளுக்கு இவர்களது மனம் இடங்கொடுக்கவில்லை.

**இயேசுவின் போதனை**

இயேசுவோ நடைமுறை வாழ்வில் உள்ள தேவையை அடிப்படையாக வைத்தே அவர்களுக்கு நல்ல போதனையைக் கொடுத்தார். பரிசேயராக இருந்தாலும் அவர்களது வாழ்வில் தேவையென்று வந்தால் அவர்களும் சட்டத்திற்கு விதிவிலக்கு செய்யத் துணிவார்கள். எனவே சட்டம் என்று மக்களுக்கு இருந்தாலும் அது அவர்களுக்குப் பாரமாக ஒருபோதும் இருக்கக் கூடாது. மாறாக, அது இறை–மனித உறவுகள் வளர உதவியாகவே இருக்க வேண்டும். சட்டங்களையும் கடந்து நாம் அன்பை முழுமையாக செயல்படுத்தும்போது அதுவே அடுத்தவர்க்கு வாழ்வு கொடுக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திவெ 7: 2–4, 9–14 திபா 24: 1–6 1யோவா 3: 1–3 மத் 5: 1–12

## சகல தூயவர்களின் பெருவிழா

தூயவர்கள் திருச்சபையின் தூண்கள். இவர்கள் தமது தூய வாழ்வால் நல்ல போதனைகளைத் தந்துள்ளனர். தமது காலத்தில் பலவித இறையனுபவங்களைப் பெற்றுள்ளனர். ஒவ்வொருவரும் தனித்துவ முறையில் திருச்சபையின் வளர்ச்சிக்குப் பெரும்பங்களிப்பு செய்துள்ளனர். இன்றும் இவர்களது தூய வாழ்வு எமக்கு பெரும் சக்தியாக அமைந்துள்ளது. இவர்களில் பலர் தமது உண்மை வாழ்வால் மறைசாட்சியராகவும் இறந்துள்ளனர். இன்றும் எமது மீட்புக்காக பரிந்துபேசுகிறார்கள் என்பது எமது நம்பிக்கை. இயேசு இன்றைய நற்செய்தியில் குறிப்பிடும் பேறுகளை தூயவர்கள் தமது வாழ்வில் வாழ்ந்துகாட்டியுள்ளனர். தூய வாழ்விற்கு நாமும் அழைக்கப்படுகின்றோம்.

**பேறுபெற்றோர்**

மலைப்பொழிவுப் போதனையில் பேறுபெற்றோர் யார் என்று இயேசு குறிப்பிடுகின்றார். இங்கு எட்டுப் பெறுபேறுகள் தரப்படுகின்றன. இவை இயேசுவையே முழுமையாக படம்பிடித்துக் காட்டுகின்றன எனலாம். மனிதனாக இந்த உலகில் பிறந்து வளர்ந்தாலும் அவர் தனது இலக்கில் தெளிவாகவே இருந்தார். தந்தை தனக்குத் தந்த பணியை செய்து முடிப்பதே தன் பணி, உணவு என்றார். இந்த உலகிற்கு வந்ததன் நோக்கத்திலிருந்து விலகாமல் தந்தைக்குப் பிரமாணிக்கமுள்ளவராக இருந்துள்ளார் இயேசு. நற்செய்தியில் வரும் பெறுபேறுகளில் ஐந்தாவதை மட்டும் இன்றைய சிந்தனைக்கு எடுப்போம்.

**இரக்கமுடையோர்...**

தந்தையாம் கடவுளின் பணிசெய்ய வந்த இயேசு தந்தையின் இரக்கத்தை தனது வாழ்வில் காட்டினார். ஏழைகள், கைவிடப்பட்டோர், பாவிகள், விதவைகள், அனாதைகள், நோயாளிகள் என்று சமூகத்தால் ஒரங்கட்டப்பட்டவர்கள்மேல் அளவில்லாத இரக்கம் கொண்ட இயேசு அவர்களுக்கு பலவித கட்டுகளிலிருந்து விடுதலை கொடுப்பதில் ஆர்வமாக இருந்தார். இவ்வாறு கடவுளின் இரக்கம் அனைவருக்கும் உண்டு என்பதை அவர் தன் செயல்களில் காட்டினார்.

இரக்கமுடையவரா நான்? எனது மனநிலை, வாழ்வு இறையிரக்கத்தைக் காட்டுகின்றதா? எமது இரக்கம் அடுத்தவரை புரிந்துகொள்ளவும், அன்பு செய்யவும் தூண்டும். சிந்தித்து இரக்கமுள்ளவராக வாழ்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொதுக்காலம் 31ம் ஞாயிறு
## 02 – கார்த்திகை 2008

*மலா 1: 14–2: 1–2, 8–10 திபா 131: 1–3 1தெச 2: 7–9, 13 மத் 23: 1–12*

## இறந்த விசுவாசிகள் அனைவரது நினைவு

இறந்தவர்கள் எம்மோடு தொடர்பில் இருக்கிறார்கள் என்பது எமது நம்பிக்கை. அவர்கள் இறந்தாலும் அவர்களுக்காக செபிக்க வேண்டியது எமது கடமையாகவும் இருக்கின்றது. இறந்த எம்மவர்களை நினைவுகூரும் இந்த நாளில் எமது வாழ்வு, நிலைவாழ்விற்கான ஆயத்தங்களை ஆராய்ந்து பார்ப்போம். வாக்கிற்கும் வாழ்விற்கும் தொடர்பு இருக்கிறதா என்று சிந்திக்கத் தூண்டுகின்றன இன்றைய ஞாயிறு வாசகங்கள்.

***மலாக்கியின் கண்டிப்பு***

இறைவாக்கினர் மலாக்கி மூலம் கடவுள் தன் குருக்களுக்கு கடுமையான எச்சரிக்கை விடுத்தார். குருக்கள் பொறுப்பில் இருப்பவர்கள். மக்களை ஆன்மீகத்தல் வழிநடத்த வேண்டியது இவர்களது கடமை. இவர்கள் தவறும்போது ஆண்டவர் தலையிடுவார். இவர்களது தவறுகளை நாம் வகைப்படுத்தலாம்.

***1. கடவுளுக்கு மாட்சி:***

கடவுளை அவரது மாட்சி, சக்தியோடு ஏற்றுக்கொள்ள வேண்டும். ஆனால் இவர்கள் கடவுளைவிட தமக்கு அதிக கவனம் செலுத்தி கடவுளை மாட்சிப்படுத்தத் தவறிவிடுகின்றனர்.

***2. நெறிதவறி நடந்தார்கள்:***

கடவுளின் உடன்படிக்கைக்கு எதிராக இவர்கள் செயல்கள் அமைந்திருந்தன. இறைவனுக்குரிய முன்னுரிமையைக் கொடுக்கவில்லை. இவர்கள் இறைவனின் பணியாளர்களாக இருந்தாலும் அவரது விருப்பங்களை இவர்கள் அறிந்துகொள்ளவில்லை. இதனால் இவர்கள் மக்களையும் தவறான வழியில் நடத்தினார்கள்.

***3. ஓரவஞ்சனை காட்டினார்கள்:***

குருக்கள் கடவுளின் வழியில் நடக்காமல் இருந்ததோடு மட்டுமல்லாமல் தமது போதனைகளில் பாகுபாடு காட்டினார்கள். சில செல்வாக்கு மிக்க மனிதர்களில் தங்கியிருந்ததால் இவர்கள் சட்டங்களை மீறி செயல்பட்ட போது குருக்கள் அமைதி காத்தார்கள். இதுவும் கடவுளுக்கு சினத்தை ஏற்படுத்தியது. இவ்வாறு தமது போதனைக்கும் வாழ்விற்கும் ஏற்பட்ட முரண்பாடுகளை கடவுள் வன்மையாகக் கண்டித்தார்.

**இயேசு கண்டித்தார்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயேசுவின் காலத்தில் மறைநூல் அறிஞர், பரிசேயர் போன்ற யூதத் தலைமையின் வாழ்வு அவர்கள் போதனையிலிருந்து முரண்பட்டதாக இருந்தது. இவர்கள் சட்டங்களுக்கு அதிக முன்னுரிமை கொடுத்தாலும் காலப்போக்கில் சட்டங்களுக்கான விளக்கங்களை கடவுளின் சட்டங்களோடு சமமாகப் பார்த்தனர். இவர்கள் மேலதிகமாக இணைத்த சட்டங்கள் தீயவை என்றல்ல. ஆயினும் அதில் சில குறைபாடுகள் இருந்தன.

1. இவர்களால் உருவான மேலதிகச் சட்டங்கள் கடவுளின் சட்டங்களுக்குச் சமமானவை என்று இவர்கள் கருதினார்கள்.

2. மக்கள் சட்டங்களைக் கடைப்பிடிக்க வேண்டுமென அழுத்தங்கள் கொடுத்தாலும் சில சந்தர்ப்பங்களில் இவர்கள் அவற்றைக் கடைப்பிடிப்பதில்லை.

3. கடவுளை மகிமைப்படுத்துவதற்காக அல்ல, மாறாக, மக்களிடமிருந்து நன்மதிப்பைப் பெறவே இவர்கள் சட்டங்களைக் கடைப்பிடித்தனர்.

4. இவர்கள் சட்டங்களை நுணுக்கமாகப் படித்தாலும் அதன்படி வாழவில்லை.

இயேசு யூதத் தலைவர்கள் சட்டங்களைக் கடைப்பிடிக்கவில்லை என்று கூறவில்லை. மாறாக இவர்களது வெளிவேடங்களையே பகிரங்கப் படுத்தினார். சட்டங்களை நுணுக்கமாகப் படித்து அவற்றை நூற்றுக்கு நூறு வீதம் கடைப்பிடிக்க வேண்டும் எனவும் வலியுறுத்தினார்கள். இவர்கள் சட்டங்களிலும் அவற்றைக் கடைப்பிடிப்பதிலும் குறியாக இருந்ததால் மனிதரையும் அவர்களது நடைமுறைத் தேவைகளையும் கருத்திற்கொள்ளத் தவறிவிடுகின்றனர். எனவே இவர்கள் செய்த தவறுகள் சில:

1. ***அதிகார துஷ்பிரயோகம்:*** மக்களை வழிநடத்த வேண்டியது யூதத் தலைவர்களின் கடமை. அதை இவர்கள் செய்தாலும் இவர்கள் சட்டங்களுக்குக் கொடுத்த அளவுகடந்த அழுத்தம் மக்களுக்குச் சுமையாகியது. இதை இவர்கள் உணரத் தவறிவிடுகின்றனர்.

2. ***தற்புகழ்ச்சி:*** மக்கள் தம்மை மதிக்க வேண்டும், முதலிடங்களைத் தரவேண்டும், தமது சமயக் கடமைகளைப் பார்த்து தம்மைப் புகழ வேண்டுமென எதிர்பார்த்து செயல்பட்டனர். இதனால் இவர்களது மனநிலை இறைவனின் மனநிலையை ஒத்திருக்கவில்லை.

நாமும் யூதத் தலைவர்களைப் போல சில சந்தர்ப்பங்களில் தவறு செய்யலாம். அதை மறைக்க வெளிவேடக்காரராக மாறலாம். திருந்த சந்தர்ப்பங்களை ஆண்டவரே தருகின்றார். தெளிவாயிருந்து எம் வாக்கிற்கும் வாழ்விற்கும் உள்ள முரண்பாடுகளை நீக்கிவிடுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 03 – திங்கள் – கார்த்திகை 2008

பிலி 2: 1–4 திபா 131: 1–3 லூக் 14: 12–14

## ஏழைகள்

விருந்தளிக்கும்போது யாரை அழைக்க வேண்டும் என்று இயேசு இன்றைய நற்செய்தியில் குறிப்பிடுகின்றார். சமூகத்தில் விருந்துகள் பல காரணங்களுக்காகக் கொடுக்கப்படுகின்றன. திருமண விருந்து, பிறந்தநாள், மரணத்தின் பின் எட்டாம் நாள், குருத்துவம், துறவற வார்த்தைப்பாடு என்று பல காரணங்களுக்கும் விருந்து கொடுக்கப்படுகின்றது. இதன்போது எமக்கு இருக்கவேண்டிய மனநிலைகள் பற்றிய போதனையை இயேசு தருகின்றார். நற்செய்தி தரும் செய்திக்கு வருவோம்.

**ஏழைகள், முடியாதோர்**

கடவுள் உலகைப் படைத்து பல்கிப் பெருகி மண்ணுலகை நிரப்புங்கள் என்றார் (காண். தொநூ 1: 28). படைப்பை அவனது பராமரிப்பில் விட்டுவிட்டார். எனவே நான் என்ன என் சகோதரனுக்குக் காவலாளியோ? என்று கேட்ட காயினைப் போல நாம் பொறுப்பற்றவர்களாக இருக்காமல் அடுத்தவர் முன்னேற்றத்தில் நாமும் பங்கெடுக்க வேண்டும். விருந்துகளில் நாம் ஏழைகள், கைவிடப்பட்டோர், முடியாதோரை அழைக்காமல் எமக்குத் தேவையானவர்கள், உறவினர்கள், நன்மை செய்வோரை அழைப்பது வழமையாகிவிட்டது. இவர்களால் எமக்கு நன்மைகள் வந்தாலும் எமது தர்மம் இறைவனைச் சேர வேண்டுமானால் நாம் வசதியற்ற இவர்களைக் கவனிக்க வேண்டும்.

**இயேசுவின் மனநிலை**

இயேசுவும் ஏழைகளிடமும் பரிசேயர்களிடமும் சென்றார். பரிசேயர்கள் விருந்திற்கு அழைத்தபோது அவர் மறுக்கவில்லை. ஆயினும் அங்கு நடைபெறும் சம்பவங்களையும் பயன்படுத்தி உரிய போதனைகளை அவர்களுக்குக் கொடுப்பதை நற்செய்திகளில் வாசிக்கிறோம். சமுதாயத்தில் நோயாலோ அல்லது வேறு எந்த காரணத்தாலோ ஒதுக்கப்பட்டவர்கள்மீது எமது இரக்கம், அன்பு எப்போதும் இருக்க வேண்டும் என்பது இயேசுவின் கருத்து. பலருக்கு நாம் விருந்து கொடுத்தாலும் ஏழைகள்மீது எமக்கிருக்கும் பாசம் என்ன என்பதையும் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அவர்கள் பற்றிய எமது மனநிலை என்ன? அவர்களை அந்த நிலையிலிருந்து உயர்த்துவதற்கு நாம் தனிப்பட்ட, குடும்ப ரீதியிலும் பங்கு ரீதியிலும் எந்த முயற்சிகளை மேற்கொள்கிறோம்? அவர்கள்மீது தீராத பரிவு கொண்டு செயல்படுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 04 - செவ்வாய் – கார்த்திகை 2008

பிலி 2: 5-11 திபா 22: 25-31 லூக் 14: 15-24

## தூய சார்ள்ஸ் பொரோமியோ

பெரிய விருந்து பற்றிய உவமையில் அழைக்கப்பட்டவர்கள் எவ்வாறு வீட்டு உரிமையாளரின் அழைப்பை நிராகரித்தனர் என்று இயேசு குறிப்பிட்டு ஒதுக்கப்பட்டவர்களுக்கு வரும் ஆசீர் பற்றியும் தன் போதனையில் தெரிவிக்கிறார். நாம் இயேசுவின் அழைப்பை உணர்ந்து அதற்கேற்ப வாழ்கின்றோமா என்று சிந்திக்க வாசகம் அழைக்கின்றது.

### அழைப்பின் தன்மை

யூத சமூகத்தில் இரண்டு தடவைகள் அழைப்புகள் அனுப்பப்பட்டன. முதலாவது நடைபெறும் சம்பவம் பற்றிய பொது அறிவித்தல். இரண்டாவது அனைத்தும் ஆயத்தமானதும் கொடுக்கப்படும் அழைத்தல். இயேசுவின் உவமையில் வரும் அழைக்கப்பட்டோர் பணியாளர்களுக்கு பல காரணங்களைச் சொல்லி வரமுடியாது என்று அனுப்பி வைத்தனர்.
இஸ்ரயேலின் சரித்திரத்தில் கடவுள் இரண்டு அழைப்புகளை விடுத்தார்.
1. ***மோசே, இறைவாக்கினர் மூலமாக வந்த அழைப்பு.*** மக்கள் தமது வாழ்வில் விடுதலையை அனுபவித்தாலும் கடவுள் அனுப்பிய இறைவாக் கினர்களை ஏற்றுக்கொள்ளவில்லை. அவர்களுக்கு பல துன்பங்களையும் வருவித்தனர். ஏனெனில் உலகம், பணம், செல்வம், அதிகாரம் போன்றவற்றில் இவர்களது கவனம் இருந்தது.
2. ***இயேசு மூலமாக வந்த அழைப்பு.*** சமயத் தலைவர்களும் மக்களும் இறைவாக்கினர்களை ஓரளவு ஏற்றுக்கொண்டாலும் இயேசுவை ஏற்க மறுத்தனர். இயேசுவின் நன்மைத்தனங்களை சந்தேகக் கண்கொண்டே பார்த்தனர். இதனால் இயேசுவையோ, இயேசு தாங்கி வந்த கடவுளையோ, இயேசு கொண்டுவந்த புதுவாழ்வையோ அனுபவிக்க முடியவில்லை. இயேசு அனைவருக்காகவும் வந்தவர். நல்லவர், பாவிகள், நோயாளிகள், பிற இனத்தவர், யூதர்கள் என்று உலக மக்களுக்காக வந்தவர் அவர். அழைப்பை ஏற்று புதுவாழ்வு பெற்று நிலைவாழ்வை அடைவது அவரவர் சுதந்திரம். யூதத் தலைவர்கள் பழைய சட்டங்களிலும், சம்பிரதாயங்களிலும் பிடிவாதமாக இருந்ததால் இயேசு கொண்டுவந்த மாற்றங்களை இவர்களால் புரிந்துகொள்ள முடியவில்லை.

இயேசு நல்லவர். அவரது அழைப்பு எமது நன்மைக்கே வருகின்றது என்பதை உணர்ந்து அழைப்புக்கேற்ற வாழ்வு வாழ்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 05 ~ புதன் – கார்த்திகை 2008

பிலி 2: 12–18 திபா 27: 1, 4, 13–14 லூக் 14: 25–33

### சீடத்துவம்

ஒருவர் தனது சீடராவதற்குரிய தகுதி என்னவென்று நற்செய்தியில் இயேசு குறிப்பிடுகின்றார். நாம் இயேசுவின் உண்மைச் சீடர்களா என்று தியானித்து செயல்பட அழைக்கின்றது வாசகம்.

**சீடத்துவம்**

இயேசுவின் சீடராக ஒருவர் தம் குடும்பத்தவர், தம் உயிரையும்விட இயேசுவை மேலாகக் கருதவேண்டும். தன் சிலுவையை தாமே சுமக்க வேண்டும். தந்தை தாய் பேணுதல் என்பது இயற்கை நமக்குத் தரும் பாடம். உன் தந்தையையும் தாயையும் மதித்து நட என்பது கடவுளின் கட்டளை (காண். விப 20: 12). இயேசுவும் தனது பெற்றோருக்குப் பணிந்து நடந்தார் (காண். லூக் 2: 51). முப்பது ஆண்டுகள் நாசரேத்தில் பெற்றோருடன் இருந்தார். இவ்வாறு பெற்றோரை மதிப்பது என்பது இயற்கையும் சமயமும் தரும் போதனை. எனவே இயேசு இங்கு முரணானவற்றையா குறிப்பிடுகின்றார்? ஒருவர் இயேசுவைப் பின்செல்ல முன்வரும்போது பெற்றோரோ, குடும்பத்தவரோ யார் தடையாக வந்தாலும் அவர்களைத் துறக்கவும் தயாராக இருக்க வேண்டும் என்பதே செய்தி. எமது முன்னுரிமை இயேசுவாக இருக்க வேண்டும். அப்போது எமது பணியும் முழுமைபெறும்.

**சிலுவை சுமத்தல்**

சிலுவை சுமத்தல் என்பது பாலஸ்தீன மக்களுக்கு முக்கியமானதொன்று. குற்றவாளி ஒருவரை சிலுவை மரணத்திற்கு கொண்டுசெல்லும் போது அவர் அறையப்பட இருக்கும் சிலுவையை அவரே சுமக்கச் செய்வர் உரோமையர். தமது அதிகாரத்தையும், யூதர்கள் தமக்கு அடிமைப்பட்டவர்கள் என்பதையும், பெரிய குற்றவாளிகளுக்கு இதுவே தண்டனை என்பதையும் காட்ட உரோமையர் இவ்வாறு செய்வர். இது மக்களுக்குப் பாடமாகவே இருந்தது. இயேசுவின் சீடத்துவம் என்பது அவருக்கும் அவரது பணிக்கும் ஒருவர் முழுமையாக தன்னை அர்ப்பணிப்பதாகும். இங்கு இரண்டு வழியில்லை. இயேசுவா அல்லது உலகமா? இயேசுவைப் பின்செல்தல் என்பது மரணம் வரை செல்லுமளவிற்கு முழுமையானது.

இன்று என்னை நான் இயேசுவின் பணிக்கு கையளிக்க முடியுமா? அவரது அருளால் அனைத்தும் முடியும் என்பதை உணர்ந்து செயல்படுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 06 - வியாழன் - கார்த்திகை 2008

*பிலி 3: 3-8 திபா 105: 2-7 லூக் 15: 1-10*

## இறையிரக்கம்

காணாமற்போன ஆடு, காணாமற்போன திராக்மா பற்றிய உவமையில் இறைவனின் பரிவு, இரக்கத்தை தெளிவாக விளக்குகின்றார் இயேசு. யூதத் தலைவர்களோ வேறு மனநிலைகளோடு இருந்தனர். நற்செய்தி தரும் இந்த உண்மையை எமது வாழ்வோடு ஒப்பிட்டு ஆராய்வோம்.

**தலைவர்களின் மனநிலை**

யூத சமூகத்தின் சிந்தனையில் பாவிகள் கடவுளின் தண்டனையை அடையவேண்டும். நோயாளிகள் பாவிகள் என்பதால் அவர்களை இவ்வாறு கடவுள் தண்டிக்கிறார் என்பதும் இவர்களது மனநிலை. இந்நிலையில் இயேசு கடவுளாக இருந்தால் பாவிகளோடு உணவருந்த மாட்டார். அவர்களோடு எவ்வித உறவும் வைத்திருக்க மாட்டார் என்பது தலைவர்களின் எதிர்பார்ப்பு. அனைத்து எதிர்பார்ப்புகளையும் தகர்த்தெறிந்து இயேசு பாவிகளோடு உணவருந்தினார். அவர்களோடு உரையாடி அவர்களது பாவ நிலைகளிலிருந்து அவர்களை விடுவித்து வாழ்வு கொடுத்தார். முடக்குவாதமுற்றவரைக் குணமாக்கியது (காண். லூக் 5: 20), தைலம் பூசிய பாவிப்பெண் (காண். லூக் 7: 36-50), சமாரியப் பெண் (காண். யோவா 4), விபசாரத்தில் பிடிபட்ட பெண் (காண். யோவா 8: 1-11) போன்றன நல்ல உதாரணங்கள்.

**காணாமற்போன ஆடு, திராக்மா**

இந்த உதாரணங்களில் ஒரு முக்கிய விடயத்தை மட்டும் சிந்தனைக்கு எடுப்போம். நூறு ஆடுகளுள் ஒன்று, பத்து திராக்மாக்களுள் ஒன்று. இழந்தது ஒன்றுதானே, ஏனைய 99 ஆடுகளும் இருக்கின்றன என்றோ அல்லது ஏனைய ஒன்பது திராக்மாக்களும் இருக்கின்றன என்றோ நினைத்து அவற்றின் உரிமையாளர் இழந்ததைப்பற்றிக் கவலைகொள்ளாமல் இருந்திருக்கலாம். உலகக் கண்ணோட்டத்தில் இது சாத்தியம். ஆனால் இறைவனின் பார்வையில் இழந்த அல்லது தவறிய ஒன்றும் முக்கியமானதே. அந்த சிறிய இழப்பும் அவருக்குக் கவலையைத் தரும். அனைவரும் மீட்படைய வேண்டுமென்பதே அவரது விருப்பம். கண்டடைந்ததும் மகிழ்ச்சியும் அவருக்கு நிறைவானதாக இருக்கும். இன்று நான் தொலைந்துவிட்டேனா? ஆண்டவர் என்னையும் தேடி வருகின்றார். அவரைக் கண்டு மகிழ்வேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 07 – வெள்ளி – கார்த்திகை 2008

பிலி 3: 17–4: 1 திபா 122: 1–5 லூக் 16: 1–8

### முன்மதி

முன்மதியோடு செயல்பட்ட வீட்டுப் பொறுப்பாளர் பற்றிய உவமை–யே இன்றைய நற்செய்தி. கிறிஸ்துவில் எமக்குள்ள நம்பிக்கையை சோதிக்க பணம் நல்ல கருவியாகும். பொறுப்பாளர் தன்னைக் காத்துக்கொள்ள முன்மதியோடு செயல்பட்டாலும் கிறிஸ்து இவரது செயலை இருளின் மக்களுக்கு ஒப்பிடுகின்றார். எமக்குக் கொடுக்கப்பட்டவற்றை நாம் எவ்வாறு கையாள்கிறோம் என்று சிந்திக்கத் தூண்டுகின்றது நற்செய்தி.

**முன்மதியோடு பொறுப்பாளர்**

தலைவர் தம்மை விலக்கிவிட்டாலும் வீட்டுப்பொறுப்பாளர் முன்மதியோடு மக்களின் ஆதரவைப் பெற்றுக்கொள்கிறார். மிகுந்த உயர்நிலையிலிருந்து மிகவும் தாழ்ந்த நிலைக்குத் தள்ளப்படப்போகின்றார் இவர். எனவே குறுக்கு வழியில் மக்களின் ஆதரவைப் பெற்றுக்கொள்கின்றார். இதனால் இவரது தலைவரும் இவரைப் பாராட்டுகின்றார்.

**இயேசுவின் மனநிலை**

பொறுப்பாளரின் செயலை முன்மதியோடு செய்யப்பட்ட செயல் என்று இயேசு குறிப்பிட்டாலும் இவர் செய்த இந்த செயல் சரியெனக் கூறவில்லை. ஒளியின் மக்களைவிட இருளின் மக்கள் மிக்க முன்மதியோடு செயல் படுகின்றனர் என்றார். ஆனால் உள்ளங்களை அறியும் கடவுளிடமிருந்து இவர்கள் தப்ப முடியாது. நாம் எமக்குக் கொடுக்கப்பட்டுள்ள வளங்களை எவ்வாறு பயன்படுத்துகின்றோம்?

1. எமது வளங்கள் கடவுளுக்கே சொந்தமானவை. எனவே அவற்றை நாம் கவனமாகக் கையாள்வோம்.

2. பணம் நன்மைக்கோ தீமைக்கோ பயன்படுத்தப்படலாம். நாம் அதை நன்மைக்கு மட்டும் பயன்படுத்துவோம்.

3. பணம் பல சக்தியையும் தன்னகத்தே கொண்டுள்ளது. எனவே அதை கவனமாகவும் சிந்தனைத் தெளிவோடும் பயன்படுத்துவோம்.

4. எமது வளங்களை விசுவாசத்தோடும் கீழ்ப்படிவோடும் பயன்படுத்துவோம்.

இன்று எமது வளங்களை நல்ல முறையில் பயன்படுத்த நாம் முன்வர வேண்டும். எமது மகிமைக்காக அல்ல, கடவுளின் மகிமைக்காக அவற்றைப் பயன்படுத்தி அவரை மகிழ்விப்பதில் கருத்தாயிருப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*பிலி 4: 10–19 திபா 112: 1–2, 5–6, 8–9 லூக் 16: 9–15*

## நேர்மை

எமது நேர்மை பணவிடயத்தில் பரீட்சித்துப்பார்க்கப்படுகின்றது. முன்மதியோடு செயல்பட்ட வீட்டுப்பொறுப்பாளர் உவமையின் மூலமாக எமது மனநிலையை ஆராய அழைக்கின்றார் இயேசு. நாம் இன்று நம்பிக்கைக் குரியவர்களா? சிந்திக்கத் தூண்டுகின்றது நற்செய்தி.

**நம்பிக்கைத்தன்மை**

எமக்கு பல பொறுப்புகள் தரப்படலாம். அனைத்துப் பொறுப்புகளையும் திடீரென்று எம்மேல் யாரும் திணிக்க மாட்டார்கள். மாறாக எமது நம்பிக்கைத் தன்மை, செயல்படும் விதம் போன்ற பல விடயங்களைக் கருத்திற்கொண்டே எமக்கு அதிக பொறுப்புகள் தரப்படும். எனவே நாம் எப்போதும் சிறியவற்றிலும் நம்பிக்கைக்குரியவர்களாக இருக்க வேண்டும். உலக செல்வங்களோடு விண்ணகச் செல்வங்களை ஒப்பிட முடியாது. எனவே உலகில் நாம் நேர்மையாக இருக்கும்போது விண்ணக செல்வங்களுக்கும் உரித்துடையவராகி விடுவோம்.

**பணத்தின் சக்தி**

எமது வாழ்வில் கடவுளின் இடத்தைப் பிடிக்கவும் பணத்திற்கு சக்தி உண்டு. பணத்தில் நாம் கொள்ளும் சிறிய ஆசை காலப்போக்கில் அதுவே எமது எஜமானனாகி எம்மை ஆட்டிப்படைக்கும். ஆசை வளர வளர எமது நம்பகத்தன்மையும் குறைந்துவிடும். பணத்தின் சக்தியை எம் வாழ்வில் அறிய சில வழிகள் உண்டு:

1. பணம் பற்றிய சிந்தனையால் நாம் அடிக்கடி கவலைப்படுகின்றோமா?
2. பணம் சேர்க்க வேண்டுமென்பதற்காக நாம் செய்ய வேண்டியவற்றை தவறவிடுகின்றோமா?
3. எமது சொத்துகளைப் பராமரிப்பதில் அதிக நேரத்தையும் கவனத்தையும் செலவிடுகின்றோமா?
4. எனது பணத்தை இழக்கத் தயங்குகின்றேனா? அல்லது இழக்க வேண்டி வந்தால் அதிகக் கவலைப்படுகின்றேனா?

செல்வம் சக்தி, அதிகாரத்தை எமக்கு வாக்களித்தாலும் அது அவற்றைத் தருவதில்லை. எனவே செல்வம் பற்றிய எமது மனநிலை பற்றிக் கருத்தாயிருப்போம். உலக செல்வங்களைவிட விண்ணக செல்வமே சிறந்தது, நிலையானது என்பதை உணர்ந்து செயல்படுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொதுக்காலம் 32ம் ஞாயிறு
## 09 – கார்த்திகை 2008

எசே 47: 1–2, 8–9, 12 திபா 46: 1–8 1கொரி 3: 9–11, 16–17 யோவா 2: 13–22

## கோவில்

எருசலேம் கோவில் யூத மக்கள் வாழ்வின் உயிர்நாடி. கடவுள் வாசம்பண்ணும் இந்த கோவிலிற்கு எதிராக ஒருவர் பேசினாலே தேவநிந்தனை என்று கருதப்பட்ட காலத்தில் இயேசு கோவிலினுள் நுழைந்து அங்கு நடந்த அநீத செயல்களையும், சம்பந்தப்பட்டோரையும் விரட்டினார். உள்ளமே கடவுள் வாழும் கோவில் என்று பவுல் குறிப்பிடுவதையும் இன்றைய ஞாயிறு வாசகங்கள் எமக்குத் தருகின்றன. இறைவன் எம்மில் வாழ நாம் என்ன செய்ய வேண்டும் என்று சிந்திக்கவும் இவை தூண்டுகின்றன.

**எருசலேம் கோவில்**

எருசலேம் கோவில் இஸ்ரயேலர் வாழ்வில் மிக முக்கிய இடம் வகிக்கின்றது. ஆண்டவரின் உடன்படிக்கைப் பேழை புதிய நாட்டிற்குக் கொண்டுவரப்பட்டாலும் அதை வைத்துப் பாதுகாக்க உரிய இடம் இருக்கவில்லை. எனவே ஆண்டவருக்கென்று அழகான ஆலயம் அமைக்க தாவீது விரும்பினாலும் ஆண்டவர் அந்த யோசனைக்கு சார்பாக இருக்கவில்லை. தாவீது அதிகம் போர் செய்ததால் மிகுதியான குருதியைச் சிந்தியுள்ளார். இதனால் தாவீது அல்ல மாறாக அவரது மகன் சாலமோன் மூலமாக கோவில் கட்டப்படும் என்பது தாவீதுக்கு ஆண்டவரின் வெளிப்பாடு (காண். 1குறி 22: 6–10). எனவே தாவீது கோவில் கட்டுவதற்குத் தேவை யான பொருட்களை சேகரித்து வைத்தார் (காண். 1குறி 14–16).

சாலமோன் அரசரும் தனது ஆண்டவர் கொடுத்த ஞானத்தைப் பயன்படுத்தி கோவில் கட்டுவதற்குத் தேவையான பொருட்கள், ஆட்களை ஆயத்தம் செய்து கோவிலைக் கட்டி முடித்தார். பின் உடன்படிக்கையின் பேழை கொண்டுவரப்பட்டு கோவிலினுள் வைக்கப்பட்டது (காண். 1அர 5–8). இஸ்ரயேலின் 480 வருட சரித்திரத்தில் இது மிக முக்கியமான கட்டமாகும். இறைவனின் பிரசன்னத்திற்கும் பாதுகாப்பிற்கும் அடையாளமாக அமைந்துள்ள இந்தக் கோவில் யூத மக்களுக்கு பெருமை சேர்க்கும் ஒன்றாகும். ஆயினும் சாலமோனால் கட்டப்பட்ட இக்கோவில் பல யுத்தங்களின்போது தாக்கப்பட்டது (காண். 1அச 14: 25, 26). இறுதியில் இது பாபிலோனிய மன்னனால் அழிக்கப்பட்டது (காண். 2அர 24: 13, 2குறி 36: 7). கோவில் சூறையாடப்பட்டாலும் சீருஸ் அரசரால் பின் பொருட்கள் மீட்கப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மக்களின் கடமைகள்

கடத்தல் பெருவிழா எருசலேம் கோவிலில் வருடாவருடம் கொண்டாடப் பட்டது. ஒவ்வொரு யூதரும் இக்காலத்தில் எருசலேமிற்கு திருயாத்திரை செய்ய வேண்டுமென்பது சட்டம் (காண். இச 16: 16). இது ஒருவாரகால கொண்டாட்டம். எகிப்திய நாட்டில் அடிமை வாழ்விலிருந்து விடுதலை பெற்றதை நினைவுகூரும் விழா இது.

### இயேசுவின் கோபம்

***ஆடு, மாடு, புறா விற்போர்:*** தமது பாவங்களுக்காகப் பரிகாரப் பலி செலுத்துமாறு மக்கள் அறிவுறுத்தப்படுகின்றார்கள். பலர் தொலை தூரங்களிலிருந்து யாத்திரையாக எருசலேம் வரும்போது தமது இடங் களிலிருந்து காணிக்கைக்கென மிருகங்களைக் கொண்டுவர முடியாது. அவ்வாறு கொண்டுவந்தாலும் அந்த மிருகத்தின் உடலில் ஏதாவது குறைகண்டுபிடித்து அது பலியிடுவதற்கு உகந்ததல்ல என்று கூறி குருக்கள் கழித்துவிடுவார்கள். இந்நிலையில் இவர்கள் ஆலயத்தில் விற்கப்படும் மிருகங்களை வாங்கவேண்டிய நிலை ஏற்படும். இந்த சூழ்நிலையைப் பயன்படுத்தி வியாபாரிகள் பெரும் தொகைக்கு பலிப்பொருட்களை வியாபாரம் செய்து பெரும் இலாபம் சேர்த்தார்கள். குருக்களுக்கும் இந்த வருமானத்தில் பங்கு இருந்தது. இதனால் பாதிக்கப்பட்டது ஏழைகளே.

***ஆலய வரி:*** யூதர்களில் இருபது வயதுக்கு மேற்பட்ட ஒவ்வொரு ஆணும் ஆலய வரி செலுத்த வேண்டும். இது கோவிலின் பராமரிப்புக்காகப் பயன்படுத்தப்படும் (காண். விப 30: 11-16). தூர இடங்களிலிருந்து வரும் யூதர்கள் அந்நிய நாணயங்களை உள்நாட்டு நாணயத்திற்கு மாற்றியே ஆலய வரியைச் செலுத்த முடியும். இவ்வாறு மாற்றும்போது அதற்கு வேறாக ஒரு பெரிய தொகையை அறவிட்டார்கள் நாணயமாற்றுவோர். இதனாலும் ஏழைகள் பல கஷ்டங்களை அனுபவித்தார்கள்.

மொத்தத்தில் சிலருடைய தனிப்பட்ட வருமானங்களுக்காக கோவிலில் பெரிய வியாபாரமே நடைபெற்றது. இந்த அநீதியைக் கண்ட இயேசு கோபம் கொண்டு வியாபாரிகளையும் நாணயமாற்றுவோரையும் விரட்டியடித்தார்.

### உள்ளம் ஒரு கோவில்

தூய பவுலின் சிந்தனைப்படி எமது உள்ளம் கடவுள் வாழும் ஆலயம். அதை நாம் தூயதாக வைத்திருக்க வேண்டும். எனவே எமது நல்ல சிந்தனைகள், மனநிலைகள், வாழ்வின் மூலமாக உள்ளம் எனும் ஆலயத்தை தூயதாக வைத்து கடவுளை மகிமைப்படுத்துவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 10 – திங்கள் – கார்த்திகை 2008

*தீத் 1: 1–9 திபா 24: 1–6 லூக் 17: 1–6*

## தூய சிங்கராயர் நினைவு

இயேசு தனது போதனைகளைத் தொடர்கின்றார். அடுத்தவரை பாவத்தில் விழச் செய்வதும், அடுத்தவரது பாவங்களை மன்னிப்பதும் இன்றைய நற்செய்தியில் முன்னுரிமை பெறுகின்றன. பாவம், மன்னித்தல் பற்றிய எமது மனநிலையை சித்தித்துப் பார்க்கத் தூண்டுகின்றது வாசகம்.

### பாவத்தில் விழச் செய்தல்

இயேசுவின் காலத்தில் தவறாக போதனைகள் செய்தோர் சிலர் இருந்தனர். தமது போதனைகளுக்கு ஏற்ப வாழாதோர் பலர் இருந்தனர். இவர்கள் மக்களை தவறாகவே வழிநடத்தினார்கள். தமது போதனைகளாலும் தீய மனநிலையாலும் தவறான வழியையே காட்டினார்கள். கற்பிக்கும் ஒவ்வொருவரும் கடவுளால் கடினமாகத் தீர்ப்பிடப்படுவார்கள் (காண். யாக் 3: 1). எனவே இவர்கள் பொறுப்போடு செயல்பட வேண்டும். முதலில் தீங்கு செய்யாதே என்பது பண்டைய சத்தியப் பிரமாணமாகும். எனவே தப்பாக மக்களை வழிநடத்தும் பரிசேயர், மறைநூல் அறிஞர்களை மனதிற்கொண்டே இயேசுவும் தன் சீடர்களுக்கு இப்போதனையைக் கொடுத்திருக்கலாம். தன் சீடர்கள் இவ்வாறு இருக்கக்கூடாது என்பது இயேசுவின் கருத்து. எமது போதனைகள், வாழ்வு மூலமாக ஒருவரைப் பாவத்தில் விழச் செய்வது பெரிய குற்றம். எனவே சீடர்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

### தவறியோரை மன்னித்தல்

சமூகத்தில் நாம் அடுத்தவரை பாவத்தில் விழச் செய்யக்கூடாது என்பது மட்டுமல்ல, வழிதவறிச் செல்லும் சகோதரரையும் நல்வழிக்குக் கொண்டுவரவேண்டுமென்பதும் இயேசுவின் போதனையாகும். அடுத்தவரது குற்றங்களை சுட்டிக்காட்டுவதால் நன்மைகள் வராது. மாறாக, அவரைத் திருத்தும் நோக்கோடும் நல்லெண்ணத்தோடும் தவறுகளை அவரது கவனத்திற்குக் கொண்டுவந்து உதவும்போது நல்வழி பிறக்கும். எனவே எமது மனநிலை பற்றித் தெளிவாக இருக்க வேண்டும். அடுத்தவர் மனம்மாறி ஆண்டவரிடமும் அடுத்தவரிடமும் ஒப்புரவாக வேண்டுமென்பதே எமது இலக்காக இருக்க வேண்டும். நம்பிக்கையோடும் நல்லெண்ணத்தோடும் செயல்படுவோம். நல்லவை நடைபெறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 11 – செவ்வாய் – கார்த்திகை 2008

*தீத் 2: 1-8, 11-14 திபா 37: 3-4, 18, 23, 27, 29 லூக் 17: 7-10*

## ஆயரான தூய மார்ட்டின் நினைவு

அன்றைய நடைமுறை வாழ்வை வைத்து இயேசு பல உவமைகளையும் போதனைகளையும் வழிகாட்டல்களையும் மக்களுக்குக் கொடுத்துள்ளார். இவ்வாறு கூறும்போது மக்களும் போதனைகளுக்குக் கவனமாக செவிகொடுப்பர். அதேபோல செய்திகளை இலகுவாகவும் மக்கள் புரிந்துகொள்வர். தலைவர் பணியாளர் உறவு கடமைகளை அடிப்படையாக வைத்து அமைந்ததுதான் இன்றைய நற்செய்தி. இறைவனின் படைப்பில் நாம் பணிவோடு எமது கடமைகளை நிறைவேற்ற வாசகம் அழைப்புவிடுக்கின்றது.

**தலைவர் பணியாளர்**

இஸ்ரயேல் மக்கள் காலத்துக்குக் காலம் பிற நாடுகளால் அடிமைப் படுத்தப்பட்டுள்ளனர். இந்த அனுபவங்களை இவர்களால் வாழ்வில் மறக்கவே முடியாது. எகிப்து நாட்டில் நானூறு வருடங்களுக்குமேல் இவர்கள் அடிமைகளாக தவித்ததை பரம்பரை பரம்பரையாக நினைவுகூர்ந்து வந்தனர். பாஸ்கா விழாவின்போது இது ஓர் சடங்காகவே இருந்தது. அடிமையாக ஒருவர் தலைவருக்குக் கீழ் இருந்தால் அவர் பணிக்கப்படும் வேலைகளைச் செய்ய வேண்டும். தலைவருக்கும் அடிமைக்கும் இடையே இருக்க வேண்டிய இடைவெளியை இருவரும் அறிந்திருந்தனர்.

இந்த பின்னணியில் பணியாளர் தலைவருக்கு பணிசெய்ய வேண்டும் என்றும் தலைவரிடமிருந்து பெரிய சலுகைகள் எதிர்பார்க்க முடியாது என்றும் மக்கள் அறிந்திருந்தனர். விசேடமாக வேலை செய்துவிட்டு வரும் பணியாளரை தன்னோடு அமர்ந்து உணவருந்தும் என்று ஒருபோதும் சொல்ல மாட்டார். மாறாக வந்து தனக்கு உணவு ஏற்பாடு செய்யும்படியே பணிப்பார். பணிசெய்தபின் பணியாளருக்கு நன்றி கூறவும் மாட்டார்.

**கடவுளின் பணியாளர்கள்**

நாம் கடவுளின் பணியாளர்கள். எமது அழைப்பு, கடமையை ஏற்று அவருக்குப் பணிந்திருப்பதே எமது வேலையாக இருக்க வேண்டும். இதற்கு பணிவு அவசியம். எனவேதான் இயேசுவும் நாம் பணிசெய்துவிட்டு எமது கடமையைத்தான் செய்தோம் என்பது எமது மனநிலையாக அமைய வேண்டும் என்றார். இறைவன் முன்னிலையில் நாம் யார்? அவர் முன்னிலையில் நாம் ஒன்றுமில்லை எனும் மனநிலையோடு அவர் புகழ் பரவ உழைப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 12 – புதன் – கார்த்திகை 2008

*தீத் 3: 1–7 திபா 23: 1–6 லூக் 17: 11–19*

## மறைசாட்சியான தூய யோசபாத்து நினைவு

பத்துத் தொழுநோயாளர் நோய் நீங்கப் பெற்ற சம்பவத்தின் மூலமாக இயேசு மக்களுக்குப் பல பாடங்களைப் புகட்டினார். எமக்கு நன்றியுணர்வு எப்போதும் இருக்க வேண்டும். இறைவனின் நன்மைகளை பெறும் நாம் அவருக்கு எந்தளவிற்கு நன்றியுள்ளவர்களாக வாழ்ந்து காட்டுகின்றோம் என்று சிந்திக்க அழைக்கின்றது நற்செய்தி.

**பத்துத் தொழுநோயாளிகள்**

பத்துத் தொழுநோயாளிகள் ஆண்டவரிடம் உதவி கேட்டு வந்தனர். அவர் ஓர் இறைவாக்கினர் என்றோ, மெசியா என்றோ மக்களிடமிருந்து அறிந்திருக்கலாம். அது உண்மையென்றால் அவர் தம்மை அழைத்து ஆசீர்வதித்து குணமாக்குவார் என்பது இவர்களது எதிர்பார்ப்பாகவும் இருந் திருக்கலாம். ஆனால் இயேசுவோ அவர்களது நம்பிக்கையை சோதித்தார். இறைவாக்கினர் தம்மிடம் வந்து தன்னைக் குணமாக்குவார் என்று நா–மான் எதிர்பார்த்து ஏமாந்துபோனான் (காண். 2அர 5). ஆனால் இவர்கள் இயேசுவின் கட்டளையை மறுக்காமல் குருக்களிடம் காட்டச் சென்றனர். ஏனெனில் தொழுநோயாளர்கள் மக்கள் மத்தியில் வரமுடியாது. தொழுநோய் குணமாக்க முடியாத நோயாகவும் தொற்று நோயாகவும் கருதப்பட்டது. அவர்கள் குணமடைந்தால் குருக்களிடம் காட்டி உறுதி செய்தபின்பே அவர்கள் மக்களோடு உறவாடலாம். இவர்கள் சென்றனர், குணமடைந்தனர். எப்படியாவது குணமடைந்தால் போதும் எனும் நிலையிருந்ததால் இவர்கள் இயேசுவின் கட்டளையை நிறைவேற்றினர். ஆனால் குணமடைந்ததும் இயேசுவின் உதவி தேவைப்படவில்லை. எனவே ஒன்பதுபேர் தம்வழியே சென்றனர்.

**திரும்பிவந்த ஒருவர்**

பத்துப்பேரும் நலமடைந்தாலும் அந்நியராகிய ஒருவரே இயேசுவி டம் திரும்பிவந்து கடவுளை மகிமைப்படுத்தினார். செய்நன்றி என்பது ஓர் கிறிஸ்தவ பண்பு. இறைவனின் நன்மைத்தனங்கள் எமக்கு தினமும் வருகின்றன. ஆனால் நாம் உணர்ச்சியற்றவர்களாக இருந்துவிடுகின்றோம். திரும்பிவந்து நன்றிகூறிய இந்த அந்நியர் இன்றும் எமக்கு நல்ல உதாரணமே. எப்போதும் நாம் நன்றியுள்ளவர்களாக இருக்க வேண்டும். அதை எமது வாழ்வால் வெளிப்படுத்த வேண்டும். வாக்கால் வாழ்வால் நன்றிகூற மறவாதிருப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 13 – வியாழன் – கார்த்திகை 2008

பில 7–20 திபா 146: 7–10 லூக் 17: 20–25

## இறையாட்சி

இறையாட்சியின் வருகை பற்றி இயேசு விளக்குகின்றார். இயேசு தனது வருகையின் இறையாட்சியைத் மூலமாக தொடக்கி வைத்தாலும் அது அவரது இரண்டாம் வருகையிலேயே நிறைவுபெறும். அதை அறிவது எப்படி, வருகை எப்போது, என்னென்ன ஆயத்தங்கள் போன்றவற்றை ஆராய்வோம்.

**இறையாட்சியின் வருகை**

இறையாட்சி பற்றிய உண்மைகளை இயேசு காலத்துக்குக் காலம் மக்களுக்கு விளக்கியுள்ளார். போதனை மூலமும் தனது செயல்கள் மூலமும் அதை அறிவித்துள்ளார். மனம்மாறுங்கள் ஏனெனில் விண்ணரசு நெருங்கிவந்து விட்டது (மத் 4: 17) என்பது அவரது முதல் போதனை. தான் பேய்களை ஓட்டினால் அது இறையாட்சி வந்துவிட்டது என்பதற்கான அடையாளம் என்றார் (காண். லூக் 11: 20). அது நிலத்தில் விழுந்த வித்து போன்றது (மாற் 4: 13), கடுகு விதை, புளிக்காரம் போன்றது (லூக் 13: 18–20), நிலத்தில் மறைத்துள்ள புதையல் போன்றது (மத் 13: 44) என்று இறை யாட்சியின் தன்மைகளையும் இயேசு பல சந்தர்ப்பங்களில் குறிப்பிட்டுள்ளார்.

**இறையாட்சி மக்களிடையே...**

அமைதியாக செயல்படும் இறையாட்சி இயேசுவோடு மலர்ந்துவிட்டது. இயேசுவின் வல்ல செயல்களைப் பார்த்த மக்கள் பூரிப்படைந்து இறைவன் தம் மக்களிடையே வந்துள்ளார் என்றனர். அதுவும் இறையாட்சியின் அடையாளமாகும். அதேபோல அது மக்களின் உள்ளங்களில் உள்ளது. ஆடம்பரங்களோடு அது செயல்படுவதில்லை. நீதி, அன்பு, இரக்கம், நே–ர்மை மக்களில் செயல்படும்போது அதுவே அடையாளம். இவற்றை அறி யாத மக்கள் இறையாட்சி எப்போது வரும் என்று இயேசுவிடம் கேட்டனர். ஆயினும் ஆண்டவரின் இரண்டாம் வருகையின்போதே அது முழுமை பெறும் என்பதும் நாம் அறிந்துகொள்ள வேண்டிய உண்மை.

எதுவாக இருந்தாலும் இறையாட்சி எம் உள்ளத்தில் செயல்படுகின்றதா? இரண்டாம் வருகைக்கு நாம் ஆயத்தமாக இருக்கின்றோமா எனும் பயனுள்ள கேள்விகளைக் கேட்டு அவற்றிற்கு விடைகாண முயல்வோம். கிறிஸ்தவ பண்புகளை நாம் வாழ்ந்து காட்டும்போது இறையாட்சியை நாமும் அனுபவிக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 14 – வெள்ளி – கார்த்திகை 2008

2யோவா 4–9 திபா 119: 1–2, 10–11, 17–18 லூக் 17: 26–37

### ஆயத்தம்

இறுதிக்கால சம்பவங்கள் பற்றியும் மக்களின் ஆயத்தத்திற்கான முக்கியத்துவம் பற்றியும் இயேசு நற்செய்தியில் குறிப்பிடுகின்றார். அதற்கு நோவா காலத்து மக்களையும் லோத்து காலத்து மக்களையும் உதாரணமாகக் காட்டினார் இயேசு. எமது ஆயத்தம் பற்றிச் சிந்திக்க அழைக்கிறது வாசகம்.

**நோவா, லோத்து**

நோவா காலத்தில் தண்டனை நிச்சயம். ஏனெனில் தீமைகள் அதிகரித்து விட்டன என்று குறிப்பிடுகின்றார் கடவுள். கடவுள் இவ்வுலகைப் படைத்தது குறித்து வருந்துமளவிற்கு அக்கிரமம் மலிந்திருந்தது (காண். தொநூ 6: 6). எனவே கடவுள் மக்களை எச்சரித்தும் அவர்கள் திருந்தவில்லை. கடவுளுக்குப் பயந்து நேரிய வாழ்வு வாழ்ந்த நோவாவையும் அவரது குடும்பத்தையும் கடவுள் வெள்ளப்பெருக்கிலிருந்து காத்தார்.

லோத்து காலத்தில் சோதோம் நகரில் அக்கிரமங்கள் நிறைந்திருந்தன. அங்கு வாழும் நீதிமான்களுக்காக ஆபிரகாம் ஆண்டவரிடம் பரிந்து பேசியும் அவர்கள் மாறவில்லை. எனவே இவர்களும் அழிவைத் தேடிக்கொண்டனர் (காண். தொநூ 17–18).

**மனமாற்றம் தேவை**

நோவா, லோத்து காலத்து மக்களின் நிலையறிந்தும் இயேசுவின் காலத்து மக்கள் திருந்தவில்லை. இயேசு எருசலேமைப் பார்த்து கண்ணீர் வடித்த சம்பவமும் உண்டு (காண். லூக் 19: 42–44). அவரது காலத்து மக்கள் அவர் கொண்டுவந்த மனமாற்றத்திற்கான செய்தியை ஏற்றுக் கொள்ளவில்லை. மாறாக, அவரை எதிரியாகக் கருதி சிலுவையில் அறைந்தனர். இவர்களுள் மனமாற்றம் இருக்கவில்லை. எனவே இறுதிநாட்களில் நடைபெற இருக்கும் அழிவுகள் பற்றி இயேசு குறிப்பிட்டார்.

அதேவேளை இயேசுவில் முழுமையான நம்பிக்கை வைத்து மனம்மாறிய பலரையும் நாம் நற்செய்திகளில் காண்கிறோம். இவர்கள் அவரை நம்பியதோடு நின்றுவிடாமல் அவருக்காகவும் அவர் தொடங்கிய பணிக்காகவும் தம்மை அர்ப்பணித்தும் உள்ளனர். இவர்கள் இன்று எமக்கு சிறந்த உதாரணம்.

மனமாற்றம் ஒப்புரவு மூலமாக நாம் எம்மை ஆயத்தம் செய்வோம். அப்போது இறுதிக்காலம் பற்றிய கவலை எமக்கு இருக்காது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 15 ~ சனி – கார்த்திகை 2008

3யோவா 5–8 திபா 112: 1–6 லூக் 18: 1–8

## தூய பெரிய ஆல்பர்ட் நினைவு

மனந்தளராமல் செபிக்க வேண்டுமென்று வலியுறுத்த இயேசு நேர்மையற்ற நடுவனும் கைம்பெண்ணும் பற்றிய உவமையைக் கூறினார். இறைவனின் அன்பையும் பராமரிப்பையும் எடுத்துரைக்க இது இன்னுமொரு உதாரணமாகும் என்பதை இன்றைய நற்செய்தியில் அறிந்துகொள்கிறோம்.

**இருமனிதர்கள்**

***நேர்மையற்ற நடுவன்:*** கடவுளுக்கு அஞ்சாத ஒருவர் கைம்பெண்ணின் வேண்டுகோளுக்கு தனது கவனத்தைத் திருப்புவார் என்று எதிர்பார்க்க முடியாது. அவனது அலட்சியப் போக்கு யாருக்கும் நன்மை விளைவிக்காது. யாரையும் மதிக்காத இவன் கைம்பெண்ணின் தொந்தரவிலிருந்து தன்னைக் காத்துக்கொள்ள முயலுகிறான். ஏனெனில் இவள் தொடர்ந்து அவனைத் தொந்தரை செய்தாள்.

***கைம்பெண்:*** அடுத்தவரின் தயவில் வாழவேண்டிய நிலை கைம்பெண்ணிற்கு. ஆதரவற்ற நிலையில் இவர் நீதி கேட்டு நடுவரிடம் வருகின்றார். நடுவர் நேர்மையற்றவர் என்று கைம்பெண்ணிற்குத் தெரிந்திருக்கலாம். ஆயினும் உறுதியோடு வருகின்றார். தொடர்ச்சியாக இவர் உதவி கேட்டதால் அன்பின் பொருட்டு அல்ல, மாறாக, இவளது தொல்லையின் பொருட்டு கைம்பெண்ணிற்கு நீதி வழங்கினான்.

**இறைவனின் பரிவு**

இக்கைம்பெண்ணின் முயற்சியை இயேசு பாராட்டினார். அதே வேளை கடவுள் பரிவுள்ளவர். அவர் நீதிகேட்டு வரும் அனைவருக்கும் நீதி வழங்குவார் என்பதை இயேசு வலியுறுத்த விரும்பினார். கடவுளின் அன்பு, பரிவு, இரக்கம் எப்போதும் மாறுபடாது. ஆனால் எமது நம்பிக்கை, மனந்தளராத செபம் உறுதியாக உள்ளதா என்பதை சிந்தித்துப் பார்க்க இயேசு அழைக்கிறார்.

இன்று நாமும் செபிக்கிறோம். ஆனால் உவமையில் இயேசு குறிப்பிடும் கைம்பெண்ணின் நிலையை சிந்தித்துப் பார்ப்போம். அவள் வேறுவழியில்லாமல் நடுவரிடம் நீதி கேட்டு வந்திருப்பாள். எப்படியாவது நீதி கிடைக்க வேண்டும் எனும் உறுதி அவளுக்குள் இருந்திருக்கும். எமது நம்பிக்கையும் உறுதியும் நிறைந்த செபம் பயனளிக்கும் எனும் நம்பிக்கையை உவமை தருகின்றது. இறைவனில் ஆழமான நம்பிக்கையை வளர்ப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொதுக்காலம் 33ம் ஞாயிறு

## 16 – கார்த்திகை 2008

நீமொ 31: 10-13, 19-20, 30-31 திபா 128: 1-5 1தெச 5: 1-6 மத் 25: 14-30

### எம் பணி

எம்மிடமுள்ள கொடைகளை நாம் எமது வளர்ச்சிக்கும் இறைவனின் புகழ்ச்சிக்கும் பயன்படுத்த வேண்டும். இவை இறைவனால் கொடுக்கப்பட்டவை. எனவே இவற்றை எமது சுயநலம், சோம்பல் காரணமாக பயன்படுத்தாதபோது இறைவனின் சினத்திற்கு ஆளாகிறோம். தொடக்கமுதல் இறைவன் தன் படைப்புகளைப் பெருக்கவும் ஆளவும் மனிதனுக்குக் கட்டளை கொடுத்துள்ளார். அந்த கட்டளைக்கு நாம் விசுவாசமாக செயல்படுகின்றோமா?

**சிறந்த மனையாள்**

***திறமைவாய்ந்த மனைவி:*** நல்ல மனைவி எவ்வாறு இருப்பாள், எவ்வாறு செயல்படுவாள் என்று விளக்குகின்றது முதல் வாசகம். திறமைவாய்ந்த, மனத்திடமுள்ள மனைவி இல்லத்திற்கு நல்லதைக் கொண்டுவருவாள், கணவருக்கு நன்மைகளையே பெற்றுக்கொடுப்பாள்.

***எளியவருக்கு உதவும் மனைவி:*** இவள் தன் கணவருக்கும் வீட்டிற்கும் மட்டுமல்ல, தேவையிலிருப்போருக்கும் நன்மைகள் செய்து குடும்பத்திற்கு இறைவனின் ஆசீரைத் தேடுவாள். தேவையிலிருப்பவருக்கு செய்யும் உதவி இறைவனின் ஆசீராக அவருக்குத் திரும்பி வரும்.

***ஆண்டவரில் அச்சம்:*** நல்ல மனைவி ஆண்டவரிலும் அச்சம் கொண்டிருப்பாள். அதுவே உண்மையும், நேர்மையும் உள்ள பெண்ணாக அவளை உருவாக்கும். அவள் ஆடம்பரங்களுக்கு முன்னுரிமை கொடுக்காமல் தன் இல்லம், கணவர், பிள்ளைகள், தேவையிலிருப்போர் என்று அடுத்தவர் நலன்களில் கருத்தாயிருந்து தனக்கும் அடுத்தவர்க்கும் ஆசீரைக் கொண்டு வருவாள். இறைவனின் ஆசீரைப் பெரும் கொடையாக எண்ணியவர் அவற்றை நல்ல முறையில் பயன்படுத்தினார்.

ஆடம்பரங்களிலும் புகழ் அடைவதிலும் அடுத்தவர் கவனத்தை ஈர்ப்பதிலும் தமது நேரத்தை செலவிடும் இக்காலத்துப் பெண்களுக்கு முதல் வாசகம் நல்ல செய்தியைக் கொடுக்கின்றது. இறைவனை ஒருவர் முதலில் தேடவேண்டும். பின் அனைத்தும் தொடர்ந்து வரும். எனவே நீதிமொழிகள் தரும் செய்தி அன்று மட்டுமல்ல இன்றும் எம்மவர்க்கு செய்தியாகட்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தாலந்துகள்**

தாலந்து உவமையின் மூலமாக இறைவன் எமக்குத் தரும் கொடைகளை நாம் பொறுப்போடு பயன்படுத்த வேண்டும் என்பதை இயேசு வலியுறுத்தினார். இன்றோ நாளையோ கடவுள் எமது செயல்களுக்குக் கணக்குக் கேட்பார் என்பது உறுதி. மூவருக்கு தாலந்துகள் கொடுக்கப்பட்டன. அவரவர் திறமைக்கேற்ப ஐந்து, இரண்டு, ஒன்று என்று தாலந்துகள் கொடுக்கப்பட்டன. தலைவர் எப்போது கணக்குக் கேட்பார் என்பது முக்கியமல்ல. அவர் எப்போது கணக்குக் கேட்டாலும் உரிய பதில் கூறுவதற்கு நாம் ஆயத்தமாக இருக்கின்றோமா என்பதே முக்கியமானது.

***ஐந்து, இரண்டு தாலந்துகள்:*** இவற்றைப் பெற்றவர்கள் முறையாகப் பயன்படுத்தி இரண்டு மடங்காக வருமானம் சேர்த்தார்கள். தலைவரும் வந்து இவர்களது முயற்சிகளைப் பாராட்டி மேலதிகமாக பலர் பொறுப்புகளைக் கொடுத்தார். செய்த நன்மைகளுக்குப் பாராட்டும் பரிசும் கிடைத்தன.

***ஒரு தாலந்து:*** ஒரு தாலந்து பெற்றவர் செயல்பட்டவிதம் வேறு. அதை அவர் நிலத்தில் புதைத்து வைத்திருந்தார். அதற்குக் காரணமும் வைத்திருந்தார். தனது சோம்பல்தனத்தால் இவர் இவ்வாறு செயல்பட்டதைப் பார்த்து தலைவர் சினம் கொண்டார். ஏனெனில் இவர் தனது தவறை மறைக்க தலைவரையே கொடுமையானவர் என்று குறைகூறினார். தனது தவறுக்கான பொறுப்பை அவர் ஏற்றுக்கொள்ளவும் இல்லை. தலைவரின் தண்டனையைப் பெற்றார்.

**விழிப்புத் தேவை**

ஆண்டவரின் இரண்டாம் வருகை பற்றிய தெளிவற்ற நிலை பெரும் பரபரப்பை தெசலோனிக்கரிடையே ஏற்படுத்தியது. பவுலின் போதனையை சிலர் தவறாகவே பயன்படுத்தப் பார்த்தனர். சிலர் விசுவாசத் தளர்ச்சி பெற்றனர். இதைக் கேள்விப்பட்ட பவுல் அவர்களுக்கு எச்சரிக்கின்றார். நாம் விழிப்பாக இருக்க வேண்டும். கிறிஸ்து இரண்டாம் தடவையாக எப்போது வருவார் என்பது முக்கியமல்ல. அவர் வரும்போது நாம் விழிப்பாக இருக்கின்றோமா என்பதே முக்கியம். எனவே நாம் எமது கடமைகள் பொறுப்புகளை முறையாக நிறைவேற்றி ஆயத்தமாயிருப்போம் என்று அறிவுறுத்தினார் பவுல்.

இன்று எனது ஆயத்தம் என்ன? இயேசு வந்து என்னிடம் கணக்குக் கேட்டால் நீர் எனக்கு என்ன தந்தீர் என்று கேட்பேனா அல்லது இதோ இவ்வளவு சம்பாதித்துள்ளேன் என்று துணிவோடு சொல்வேனா? தெளிவாயிருப்போம், விழிப்போடு செயல்படுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 17 – திங்கள் – கார்த்திகை 2008

*திவெ 1: 1–4, 2: 1–5 திபா 1: 1–6 லூக் 18: 35–43*

### பார்வை

பார்வையற்ற ஒருவர் ஆண்டவரில் நம்பிக்கை வைத்து, அவரது கவனத்தை ஈர்த்து, பார்வை பெற்றார். இரண்டு விதமான பார்வையை இங்கு நாம் பார்க்கலாம். கண்கள் இருந்தும் குருடர்களாக வாழ்வோருக்கு இந்த பார்வையற்றவரின் விசுவாச வெளிப்பாடு நல்ல பாடமாகும்.

**உள்ளார்ந்த பார்வை**

இயேசுவே தாவீதின் மகனே, எனக்கு இரங்கும் என்று பார்வையற்ற இவர் கூக்குரலிட்டார். நாசரேத்தூர் இயேசு போய்க்கொண்டிருக்கிறார் என்று மட்டும் மக்கள் அவருக்குத் தெரிவித்தார்கள். இயேசு தாவீதின் மகனாகப் பிறப்பார், தாவீதின் வழியில் வருவார் என்று எசாயா இறைவாக்கினர் முன்னறிவித்திருந்தார் (காண். எசா 9: 7). இங்கு இவர் பார்வையற்றவராக இருந்தாலும் இந்த உண்மைக்குச் சான்றுபகர்ந்தார். பரிசேயர், மறைநூல் அறிஞர்கள் இயேசுவைப் பார்த்தும், அவரது போதனையைக் கேட்டும், அவரது புதுமைகளை அறிந்தும் அவர்களால் இயேசுவை தாவீதின் மகன் என்று ஏற்றுக்கொள்ள முடியவில்லை. ஆனால் பார்வையற்றவர் ஏற்றுக்கொண்டார்.

**அகப்பார்வை**

இவருக்குத் தேவையாக இருந்தது அகப்பார்வை. அதைப்பெற்றுக் கொள்ள அவர் முயற்சித்தார். இயேசுதான் செல்கிறார் என்றறிந்ததும் நம்பிக்கையோடு செயல்பட்டார். இயேசுவைப் பற்றி யாரும் அவருக்குக் கூறியிருப்பார்கள். அவரது நன்மைத்தனங்களை அவர் இவ்வாறு அறிந்திருப்பார். சந்தர்ப்பத்தை நழுவவிடாமல் பயன்படுத்தினார். ஆண்டவரின் நன்மையைப் பெற்றார். இவரது விசுவாச வெளிப்பாடுகள் இரண்டு.

1. இயேசுவே, தாவீதின் மகனே, எனக்கு இரங்கும்.
2. ஆண்டவரே, நான் மீண்டும் பார்வை பெறவேண்டும்.

இன்று நாமும் பார்வை பெறவேண்டும். கண்கள் இருந்தும் அடுத்தவரில் இயேசுவைக் காணாத பார்வையற்றவர்களாக நாமும் வாழலாம். துன்பப் படுவோரில் இயேசுவைக் கண்டு அவர்களுக்கு உதவாத சந்தர்ப்பங்களை சிந்தித்துப் பார்ப்போம். அடுத்தவர்க்கு இயேசுவைக் கொடுக்காத சூழ்நிலைகள் எத்தனை? அனுபவங்களிலும், மனிதர்களிலும் இயேசுவைக் கண்டு பரிவோடு செயல்பட முன்வருவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 18 – செவ்வாய் – கார்த்திகை 2008

திவெ 3: 1–6, 14–22 திபா 15: 2–5 லூக் 19: 1–10

## தூய பேதுரு, பவுல் ஆலய அபிஷேக விழா

சக்கேயுவைச் சந்திக்கிறார் இயேசு. சக்கேயுவின் ஆர்வம், செயல்பாடு அவருக்கு வாழ்வு கொடுத்தது. எதிர்பாராத சம்பவங்கள் நடைபெற்றாலும் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி கடவுளோடும் மனிதரோடும் ஒப்புரவானார் இவர். இவரது வாழ்வு எமக்குத் தரும் பாடம் என்ன?

**மக்கள் தடையாக...**

இயேசுவைப் பார்க்க வேண்டும் என்பதே சக்கேயுவின் நோக்கமாக இருந்தது. ஆனால் இவரால் முடியவில்லை. காரணங்கள் இருந்தன. மக்களே இவருக்குத் தடையாக இருந்தனர்.

1. இவர் குள்ளமாக இருந்ததால் மக்கள் இதற்குத் தடையாக இருந்தார்கள். பெரிய கூட்டம். இவரோ குள்ளமான உருவமுள்ளவர். எனவே இவரால் மக்களை விலக்கி முன்செல்ல முடியவில்லை.
2. இவர் வரி தண்டுபவர். இத்தொழில் உரோமையரின் அடிமைத்தனத்திற்கு உதவும் செயலாக இருந்தது. இதனால் இவர்கள் மக்களால் பாவிகள் என்று கருதப்பட்டனர். மக்களின் இந்த மனநிலையும் ஒரு தடையாகியது. நான் பாவி. என்னை இயேசு ஏற்றுக்கொள்வாரா எனும் தடை இருந்தது. திருந்தி வாழ சந்தர்ப்பம் கிடைக்குமா எனும் நம்பிக்கை இல்லாமல் இருந்திருக்கலாம்.
3. சக்கேயுவின் வீட்டில் இயேசு உணவருந்தியபோது மக்களே இயேசுவின் செயலுக்கு எதிராக முணுமுணுத்தனர்.

ஆயினும் சக்கேயு அனைத்துத் தடைகளையும் தாண்டி செயல்பட்டார். முதலில் ஒரு மரத்தில் ஏறி இயேசுவைப் பார்ப்பதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக்கொண்டார். பின் இயேசு அவரை வீட்டிற்கு அழைத்தபோது அன்போடு இயேசுவை வரவேற்று உபசரித்தார். சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி ஒப்புரவானார்.

**இயேசுவே வழியாக...**

இயேசுவைப் பார்க்க வேண்டும் எனும் சக்கேயுவின் சிறிய முயற்சி பாரிய விளைவை ஏற்படுத்தியது. இயேசு அவரது வீட்டில் தங்கி சக்கேயுவின் வாழ்வில் மாற்றத்தை ஏற்படுத்தினார். புதுவாழ்வைக் கொடுத்தார்.

இன்று நம்பிக்கையோடு நாம் எடுக்கும் ஒவ்வொரு நல்ல முயற்சிகளும் நல்ல பலனைத் தரும் எனும் உறுதியோடு செயல்படுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திவெ 4: 1–11 திபா 150: 1–6 லூக் 19: 11–28

## ஆயத்தம்

நற்செய்தியில் மினா நாணய உவமையை ஆண்டவர் விளக்கி ஒவ்வொருவரும் தமது அழைப்புக்கேற்ப வாழ்வு வாழவேண்டுமென போதிக்கிறார். எமது ஆற்றல்களை வாழ்ந்துகாட்ட எமக்கும் அழைப்பு உண்டு என்பதை ஆராய்ந்து பார்த்துத் தெளிவோடு செயல்பட வாசகம் அழைக்கிறது.

**பணியாளர்கள் நிலை**

***பயன்படுத்தியோர்:*** மினா நாணயத்தைப் பெற்றவர்கள் செயல்பட்டார்கள். அவரவர் தமக்குரிய முறையில் வருமானங்களை ஈட்டியிருந்தார்கள். குடிமக்கள் அரசரைப்பற்றி எதிரான கருத்துகள் கொண்டிருந்தாலும் இவர்கள் தமக்குக் கொடுக்கப்பட்ட பணியை முறையாக நிறைவேற்றினார்கள். அரசர் வந்து கணக்குக் கேட்டு அவர்களைப் பாராட்டி மேலும் பொறுப்புகள் கொடுத்தார்.

***பயன்படுத்தாதோர்:*** பணியாளர்களுள் ஒருவர் தனக்குக் கொடுக்கப்பட்ட மினா நாணயத்தை அப்படியே கொண்டுவந்து அரசரிடம் கொடுத்தார். உமக்கு அஞ்சி இதை அப்படியே வைத்திருந்தேன் என்று பொய்க் காரணமும் கொடுத்தார். அதை வைத்தே அரசரும் அவரைத் தீர்ப்பிட்டார்.

**அரசரின் நிலை**

அரசர் எமக்குத் தேவையில்லை எனும் மனநிலை பலர் மத்தியில் இருந்ததால் அவர்கள் அரசர் தந்த பணியையும் நிறைவேற்றவில்லை. இங்கு யார் யாரைத் தெரிவுசெய்வது? பணியாளர்கள் அரசரைத் தெரிவுசெய்யவில்லை. மாறாக அரசரே பணியாளர்களைத் தெரிவுசெய்தார். எனவே தமக்குத் தந்த பணியை முறையே செய்வது பணியாளர்களின் கடமை. அரசரும் தன் பணி யாளரைத் தண்டித்தார்.

1. அவர் தனது தலைவரின் நோக்கத்தை நம்பவுமில்லை, நிறைவேற்றவுமில்லை.
2. அவர் தலைவரின் விருப்பங்களைவிட தன்னைப்பற்றியே யோசித்தார்.
3. கொடுக்கப்பட்ட வளங்களை அவர் பயன்படுத்த முயற்சிகள் செய்யவில்லை. நாம் இறைவனை தெரிவுசெய்வதில்லை. அவரே எம்மைத் தெரிவு செய்கிறார். ஏனெனில் அவரே எம்மைப் படைத்தவர். எனவே அவர் எமக்குத் தரும் வளங்களை நாம் முறையாகப் பயன்படுத்தவேண்டியது எமது கடமை. அழைப்பை உணர்ந்து விழிப்போடு செயல்படுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 20 – வியாழன் – கார்த்திகை 2008

திவெ 5: 1–10   திபா 149: 1–6   லூக் 19: 41–44

## விழிப்பு

ஆண்டவர் எருசலேம் நகரையும் அதன் மனநிலையையும் பார்த்து அழுத சம்பவத்தை நற்செய்தியில் வாசிக்கிறோம். மனமாற்றம், ஒப்புரவு எனும் ஒரே நோக்கோடு உலகிற்கு வந்த இயேசு அதை தன் மக்களே ஏற்றுக் கொள்ளாமல் அடம்பிடித்த நிலைகண்டு மனம்நொந்தார். நாமும் இந்த இஸ்ரயேல் மக்களைப் போல கல்நெஞ்சம் கொண்டவர்களாக மனம்மாறாது இருக்கின்றோமா என்று எண்ணிப் பார்க்க அழைக்கிறது நற்செய்தி.

**மக்களின் மனநிலை**

தொடக்கமுதல் யூத மக்கள் வணங்காக் கழுத்துள்ளவர்களாக, கல்நெஞ்சம் கொண்டவர்களாக இருந்து வந்துள்ளனர். எகிப்து நாட்டிலிருந்து விடுதலை பெற்று பாலைவனத்தினூடாக வந்தபோதே கடவுளுக்கும் மோசேக்கும் எதிராக முணுமுணுத்தார்கள். வாக்களிக்கப்பட்ட நாட்டில் முறைகெட்ட வாழ்வு வாழ்ந்த தன் மக்களைத் திருத்த கடவுள் இறைவாக்கினர்களை அனுப்பினாலும் அவர்களை யூதர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. இது இவர்க-ளது சரித்திரம்.

இயேசு வந்தபோதும் யூதத் தலைவர்கள் அவரில் குறைகண்டுபிடித்து அவரை மக்களிடமிருந்து பிரிப்பதிலேயே கருத்தாய் இருந்தார்கள். கடவுள் உன்னைத் தேடிவந்த காலத்தை நீ அறிந்துகொள்ளவில்லை என்பது இயேசுவின் உள்ளம் நொந்த வார்த்தைகள். இது இயேசுவின் காலத்து இஸ்ரயேல் மக்களின் மனநிலையைக் காட்டுகின்றது.

**மனநிலையின் விழைவுகள்**

எருசலேம் முழு இஸ்ரயேலையும் சுட்டிநிற்கின்றது. இறைவனின் அழைப்பை ஏற்காத இஸ்ரயேல் மக்களுக்கு வரப்போகும் அழிவுபற்றியும் இயேசு குறிப்பிடுகின்றார். வரவிருக்கும் எருசலேமின் அழிவே அது. அந்த அழிவு கொடூரமாக இருக்கும். 40 வருடங்களின் பின்பு கி.பி. 66ல் யூதர்கள் உரோமைய ஆட்சிக்கு எதிராக புரட்சிசெய்ய தீத்துவால் கி.பி. 70ல் எருசலேம் அழிக்கப்பட்டது. ஆறு இலட்சம் யூதர்கள் இதில் கொல்லப்பட்டார்கள்.

இயேசுவின் இந்த கவலை எமது வாழ்வைப் பார்த்தும் இன்று இருக்கக் கூடாது என்பதில் நாம் கருத்தாயிருக்க வேண்டும். எமது மனநிலை, வாழ்வு ஆண்டவருக்கு மகிழ்ச்சியளிக்கிறதா? அன்பு, இரக்கம், பரிவு எமது வாழ்வின் இலக்காக இருக்கட்டும். வாழ்வு பெறுவோம், வாழ்வு கொடுப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 21 – வெள்ளி – கார்த்திகை 2008

செக் 2: 10–13 லூக் (பதிலுரை) 1: 47–55 மத் 12: 46–50

## கன்னி மரியாவை காணிக்கையாக ஒப்புக்கொடுத்தது

மரியாவையும் மீட்புப் பணியில் அவரது பங்களிப்பையும் சிந்திக்கத் தூண்டுகின்றது இன்றைய நாள். இறைவனோடு ஒன்றிக்க அவரது திருவுளத்தை நிறைவேற்றுவது மிக முக்கியம். இறைவனைப் புகழ்வதும் அவரது கட்டளைகளை நிறைவேற்றுவதுமே எமது இலக்காக இருக்க வேண்டும் என்பதை உணர்த்துகின்றது நற்செய்தி.

### கடவுள் திருவுளத்தை...

இயேசுவின் தாயும் அவரது சகோதரர்களும் அவரைத் தேடி வந்தனர். இவர்கள் ஏன் வந்தார்கள்? பல காரணங்கள் இருக்கலாம். ஆனால் அவரது பதில் அன்றும் இன்றும் பலரை ஆச்சரியப்படுத்தியிருக்கலாம். அவர் யாரைக் குறிப்பிட்டார், எந்த நோக்கத்தோடு அவ்வாறு கூறினார் என்பது குழப்பம் நிறைந்த கேள்விகளாக அமைகின்றன.

### இயேசுவின் மனநிலை

உலகில் குடும்பப் பெறுப்பை இயேசு நிராகரிக்கவில்லை. பெற்றோரை மதிக்க வேண்டும் எனும் பழைய ஏற்பாட்டு சட்டத்திற்கு எதிராக செயல்பட்ட பரிசேயரை இயேசு கண்டித்துள்ளார் (காண். மத் 15: 1–9). தன் தாய்க்கு வேண்டிய பாதுகாப்பையும் சிலுவையில் தொங்கியபோது ஏற்படுத்தினார் (காண். யோவா 19: 25–27). எனவே இயேசு தன் தாய்க்கும் சகோதரர்களுக்கும் எதிரானவரல்ல. மொத்தத்தில் அவர் குடும்ப வாழ்விற்கும் உறவுக்கும் எதிரானவரல்ல.

ஆனால் அவர் உருவாக்க விரும்புவது இந்த உலக குடும்ப உறவைவிட அன்மீகக் குடும்பமே. இயேசு முன்வைக்கும் இந்தப் புதிய உறவில் இறைவனே எமது தந்தை, நாம் அனைவரும் சகோதர சகோதரிகளே. இவ்வாறு பார்க்கும்போது மரியா அவரது இவ்வுலகத் தாயாகவும் ஆன்மீகத் தாயாகவும் திகழ்கின்றார். ஏனெனில் அவர் ஆண்டவரின் கட்டளைகளை தொடக்கமுதல் நிறைவேற்றி வந்துள்ளார்.

எனவே நாம் எமது தந்தைக்குப் பணிந்திருப்பதிலும் அவரது கட்டளைப்படி வாழ்ந்து காட்டுவதிலும் ஆர்வமாயிருக்க வேண்டும். அப்போது அனைவரையும் என் சகோதரராகவே நான் பார்க்க முயல்வேன். உலகமும் அமைதியில் திகழும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 22 – சனி– கார்த்திகை 2008

திவெ 11: 4–12 திபா 144: 1–2, 9–10 லூக் 20: 27–40

### கன்னியும் வேதசாட்சியுமான தூய செசிலியா

இன்றைய நற்செய்தியில் உயிர்த்தெழுதல் பற்றிய கேள்விக்கு இயேசு பதில் தருகின்றார். கேள்வி கேட்டவர்கள் உயிர்த்தெழுதலில் நம்பிக்கை கொள்ளாத சதுசேயர்கள். ஆயினும் இயேசு பொறுமையோடு பதில்கூறி உயிர்ப்பு பற்றிய சில செய்திகளையும் தருகின்றார்.

**சதுசேயரும் கேள்வியும்**

பரிசேயர், சட்டவல்லுனர்கள், சதுசேயர் என்று யூதர்கள் மத்தியில் பிரிவுகள் இருந்தன. இவர்கள் தனிப்பட்ட நோக்கங்களோடு செயல்பட்டாலும் இயேசுவை பொது எதிரியாகவே கணித்தனர். எனவே பொதுவான விடயங்களில் ஒன்றுசேர்ந்திடுவார்கள். சதுசேயர்கள் வானதூதரிலும் உயிர்த்தெழுதலிலும் நம்பிக்கை கொள்ளாதவர்கள். இதன் காரணமாக பரிசேயர்களுக்கும் சதுசேயர்களுக்கும் வாக்குவாதங்களும் வந்ததுண்டு (காண். திப 23: 6–10).

திருமணம் பற்றிய கேள்வியை இவர்கள் இயேசுவிடம் கேட்டார்கள். திருமணம் செய்யும் ஒருவர் குழந்தைகள் இன்றி இறந்தால் அவருக்கு வழிமரபு உருவாக்க அவரது சகோதரர் அப்பெண்ணை மணந்துகொள்ள வேண்டும் என்பது சட்டம் (காண். இச 25: 5). இதன் பின்னணியில் இவர்கள் தமது கதையை முன்வைத்தார்கள். இயேசுவும் திருமணம் பற்றிய விளக்கத்தைக் கொடுத்து தெளிவுபடுத்துகின்றார்.

**இவ்வுலகத் திருமணம்**

கடவுள் இவ்வுலகைப் படைத்தபின் திருமணத்தை நிறுவினார் (காண். தொநூ 1: 28). இது இவ்வுலகில் மனித இனம் பெருகுவதற்காக உருவாக்கப்பட்டது. இந்த உலகம் போல மறுவுலகம் இருக்காது. மறுமையில் மரணம் இல்லை, நோவில்லை, நோய்களில்லை. திருமணம், கவலை, கண்ணீர், நோய்கள் அனைத்தும் இந்த உலகைச் சார்ந்தன. ஆண்டவரோ அதைவிட மேலானதொரு வாழ்வை நிலைவாழ்வில் எமக்குத் தருகின்றார். உயிர்த்தோர் வானதூதர்களைப் போல வாழ்வர் என்று பவுல் குறிப்பிடுகின்றார் (காண். 1கொரி 15: 35–50). எமது இவ்வுலகக் கண்ணோட்டத்தோடு மறுவுலக வாழ்வைக் கணிக்க முடியாது. எனவே இறைவனில் நம்பிக்கை வைத்து இவ்வுலகில் எமது வாழ்வை நல்லதாக்குவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொதுக்காலம் 34ம் ஞாயிறு
## 23 – கார்த்திகை 2008

எசே 34: 11–12, 15–17 திப 23: 1–6 1கொரி 15: 20–26, 28 மத் 25: 31–46

## கிறிஸ்து அரசர் பெருவிழா

விவிலியத்தில் இயேசு பல பெயர்கள் கொண்டு அழைக்கப்பட்டார். அவரது வருகை, வாழ்வு, அர்ப்பணத்தை வைத்து மேலதிகமாக நாம் வேறு பெயர்கள் கொண்டும் அழைக்கின்றோம். கிறிஸ்து அரசர், இவ்வுலகின் அரசர், ஆன்மீக அரசர், நிலைவாழ்வின் அரசர். அவரை அரசராக திருச்சபை இன்று பெருவிழாவாகக் கொண்டாடுகின்றது. பழைய ஏற்பாட்டு நூல்கள் அவரது பண்புகள் பற்றி எதிர்வுகூற இயேசு மக்களது நலன்களில் கருத்தாயிருக்கும் நல்லாயனாக விளங்குகின்றார். இன்றைய ஞாயிறு வாசகங்கள் தரும் செய்திகளைப் பார்த்து இயேசுவோடு எமக்குள்ள உறவையும் புதுப்பிப்போம்.

**இஸ்ரயேலின் ஆயர்கள்**

இஸ்ரயேல் மக்களின் ஆன்மீக வளர்ச்சி யூதத் தலைவர்களது பொறுப்பாக இருந்தாலும் இவர்கள் அடுத்தவர் வாழ்வைவிட தமது வாழ்வு பற்றியே கவலையாக இருந்தார்கள். தமது சுயநல வாழ்வால் இவர்கள் மந்தையை சிதறடித்தார்கள். எனவே இவர்களுக்கு எதிராக இறைவாக்குரைக்க இறைவாக்கினர் எசேக்கியேல் அனுப்பப்படுகின்றார் (34: 1–10).

**ஆண்டவர் நல்லாயனாக...**

ஆண்டவரே சிதறுண்ட தம் மந்தையை காக்கின்ற நல்லாயராக வரவிருக்கிறார். அவரது முக்கிய பண்புகளைப் பார்ப்போம்.

1. மந்தையைத் தேடிச் செல்வார். யூதத் தலைவர்களின் தவறான வாழ்வால் இஸ்ரயேல் எனும் மந்தை வழிதவறிப் போனாலும் அதை ஆண்டவர் தேடிச் சென்று காத்து மீண்டும் ஒன்றுசேர்ப்பார்.
2. அவர் தன் மந்தையைப் பராமரிப்பார். மேய்ச்சல் நிலத்திற்கு அழைத்துச் சென்று அவற்றை இளைப்பாறச் செய்வார்.
3. காயப்பட்டவற்றிற்கு கட்டுப்போடுவார். பலவகைகளிலும் இன்னலுறும் தன் மந்தையைப் பராமரிப்பார்.
4. தீயோரை இனங்கண்டு தன் மந்தையை வழிநடத்துவார்.

தன் மக்களை வழிநடத்த ஆண்டவர் ஆயர்களை நியமித்தாலும் அவர்கள் தமது கடமைகளை நிறைவேற்றவில்லை. இயேசுவின் காலத்தில் வாழ்ந்த யூதத் தலைவர்களும் இயேசுவால் கண்டிக்கப்பட்டனர்.

**மக்களின் பொறுப்பு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எசேக்கியேல் நூலில் ஆண்டவர் யூதத் தலைவர்களை தீர்ப்பிட்டாலும் நற்செய்தியில் இயேசு மக்கள் அனைவருக்குமான தீர்ப்பு பற்றிக் குறிப்பிடு கின்றார். மறைநூல் அறிஞர், பரிசேயர் பற்றிக் குறிப்பிடும்போது அவர்கள் செய்வதுபோல நீங்கள் செய்யாதீர்கள். ஏனெனில் அவர்கள் சொல்வார்கள், செயலில் காட்டமாட்டார்கள் (மத் 23: 3) என்று தன் மக்களுக்கு எச்சரித்தார் இயேசு. எனவே தலைவர்கள் எவ்வளவு தவறு செய்தாலும் மக்கள் அதில் கவனமாக இருந்து தமது செயல்களுக்கு அவர்களே பொறுப்பேற்க வேண்டும். மக்கள் என்ன செய்தார்கள் என்று அவர்களைப் பாராட்டினார், என்ன செய்ய வில்லை என்று அவர்களைக் கடிந்துகொண்டார் இயேசு என்று பார்ப்போம்.

**நான் பசியாக...**

நற்செய்தியில் இயேசுவின் தீர்ப்பு காட்டப்படுகின்றது. ஒருவரது அறிவு, ஆற்றல் சார்ந்த பங்களிப்பு, செல்வம் போன்றவற்றின் அடிப்படையில் தீர்ப்பு வழங்கப்படவில்லை. மாறாக ஒருவர் அடுத்தவரது நன்மை கருதி சுயநலம் பாராது செய்த நன்மைகள் தனக்கே செய்ததாக இயேசு குறிப்பிடுகின்றார். பசி, தாகம், தனிமை, ஆடை, நோய், சிறை என்று சாதாரண நிலையில் துன்பப்படும் ஒருவருக்கு உதவும்போது இயேசுவிற்கே செய்கிறோம் என்பது நற்செய்தியிலிருந்து தெளிவாகிறது. ஆண்டவரின் நன்மதிப்பைப் பெற நாம் பெரிய காரியங்களில்தான் ஈடுபட வேண்டுமென்பதல்ல. சிறப்பு அழைப்பு பெற்று நாடுவிட்டு நாடு சென்று, பொதுநலச் சேவைகள் ஆரம்பித்து, கல்வி நிறுவனங்கள் உருவாக்கி பணிசெய்கின்றவர்களும் உண்டு. ஆனால் இவற்றையும் கடந்து மக்களின் மனங்களைத் தொடும் தூய உள்ளம் கொண்டவர்களாக அடுத்தவரில் இயேசுவைக் காணத் துடிக்க வேண்டும். இயேசு குறிப்பிடும் நல்லவர்கள் தாம் உதவி செய்தவர்களில் இயேசு இருக்கிறார் என்று அறியாமலேயே உதவிசெய்துள்ளார்கள்.

அதேபோல இயேசுவின் தண்டனையைப் பெற்றோர் அடுத்தவருக்கு உதவும் மனநிலை இல்லாமல் வாழ்ந்துள்ளனர். இவர்களது சுயநல வாழ்வு இவர்களுக்குத் தீங்காகவே முடிந்துள்ளது.

**அடுத்தவரில் இயேசு**

இன்று எம்மைச் சுற்றி பலர் இருந்தாலும் எமது தயவை நாடி வருவோருக்கு நாம் எவ்வாறு உதவுகிறோம்? நாம் எப்போதெல்லாம் அடுத்தவரில் இறைவனைக் காண்கின்றோமோ அப்போது அவர்களுக்கு நன்மை செய்யத் தூண்டப்படுவோம். அடுத்தவரில் இறைவனைக் கண்டு வாழ்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 24 – திங்கள் – கார்த்திகை 2008

திவெ 14: 1–5 திபா 24: 1–6 லூக் 21: 1–4

### மனநிலை

தூய உள்ளத்தோடு காணிக்கை செலுத்திய ஏழைக் கைம்பெண்ணின் செயலைப் பாராட்டினார் இயேசு. நற்செய்தியில் வரும் இப்பகுதி இன்று எம்மையும் சிந்திக்க வைக்கின்றது. எமது மனநிலையை ஆராய்ந்து பார்ப்போம்.

**செல்வர்கள்**

ஆலயத்தில் காணிக்கை செலுத்த வேண்டியது கடமை. யூதர்கள் இதைக் கடமையாக மட்டுமல்ல, பெருமையாகவும் கருதினார்கள். இயேசு அவதானிக்கிறார். செல்வர்கள் தமக்கு மிகுதியான செல்வத்திலிருந்து காணிக்கை போட்டார்கள். இவர்களுக்கு இந்த காணிக்கை குறைவாகத் தெரியவில்லை. ஏனெனில் நிறைவான செல்வத்தில் சிறுபகுதியை இவர்கள் செலுத்தினார்கள். ஆனால் மக்கள் தமது செயலைப் பார்த்து தம்மைப் பாராட்டுவார்கள் என்று எதிர்பார்த்து செயல்படுபவர்களும் உண்டு. பெருமை, பாராட்டு தேடுபவர்கள் இவர்கள்.

**ஏழைக் கைம்பெண்**

செல்வர்களது காணிக்கையோடு ஒப்பிடும்போது கைம்பெண்ணின் காணிக்கை மிகச் சிறியதே. ஆயினும் கைம்பெண்ணின் செயலை இயேசு பாராட்டினார். ஏன்? விளக்கம் இயேசுவே தருகின்றார். தமக்குப் பற்றாக்குறை இருந்தும், தம் பிழைப்புக்காக வைத்திருந்த அனைத்தையும் போட்டுவிட்டார் இவர். இது நிறைவான உள்ளம். கைம்பெண் என்றாலே அவர் பரிதாபத்துக்குரியவர். நற்செய்தியில் வரும் கைம்பெண் ஏழையாகவும் இருந்தார். எனவே இவர் அடுத்தவரை நம்பி வாழ்பவர். ஆயினும் கடவுளில் நம்பிக்கை வைத்து செயல்பட்டார். இயேசுவின் பாராட்டையும் பெற்றார்.

இறைவனுக்குக் காணிக்கை செலுத்துவது என்பது மனித வரலாற்றில் எல்லா கட்டங்களிலும் இருந்து வந்துள்ளது. காணிக்கையின் தன்மை மட்டும் காலத்துக்குக் காலம் மாறிவந்துள்ளது. பெருந்தொகை போட்டால் போதும் என்று நிறைவுகண்ட யூத சமூகத்திற்கு காணிக்கை போடுவதற்கான மனநிலையே முக்கியம் என்பதை இயேசு காட்டுகின்றார்.

நாமும் இன்று காணிக்கை செலுத்துகின்றோம். எந்த மனநிலையோடு காணிக்கை செலுத்துகின்றோம்? இயேசு இன்று வந்தால் எனது காணிக்கையைப் பாராட்டுவாரா? எமது மனநிலை பற்றித் தெளிவாக இருப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 25 – செவ்வாய் – கார்த்திகை 2008

திவெ 14: 14–20 திபா 96: 10–13 லூக் 21: 5–11

## கன்னியான அலெக்சாந்திரியாவின் தூய கதரின்

எருசலேம் கோவிலின் அழிவு பற்றி ஆண்டவர் இயேசு நற்செய்தியில் முன்னறிவிக்கிறார். வெளிச்சடங்குகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்த யூத சமூகம் மனமாற்றத்திற்கும் இறைவனை அடைவதற்கும் தேவையான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்பதை வலியுறுத்துகிறார் இயேசு. இயேசுவின் இந்த எச்சரிக்கை எம்மையும் சிந்திக்கத் தூண்டுகின்றது.

**கோவிலின் முக்கியத்துவம்**

எருசலேம் கோவிலின் முக்கியத்துவம் பற்றி கார்த்திகை 9ம் திகதிக்கான சிந்தனையில் அதிகம் பார்க்கிறோம். நற்செய்தியில் தமது கோவிலைப் பற்றி சிலர் பெருமையோடு பேசுகின்றனர். கவின்மிகு கற்கள், நேர்ச்சைப் பொருட்கள் போன்றவற்றால் அது அழகுபடுத்தப்பட்டுள்ளது என்றனர். உலகில் மிக முக்கியத்துவம் பெறக்கூடியதாக இந்தக் கோவில் அமைந்திருந்தது. பெருமைப் படக்கூடிய விடயமே. ஆனால் அதைவிட முக்கியமான பல விடயங்கள் உள்ளன என்பது இயேசுவின் செய்தி. எசாயா இறைவாக்கினர் மூலமாக மக்களின் வெளி ஆடம்பர செயல்கள் பற்றிய தனது சினத்தை கடவுள் வெளிப்படுத்தினார் (காண். எசா 1: 10–14). மக்களின் செயல்கள் ஆடம்பரங்களை இலக்காகக் கொண்டிராமல் இறைவனை தூய உள்ளத்தோடு அடையும் நோக்கமாக அமைந்திருக்க வேண்டும்.

**இயேசுவின் எச்சரிக்கை**

இயேசுவின் எச்சரிக்கை கடுமையானது. கோவிலிற்கு எதிராக ஒருவர் பேசினாலே அது தேவநிந்தனை என்று எண்ணிய அந்த சமூகத்திற்கு இக் கோவில் கல்லின் மேல் கல் இராதபடி இடிக்கப்படும் என்றார் இயேசு. இவ்வாறு ஆலயத்தைப் பற்றிய செய்தியோடு கடைசிநாட்கள் பற்றிய செய்தி தொடர்கின்றது. இறுதிக்கால அடையாளங்களை இயேசு குறிப்பிட்டார். அச்சுறுத்தக்கூடிய பெரிய அடையாளங்கள் நடைபெறும் என்றார். மக்கள் தமது தீய வாழ்விற்குத் தேடிக்கொள்ளும் விளைவே இது.

இன்று நாமும் கோவில் மற்றும் பல வெளிச்சடங்குகளுக்கு முன்னுரிமை கொடுத்து அதில் பெருமைப்படுவதுண்டு. ஆனால் அதைவிட முக்கியமான உளமாற்றத்தை மறந்துவிடுகின்றோம். எப்போதும் இறைவனை அடைவதை இலக்காகக் கொண்டு செயல்படுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 26 – புதன் – கார்த்திகை 2008

திவெ 15: 1–4 திபா 98: 1–3, 7–9 லூக் 21: 12–19

### துன்பம்

இறுதிக்காலத்தில் சீடர்கள் எதிர்கொள்ள வேண்டிய துன்பங்கள் பற்றிய செய்தியே இன்றைய நற்செய்தி. வெளி அடையாளங்களைக் குறிப்பிட்ட இயேசு இப்போது வரக்கூடிய துன்பங்கள் பற்றிக் குறிப்பிட்டார். ஆயினும் ஆண்டவரின் அருள், உதவி எப்போதும் சீடர்களை வழிநடத்தும் எனும் நம்பிக்கையையும் தருகின்றார். இயேசுவிற்காக துன்பங்கள் அனுபவிக்கவும் தயாராக வாசகம் எம்மை அழைக்கின்றது.

**உலகில் துன்பம்**

மனிதருக்குத் துன்பங்கள் இயற்கை அழிவுகளின் மூலமாகவோ மனிதர் மூலமாகவோ வரலாம். எல்லாவகைத் துன்பங்களையும் நாம் வெற்றி கொள்ள வேண்டும் என்று சிந்திக்கின்ற உலகமிது. இன்றைய மனநிலை அதைவிட துயரமானது. அதாவது துன்பத்தை அழிப்போம் அல்லது துன்பப்படுபவரை ஒழிப்போம் என்று சிந்திக்கத் தொடங்கிவிட்டது இன்றைய சமூகம். இதன் விளைவே கருணைக்கொலை போன்ற பாரிய முடிவுகள். எனவே துன்பத்தை முற்றுமுழுதாகத் தீயதாகவே பார்க்கின்றது உலகம். ஆனால் இயேசு இந்த சிந்தனையிலிருந்து மாறுபட்ட சிந்தனையைத் தருகின்றார்.

**கிறிஸ்தவத்தில் துன்பம்**

எனக்காகத் துன்புறுவீர்கள் என்றார் இயேசு. இந்தத் துன்பத்தால் இரண்டு முக்கிய விளைவுகள் ஏற்படுகின்றன எனலாம்.

1. ***சான்று பகர சந்தர்ப்பம்:*** இயேசுவின் சீடர்கள் என்பதற்காக வரக்கூடிய பல துன்பங்கள் பற்றி இயேசு குறிப்பிட்டாலும் அதை ஆண்டவர் அடுத்தவர்க்கு நன்மையாக மாற்றுவார் என்பதையும் அறிவிக்கின்றார். துன்புறுத்துவார்கள், சிறையில் அடைப்பார்கள், காட்டிக்கொடுப்பார்கள், வெறுப்பார்கள் என்றார் இயேசு. இவற்றின் மத்தியில் சீடர்கள் சான்றுபகர வேண்டும்.

2. ***இறைவனை அடைதல்:*** இந்தத் துன்பங்களின் மத்தியிலும் மன உறுதி யோடு இருந்து இறைவனின் வழிகாட்டலை உணரவேண்டும். துன்பங்கள் இறைவனை அனுபவிக்க எமக்குத் தரப்பட்டுள்ள கொடையே.

எம் வாழ்வில் துன்பங்கள் பல கோணங்களிலிருந்தும் வருகின்றன. சிலவற்றை நாம் தவிர்க்கவும் முடியாது. கடவுளையே நாம் கடைசியாக நாடிச் செல்கின்றோம். துன்பங்களில் இறைவழிகாட்டலை உணர்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 27 – வியாழன் – கார்த்திகை 2008

*திவெ 18: 1–2, 21–23, 19: 1–3, 9   திபா 100: 1–5   லூக் 21: 20–28*

## ஆயத்தம்

எருசலேமின் அழிவுபற்றிய தனது போதனையில் கடவுளுக்கு எதிராக செயல்படுபவர்களுக்கு வரக்கூடியவை பற்றி எச்சரிக்கின்றார் இயேசு. இவை மனுமகனின் இரண்டாம் வருகைக்கான அடையாளம் எனும் நம்பிக்கையையும் இயேசு தருகின்றார். நாம் எப்போதும் எமது மீட்புக்காக ஆயத்தமாக இருக்கின்றோமா என்பதை எண்ணிப்பார்க்க வாசகம் எம்மை அழைக்கின்றது.

### எருசலேமின் அழிவு

பிற இனத்தாரின் காலம் பாபிலோனியரால் எருசலேம் அழிவோடும் (கி.மு. 586) யூதர்களின் அடிமைத்தனத்தோடும் ஆரம்பமானது. அன்றிலிருந்து இஸ்ரயேல் அந்நியரால் ஆட்சிசெய்யப்பட்டது. இயேசுவின் காலத்தில் உரோமையர் ஆட்சிசெய்தனர். இயேசுவிற்குப் பின்பு கி.பி. 70ல் எருசலேம் நகர் மீண்டும் அழிந்தது. இவ்வாறு இறைவன் மக்களை மீட்கத் தீர்மானிக்கும் வரை பிறஇனத்தவரின் காலம் தொடரும். கிறிஸ்தவர்களும் துன்புறுத்தப்படுவர்.

### கிறிஸ்தவர்களின் வெற்றி

இயற்கை அழிவுகளும், கிறிஸ்தவர்களின் துன்பங்களும் தெளிவற்ற நிலையில் இருந்தாலும் அவை கிறிஸ்தவர்க்கு பெரும் துயராகவோ குழப்பமாகவோ இராமல் பெருமகிழ்ச்சியின் தொடக்கமாக உள்ளன எனலாம். இவற்றையெல்லாம் காணும் விசுவாசிகள் மெசியாவின் இரண்டாம் வருகை அண்மையில் உள்ளது என்பதை எண்ணி மேலும் தம்மை அவரது வருகைக்காக ஆயத்தம் செய்வர். ஏனெனில் மெசியாவின் வருகை நீதியின், அமைதியின் ஆட்சியை உருவாக்கும். இதை எதிர்பார்த்து சீடர்கள் மகிழ்வர். இதுவே கிறிஸ்தவர்களின் வெற்றி.

இந்த வெற்றிக்கு நாம் தகுதியுள்ளவர்களா? ஆண்டவரின் இரண்டாம் வருகை எப்போது இருக்கும் என்பது முக்கியமல்ல. அதேபோல உலகம் தரும் துன்பங்கள், நாம் காணும் அழிவுகள் எமக்கு அடையாளங்களாக இருந்தாலும் இரண்டாம் வருகைக்காக நாம் ஆயத்தமில்லை என்றால் எமக்கு அதனால் நன்மையென்ன? எனவே நாம் ஆயத்தமாக இருக்கின்றோமா என்பதே எமது கேள்வியாக இருக்க வேண்டும். அல்லது மெசியாவின் இரண்டாம் வருகை எமக்கு மகிழ்ச்சிமிக்க ஒன்றாக அமையாது. எனவே ஆண்டவரின் வருகைக்காக எப்போதும் ஆயத்தமாயிருப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திவெ 20: 1–4, 11–21: 2 திபா 84: 2–7 லூக் 21: 29–33

## இறைவாக்கு

அடையாளங்களும் அறிகுறிகளும் தொடர்கின்றன. இதற்கு அத்திமரத்தில் காலத்திற்குக் காலம் ஏற்படும் மாற்றங்களை குறிப்பிட்ட ஆண்டவர் தனது வாக்கு எப்போதும் பொய்க்காது என்பதையும் உறுதியாகக் கூறிவைத்தார். உண்மையை அறிந்து நாம் எம்மை ஆயத்தம் செய்ய அழைக்கிறது வாசகம்.

**அடையாளங்கள்**

ஒரு மரத்தில் ஏற்படுகின்ற மாற்றங்களைக் கொண்டு காலத்தின் மாற்றங் களை அறிந்திருந்தது மனித இனம். அதேபோல உலகில் ஏற்படுகின்ற மாற்றங்கள், அடையாளங்களை வைத்து இரண்டாம் வருகைக்கான உண்மையை மக்கள் உணர்ந்துகொள்ள வேண்டும். இவ்வாறு இறையாட்சியே இறுதியில் நிலைக்கும் என்பதையும் நாம் உணர்ந்துகொள்ளலாம். இயேசுவின் வருகையோடு இறையாட்சியின் செயல்பாடுகள் தொடங்கிவிட்டன. அலகை முழுமையாக அழிக்கப்பட வேண்டும்.

இந்த அறிகுறிகள் இயற்கையின் அழிவுகளாக அல்லது மனிதர் முன்னெடுக்கும் அழிவுகளாக இருக்கலாம். அதேபோல ஒவ்வொருவருக்கும் ஆண்டவர் தனிப்பட்ட முறையிலும் அடையாளங்களைக் காட்டுகின்றார். தனித்துவ வாழ்வில் நடைபெறும் சம்பவங்கள், அனுபவங்கள் மூலமாக ஆண்டவர் தன் விசுவாசிகளுக்கு தன் செய்திகளைக் கொடுத்து அவர்களை வழிநடத்துகின்றார்.

**ஆண்டவரின் வாக்கு**

ஆண்டவர் வாக்கு தவறாதவர் என்பது உண்மை. அவரது வாக்கு உயிருள்ளது, ஆற்றல் வாய்ந்தது (காண். எபி 4: 12). தொடக்க முதல் இறைவன் தனது வாக்கால் அனைத்தையும் நிறைவேற்றினார். படைப்பு தொடக்கம் மீட்பு வரை இறைவன் தனது சக்தியை வெளிப்படுத்தியுள்ளார். ஆண்டவரின் வாக்கின் வலிமை பற்றி எசாயாயும் தனது நூலில் குறிப்பிட்டார் (காண். எசா 5: 10–11).

இன்றைய காலங்களிலும் நாம் பொதுவான, தனிப்பட்ட பல அறி–குறிகளைக் காண்கிறோம். இவற்றைக் கண்டு நாம் கலங்காமல், குழம்பாமல் அவற்றிலிருந்து இறைவனின் செய்திகளைக் கண்டு எமது வாழ்வை சீர்செய்வோம். அதுவே முக்கியமானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 29 – சனி – கார்த்திகை 2008

திவெ 22: 1–7 திபா 95: 1–7 லூக் 21: 34–36

### விழிப்பு

திருவழிபாட்டு ஆண்டின் இறுதிநாள் இன்று. நாளைமுதல் புதிய திருவழிபாட்டு ஆண்டு ஆரம்பமாகின்றது. திருவருகைக்காலம் பற்றி வரவிருக்கும் வாரங்களில் சிந்திக்க இருக்கின்றோம். அதற்கான ஓர் ஆயத்த மாகவே இந்த வாரம் முழுவதும் தரப்பட்ட வாசகங்கள் அமைந்திருக்கின்றன. மானிடமகனின் வருகையும் அதற்கான விழிப்பும் பற்றி இயேசு இன்றைய நற்செய்தியில் குறிப்பிடுகின்றார். நாம் ஆயத்தமா என்று சிந்திப்போம்.

**மானிடமகனின் வருகை**

உலக முடிவு, இறுதித் தீர்ப்பு, மானிடமகனின் வருகை அனைத்தும் ஒரே நேரத்தில் நடைபெற இருக்கின்ற சம்பவங்கள். இயேசுவின் முதல் வருகையை மக்கள் எதிர்பார்த்து இருந்தாலும் அவர் வந்தபோது பெரும்பாலான மக்கள் அவரை ஏற்று தமது வாழ்வை மாற்றவில்லை. அவரது இரண்டாம் வருகையின் போதும் மக்கள் இதுபோன்ற மனநிலையோடு இருக்காமல் ஆயத்தமாக இருக்க வேண்டும் என்று இயேசு மக்களுக்கு எச்சரிக்கின்றார். இறுதி நாட்களில் நடைபெறக்கூடிய அடையாளங்களையும் அவர் சொல்லி வைத்தார். இந்த வாரம் முழுவதும் அமைந்த நற்செய்தியில் வரவிருக்கும் அடையாளங்களை வாசித்தோம். அடையாளங்களைவிட எமது ஆயத்தமே அவசியமானது.

**விழிப்பாயிருப்போம்**

நோவாவின் காலம் லோத்தின் காலம் என்று பல சந்தர்ப்பங்களில் மக்கள் விழிப்போடு இருக்காமல் தீய வாழ்வு வாழ்ந்தனர். எனவே அவர்கள் தண்டிக்கப்பட்டனர். இன்று நாமும் இந்த நிலைக்கு தள்ளப்படாமல் விழிப்பாக இருப்போம். அலகை எமக்கு உலக இன்பங்களைக் காட்டி ஏமாற்றாதபடி நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். விழிப்பு என்பது ஆண்டவர் வருவார் என்று செயல்படாமல் இருப்பதில்லை. அடுத்தவர் அலகையின் கண்ணியில் விழாமல் நாம் அவர்களுக்கு உதவும்போது நாம் எமக்கும் ஆசீரைப் பெறு கிறோம். எமது நல்லெண்ணங்கள் செயல்வடிவம் பெறவேண்டும். செபம், தபம், நற்செயல்களில் நாம் ஈடுபட்டு அடுத்தவரையும் மனமாற்றத்திற்கு அழைத்து வருவோம். ஏனெனில் ஆண்டவரின் கூற்றுப்படி அந்தத் தீர்ப்பு நாள் அனைவர்மீதும் வந்தே தீரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொது விவிலிய நூல்களின் பெயர்களும் சுருக்கக் குறியீடுகளும்

## *பழைய ஏற்பாடு*

| புதிய பெயர்கள் | பழைய பெயர்கள் | சுருக்கக் குறியீடு |
|---|---|---|
| 1. தொடக்க நூல் | ஆதியாகமம் | தொநூ |
| 2. விடுதலைப் பயணம் | யாத்திராகமம் | விப |
| 3. லேவியர் | லேவியராகமம் | லேவி |
| 4. எண்ணிக்கை | எண்ணாகமம் | எண் |
| 5. இணைச்சட்டம் | உபாகமம் | இச |
| 6. யோசுவா | யோசுவா | யோசு |
| 7. நீதித்தலைவர்கள் | நீதிபதிகள் | நீத |
| 8. ரூத்து | ரூத் | ரூத் |
| 9. 1 சாமுவேல் | 1 சாமுவேல் | 1சாமு |
| 10. 2 சாமுவேல் | 2 சாமுவேல் | 2சாமு |
| 11. 1 அரசர்கள் | 1 அரசர்கள் | 1அர |
| 12. 2 அரசர்கள் | 2 அரசர்கள் | 2அர |
| 13. 1 குறிப்பேடு | 1 நாளாகமம் | 1குறி |
| 14. 2 குறிப்பேடு | 2 நாளாகமம் | 2குறி |
| 15. எஸ்ரா | எஸ்ரா | எஸ் |
| 16. நெகேமியா | நெகேமியா | நெகே |
| 17. எஸ்தர் | எஸ்தர் | எஸ் |
| 18. யோபு | யோபு | யோபு |
| 19. திருப்பாடல்கள் | சங்கீதங்கள் | திபா |
| 20. நீதிமொழிகள் | பழமொழி ஆகமம் | நீமொ |
| 21. சபை உரையாளர் | சங்கத் திருவுரை | சஉ |
| 22. இனிமைமிகு பாடல் | உன்னத சங்கீதம் | இபா |
| 23. எசாயா | இசையாஸ் | எசா |
| 24. எரேமியா | எரேமியாஸ் | எரே |
| 25. புலம்பல் | புலம்பல் | புல |
| 26. எசேக்கியேல் | எசேக்கியேல் | எசே |
| 27. தானியேல் | தானியேல் | தானி |
| 28. ஓசேயா | ஓசே | ஓசே |
| 29. யோவேல் | யோவேல் | யோவே |
| 30. ஆமோஸ் | ஆமோஸ் | ஆமோ |
| 31. ஒபதியா | அப்தியாஸ் | ஒப |
| 32. யோனா | யோனாஸ் | யோனா |
| 33. மீக்கா | மிக்கேயாஸ் | மீக் |
| 34. நாகூம் | நாகும் | நாகூ |
| 35. அபக்கூக்கு | அபாக்கூக் | அப |
| 36. செப்பனியா | செப்போனியாஸ் | செப் |
| 37. ஆகாய் | --- | ஆகா |
| 38. செக்கரியா | சக்கரியாஸ் | செக் |
| 39. மலாக்கி | மலாக்கியா | மலா |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இணைத் திருமுறை நூல்கள்

| | | |
|---|---|---|
| 1. தோபித்து | தொபியாசு ஆகமம் | தோபி |
| 2. யூதித்து | யூதித் | யூதி |
| 3. எஸ்தர் | --- | எஸ் (கி) |
| 4. சாலமோனின் ஞானம் | ஞானாகமம் | சாஞா |
| 5. சீராக்கின் ஞானம் | சீராக் ஆகமம் | சீஞா |
| 6. பாரூக்கு | பாரூக் | பாரூ |
| 7. தானியேல் இணைப்புகள் | --- | தானி (இ) |
| 8. 1 மக்கபேயர் | 1 மக்கபே ஆகமம் | 1மக் |
| 9. 2 மக்கபேயர் | 2 மக்கபே ஆகமம் | 2மக் |

## புதிய ஏற்பாடு

| புதிய பெயர்கள் | பழைய பெயர்கள் | சுருக்கக் குறியீடு |
|---|---|---|
| 1. மத்தேயு நற்செய்தி | மத்தேயு | மத் |
| 2. மாற்கு நற்செய்தி | மாற்கு | மாற் |
| 3. லூக்கா நற்செய்தி | லூக்காஸ் | லூக் |
| 4. யோவான் நற்செய்தி | அருளப்பர் | யோவா |
| 5. திருத்தூதர் பணி | அப்போஸ்தலர் பணி | திப |
| 6. உரோமையர் | உரோமையர் | உரோ |
| 7. 1 கொரிந்தியர் | 1 கொரிந்தியர் | 1கொரி |
| 8. 1 கொரிந்தியர் | 2 கொரிந்தியர் | 2கொரி |
| 9. கலாத்தியர் | கலாத்தியர் | கலா |
| 10. எபேசியர் | எபேசியர் | எபே |
| 11. பிலிப்பியர் | பிலிப்பியர் | பிலி |
| 12. கொலோசையர் | கொலோசேயர் | கொலோ |
| 13. 1 தெசலோனிக்கர் | 1 தெசலோனிக்கேயர் | 1தெச |
| 14. 2 தெசலோனிக்கர் | 2 தெசலோனிக்கேயர் | 2தெச |
| 15. 1 திமொத்தேயு | 1 தீமோத்தேயு | 1திமொ |
| 16. 2 திமொத்தேயு | 2 தீமோத்தேயு | 2திமொ |
| 17. தீத்து | தீத்து | தீத் |
| 18. பிலமோன் | பிலமோன் | பில |
| 19. எபிரேயர் | எபிரேயர் | எபி |
| 20. யாக்கோபு | யாகப்பர் | யாக் |
| 21. 1 பேதுரு | 1 இராயப்பர் | 1பேது |
| 22. 2 பேதுரு | 2 இராயப்பர் | 2பேது |
| 23. 1 யோவான் | 1 அருளப்பர் | 1யோவா |
| 24. 2 யோவான் | 2 அருளப்பர் | 2யோவா |
| 25. 3 யோவான் | 3 அருளப்பர் | 3யோவா |
| 26. யூதா | யூதா | யூதா |
| 27. திருவெளிப்பாடு | திருவெளிப்பாடு | திவெ |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நற்செய்திகளும் அவை பாவிக்கப்பட்டுள்ள தினங்களும்

## புரட்டாதி

| திகதி | மத்தேயு | மாற்கு | லூக்கா | யோவான் |
|---|---|---|---|---|
| 01 | – | – | 4: 16–30 | – |
| 02 | – | – | 4: 31–37 | – |
| 03 | – | – | 4: 38–44 | – |
| 04 | – | – | 5: 1–11 | – |
| 05 | – | – | 5: 33–39 | – |
| 06 | – | – | 6: 1–5 | – |
| 07 | 18: 15–20 | – | – | – |
| 08 | 1: 1–16, 18–23 | – | – | – |
| 09 | – | – | 6: 12–19 | – |
| 10 | – | – | 6: 20–26 | – |
| 11 | – | – | 6: 27–38 | – |
| 12 | – | – | 6: 39–42 | – |
| 13 | – | – | 6: 43–49 | – |
| 14 | – | – | – | 3: 13–17 |
| 15 | – | – | – | 19: 25– |
| 27 | | | | |
| 16 | – | – | 7: 11–17 | – |
| 17 | – | – | 7: 31–35 | – |
| 18 | – | – | 7: 36–50 | – |
| 19 | – | – | 8: 1–3 | – |
| 20 | – | – | 8: 4–15 | – |
| 21 | 20: 1–16 | – | – | – |
| 22 | – | – | 8: 16–18 | – |
| 23 | – | – | 8: 19–21 | – |
| 24 | – | – | 9: 1–6 | – |
| 25 | – | – | 9: 7–9 | – |
| 26 | – | – | 9: 18–22 | – |
| 27 | – | – | 9: 43–45 | – |
| 28 | 21: 28–32 | – | – | – |
| 29 | – | – | – | 1: 47–51 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நற்செய்திகளும் அவை பாவிக்கப்பட்டுள்ள தினங்களும்

### ஐப்பசி

| திகதி | மத்தேயு | மாற்கு | லூக்கா | யோவான் |
|---|---|---|---|---|
| 01 | 18: 1–5 | – | – | – |
| 02 | 18: 1–5, 10 | – | – | – |
| 03 | – | – | 10: 13–16 | – |
| 04 | – | – | 10: 17–24 | – |
| 05 | 21: 33–43 | – | – | – |
| 06 | – | – | 10: 25–37 | – |
| 07 | – | – | 1: 26–38 | – |
| 08 | – | – | 11: 1–4 | – |
| 09 | – | – | 11: 5–13 | – |
| 10 | – | – | 11: 15–26 | – |
| 11 | – | – | 11: 27–28 | – |
| 12 | 22: 1–14 | – | – | – |
| 13 | – | – | 11: 29–32 | – |
| 14 | – | – | 11: 37–41 | – |
| 15 | – | – | 11: 42–46 | – |
| 16 | – | – | 11: 47–54 | – |
| 17 | – | – | 12: 1–7 | – |
| 18 | – | – | 10: 1–9 | – |
| 19 | 22: 15–21 | – | – | – |
| 20 | – | – | 12: 13–21 | – |
| 21 | – | – | 12: 35–38 | – |
| 22 | – | – | 12: 39–48 | – |
| 23 | – | – | 12: 49–53 | – |
| 24 | – | – | 12: 54–59 | – |
| 25 | – | – | 13: 1–9 | – |
| 26 | 22: 34–40 | – | – | – |
| 27 | – | – | 13: 10–17 | – |
| 28 | – | – | 6: 12–19 | – |
| 29 | – | – | 13: 22–30 | – |
| 30 | – | – | 13: 31–35 | – |
| 31 | – | – | 14: 1–6 | – |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நற்செய்திகளும் அவை பாவிக்கப்பட்டுள்ள தினங்களும்

## கார்த்திகை

| திகதி | மத்தேயு | மாற்கு | லூக்கா | யோவான் |
|---|---|---|---|---|
| 01 | 5: 1–12 | – | – | – |
| 02 | 23: 1–12 | – | – | – |
| 03 | – | – | 14: 12–14 | – |
| 04 | – | – | 14: 15–24 | – |
| 05 | – | – | 14: 25–33 | – |
| 06 | – | – | 15: 1–10 | – |
| 07 | – | – | 16: 1–8 | – |
| 08 | – | – | 16: 9–15 | – |
| 09 | – | – | – | 2: 13–22 |
| 10 | – | – | 17: 1–6 | – |
| 11 | – | – | 17: 7–10 | – |
| 12 | – | – | 17: 11–19 | – |
| 13 | – | – | 17: 20–25 | – |
| 14 | – | – | 17: 26–37 | – |
| 15 | – | – | 18: 1–8 | – |
| 16 | 25: 14–30 | – | – | – |
| 17 | – | – | 18: 35–43 | – |
| 18 | – | – | 19: 1–10 | – |
| 19 | – | – | 19: 11–28 | – |
| 20 | – | – | 19: 41–44 | – |
| 21 | 12: 46–50 | – | – | – |
| 22 | – | – | 20: 27–40 | – |
| 23 | 25: 31–46 | – | – | – |
| 24 | – | – | 21: 1–4 | – |
| 25 | – | – | 21: 5–11 | – |
| 26 | – | – | 21: 12–19 | – |
| 27 | – | – | 21: 20–28 | – |
| 28 | – | – | 21: 29–33 | – |
| 29 | – | – | 21: 34–36 | – |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தலைப்புகளும்,
## அவை கொடுக்கப்பட்டுள்ள திகதிகளும்


அதிகாரம் புர 2,
நோன்பு புர 5,
சிலுவை புர 14,
இறைசித்தம் புர 21,
நற்பயன் புர 13,
மன்னிப்பு புர 18,
மகிழ்ச்சி ஐப் 4,
செபம் ஐப் 8,
மீட்பு ஐப் 12,29,
பேராசை ஐப் 20,
அடையாளம் ஐப் 24,
முன்மதி கார் 7,
கோவில் கார் 9,25,
பார்வை கார் 17,
துன்பம் கார் 26,

பணி புர 3,19,24,
போதனை புர 10,
உண்மை புர 17,
ஒளி புர 22,
இறையாட்சி 13,
உறவு புர 23,
நீதி புர 28,
இறைசக்தி ஐப் 10,
வெளிவேடம் ஐப் 14,15,16,
அமைதி ஐப் 23,
ஏழைகள் கார் 3,
நேர்மை கார் 8,
நன்றி கார் 12,
உயிர்ப்பு கார் 22,

மனநிலை புர 1,30, கார் 24,
நம்பிக்கை புர 4, ஐப் 9,
ஓய்வுநாள் புர 6, ஐப் 31,
அன்பு புர 7,11,12, ஐப் 6,26,27,
இரக்கம் புர 11,16, கார் 1,6,15,
இறைவாக்கு புர 20, கார் 28,
தாழ்ச்சி ஐப் 1,2, கார் 11,
மனமாற்றம் ஐப் 3,13,25,30, கார் 18,
வாழ்வு ஐப் 5,11, கார் 2,16,
சான்று ஐப் 17,18, கார் 10,
விழிப்பு ஐப் 21, கார் 20,29,
ஆயத்தம் ஐப் 22, கார் 14,19,27,
மரியா புர 8,15, ஐப் 7, கார் 21,
அழைப்பு புர 9, ஐப் 28, கார் 4,5,
இயேசு புர 25,26,27,29, ஐப் 19, கார் 23,




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org